விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (13.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 176

## அறிக்கை ஐ.நாவில் சமர்ப்பிப்பு

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி மொனிக்கா பின்டோ 04

## ஞானசாரருக்கு சம்பிக்க உதவி

(கொழும்பு)

நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள 04

## 6 நாடுகளில் கவனயீர்ப்பு




(பிரிட்டன்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு வலுசேர்க்கும் முகமாக புலம்பெயர் தமிழர்களால் ஆறு நாடுகளில் ஒருங்கிணைந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய உறவுகளுடைய போராட் 23

## சீனி விலை ரூ. 102 ஆக உயர்வு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் சீனிக்கு 10 ரூபாய் வரி விதிக்கப்பட்டாலும் சீனிக்கான சந்தையிலுள்ள சில்லறை விலை அதற்கு சமனாக அதிகரிக்கவில்லையென சீனி இறக்குமதியாளர்கள் சங்கம் நுகர்வோருக்கு அதிகார 04

## விக்னேஸ்வரனை கைது செய்; அரசை வலியுறுத்தும் கோத்தா

(கொழும்பு)

வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் தலைவர்களை மோசமான இனவாதிகளாக மீண்டும் அடையாளப்படுத்தியுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவர்களைக் கைது செய்யுமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண் 23

## ஞானசாரருக்கு விரைவில் பிடிவிறாந்து பிறப்பிப்பு!

(கொழும்பு)

பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு தேடப்பட்டுவரும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் அடுத்தகட்ட விசாரணையில் முன்னிலையாகாவிட்டால் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது 04

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன?

## ஆராய இன்று உத்தரவிடுவதாக உறவுகளிடம் ஜனாதிபதி உறுதி



(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்து என்பதை ஆராயுமாறு இன்று நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் உத்தரவிடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் உறுதியளித்துள்ளார். இவற்றோடு இறுதிப் போரில் சரணடைந்தோர் மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் பெயர் பட்டியலையும் வெளியிடுமாறும் தான் கட்டளையிடுவதாக கூறியுள்ள ஜனாதிபதி, குறித்த பெயர் பட்டியல் எப்போது வெளியிடப்படும் என்பதை தன்னால் தற்போது கூற முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## வாகன விபத்து; குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

மகளை தனியார் வகுப்பில் இருந்து வீட்டிற்கு அழைப்பதற்காக சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தந்தையை பின்னால் வந்த மோட்டார் 04

## இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது. 23

## ஹயஸ் - பிக்கப் மோதி விபத்து

(பளை)

பளை புதுக்காட்டில் நேற்று இரவு 8.45 மணியளவில் இரு வாகனங்கள் மோதுண்டு 04

### விசாரணை அறிக்கை குறித்து

## தமிழரசுக்கட்சி தலையிட இரு அமைச்சர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை விடயத்தின் தொடர் நடவடிக்கையில் இலங்கை தமிழரசு கட்சி தலையிட வேண்டும் என கல்வி அமைச்சர் குருகுலராஜா, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோர் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடம் கோரியுள்ளனர்.

இந்த கோரிக்கையை நேற்றைய தினம் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்திற்கு நேரில் சென்று அவர்கள் விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான விசாரணை 23

## பாரிய நட்டம்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய முறிகள் கொடுக்கல் வாங்கல் மூலம் இலங்கைக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயம் நேற்று ஜனாதிபதி 04

## விசாரணைகுழு அறிக்கையில் தவறுகள் காணப்படுகின்றது!

### உறுப்பினர் பசுபதிப்பிள்ளை சுட்டிக்காட்டு



(புலோப்பளை)

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான விசாரணை குழுவின் அறிக்கைப் பரிந்துரைகளில் தவறுகள் காணப்படுவதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அரியரத்தினம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சியின் வருடாந்த மாநாடும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் பளை 04

### மூதூர் பாலியல் வன்முறை

## கைதான அறுவரும் பிணையில் விடுவிப்பு

(மூதூர்)

திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் மூன்று பள்ளி மாணவிகள் பாலியல் வன்முறைக்குள்ளானதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக கைதான 6 சந்தேக நபர்களும் நிபந்தனைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 29-ம் திகதி அந்த பிரதேசத்திலுள்ள அரசு தமிழ் பாடசாலையொன்றில் ஞாயிற்றுகிழமைகளில் நடைபெறும் 24

## காணிகளை மக்களிடம் வழங்க நடவடிக்கை!

### ஜனாதிபதியிடம் – த.தே.கூ கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட கிழக்கு மாகாணங்களில் படையினர்வசம் உள்ள காணிகளை மக்களிடம் மீள வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரியிருப்பதாக கூறியிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா. வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் சுகாதார தொண்டர்களின் நியமனம், மணல் விநியோகம் என்பவற்றிற்கு விரைவான பதில் தருவதாக ஜனாதிபதி 24

### வித்தியா # வழக்கு # நீதாய # விசாரணை

## 9 எதிரிகள் மீதும் 41 குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுபாடசாலைமாணவி வித்தியாவின் படுகொலையுடன் தொடர்புடைய எதிரிகள் ஒன்பது பேருக்கும் எதிராக 41 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, நீதாய விளக்க முறையிலான (ட்ரயல் அட்பார்) விசாரணைகள் நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கின் நீதாய விளக்க (ட்ரயல் அட்பார்) விசாரணைகள், வவு 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஜனாதிபதியின் யாழ்.விஜயம்
# ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் வட மாகாண ஆளுநர் அலுவலகம் போன்றவற்றில் ஜனாதிபதி கலந்து கொண்ட கலந்துரையாடல்களில் செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து அனுமதி மறுக்கப்பட்டமைக்கான காரணம் இறுதி வரையில் தெரிவிக்கப்பட்டிருக்காத நிலையில் ஊடகவியலாளர்கள் வீதியிலேயே நிறுத்தப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்திற்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மத்திய அமைச்சர்கள் சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் யாழ்.மாவட்ட செயலகத்தில் கூடி மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மாவட்டத்திலுள்ள வேலைவாய்ப்பு பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த கலந்துரையாடல் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

இது தொடர்பாக முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தபோதும் ஊடகவியலாளர்கள் மாவட்ட செயலகத்திற்கு சென்றிருந்தனர்.

எனினும் முன்னர் அறிவிக்கப்பட்டதை போல் ஊடகவியலாளர்கள் உள்ளே செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. மேலும் ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலுக்கும் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதுடன் வீதியிலேயே ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களினால் மறிக்கப்பட்டனர்.

எனினும் எதற்காக இந்த அனுமதி மறுக்கப்பட்டது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும் ஜனாதிபதி கலந்து கொண்ட கலந்துரையாடல்களில்,

அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகளும் நடைமுறை பிரச்சினைகளுமே பேசப்பட்டுள்ளதாக கலந்துரையாடலில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்நிலையில் அபிவிருத்தி விடயங்கள் பேசப்படும் கலந்துரையாடல்களுக்கு வழக்கமாக ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படுகின்ற போதிலும் நேற்றைய நிகழ்வுகளில் அனுமதி மறுக்கப்பட்டமை விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (செ-4)

## அமைச்சரவை மாற்றம்
# பிரதமரின் முடிவுகளில் ஜனாதிபதிக்கு மகிழ்வில்லை
## – எஸ்.பி

(கண்டி)

அமைச்சர்களின் மாற்றம் தொடர்பில் தீர்மானம் எடுப்பது பிரதமரானாலும் அது தொடர்பில் ஜனாதிபதி மகிழ்ச்சியான இடத்தில் இல்லை என சமூக ஊக்குவிப்பு நலனோன்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற வைபவத்தில் இவ்வாறு கூறிய அமைச்சர், அதில் தான் பொருத்தமற்ற இடத்தில் இருப்பதாக தனிப்பட்ட முறையில் சிந்திப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கான திகதியினை தீர்மானிப்பது சம்பந்தமாக அரசின் பக்கத்தில் தேவையான நடவடிக்கைகளை இரண்டு வாரங்களில் தயார்படுத்துவதற்கான பொறுப்பை தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்படும் என அமைச்சர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வித பேதமின்றி சகல தீர்மானங்களும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதோடு அதுவிடயமாக ஜனாதிபதியுடன் ராஜபக்ஷ குடும்பம் மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை சேர்ந்த அநேக உறுப்பினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் நடவடிக்கை சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், எஸ்.பி. திஸாநாயக்க இவ்விடயத்தை அவ்வளவாக தலைக்கு எடுக்க வேண்டியதில்லை எனவும் கூறினார். (செ)

# நாட்டின் காட்டுப் பகுதிகளில் வாகனங்களுக்கு வேகத் தடை

நாட்டின் காடுகள் மத்தியில் அமைந்துள்ள பாதைகளில் அதிவேகமாக வாகனங்களை செலுத்துவதை தடை செய்யும் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாக வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

பாதுகாக்கப்பட்டுவரும் காடுகள் மத்தியில் அமைந்துள்ள பாதைகளில் சிலர் மிக கவனக்குறைவான முறையில் வேகமாக வாகனங்களை ஓட்டி வருவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறான வாகனங்கள் மோதியதன் காரணமாக, யானைகள் உள்ளிட்ட பல வனவிலங்குகள் கொல்லப்பட்ட சம்பவங்கள் கடந்த காலத்தில் அதிக அளவில் பதிவாகியதாகவும் தெரிவித்த அவர்,

இப்பாதைகளில் மணிக்கு 50 கிலோமீற்றர் வரை மட்டுப்படுத்தப்பட்ட வேகத்தில் வாகனங்களை செலுத்தக்கூடிய வகையில் புதிய சட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அதேபோன்று இந்த சட்டத்தை மீறுபவர்களை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய புதிய திட்டமொன்றை நடைமுறைபடுத்தவுள்ளதாகவும் அமைச்சர் ஜெயவிக்ரம பெரேரா மேலும் தெரிவித்தார். (செ-11)

# முன்னாள் அமைச்சருக்கு நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பியங்கர ஜயத்ன மற்றும் அவரது தனிப்பட்ட செயலாளரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது

பொது வான் சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபையில் ஊழல் மோசடி மேற்கொண்டமை மற்றும் பதவிக்காக தனிப்பட்ட செயலாளரை நியமித்தமை உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுகளின் கீழ் இவருக்கு எதிராக, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கை தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


## வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்கள் விண்ணப்பங்களை 20.06.2017க்கு முன்பதாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பாடங்கள்

விஞ்ஞானம், ஆங்கிலம், புவியியல், கணிதம், கணினி இயக்குநர்

குறிப்பு:

- ✦ ஆறுமாத காலத்திற்கு தகுதிகாண் காலத்துள் வைக்கப்படுவர் அதன் பின்பே நிரந்தரமாக்கப்படுவர்.
- ✦ இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
- ✦ உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- ✦ சம்பளம்

இரண்டாம் வகுப்பு உயர் சித்தி ரூபா 22000
சாதாரண சித்தி ரூபா 18000மும் மாதாந்தம் வழங்கப்படும்.

கணினி இயக்குநர்களுக்கு பட்டதாரி / டிப்ளோமா போதுமானது

- சாரதிகளுக்கான விண்ணப்பம்
  பேருந்துச் சாரதி :

1. சகல வாகனங்களும் செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் (Heavy Vehicle License-AD வகை) கொண்டிருத்தல்
2. மலைநாடு, கண்டி, கொழும்பு உட்பட இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலும் பஸ் உட்பட கனரக வாகனம் செலுத்தக்கூடிய அனுபவமும் சேவை மனப்பான்மையும்.
3. இல்லத்தில் தங்கியிருந்து இல்லத் தேவைகளுக்கு பேருந்தை ஓடக்கூடியவர்.
4. 25 - 60 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
5. பேருந்தை செலுத்துவதில் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.
6. மதுபோதைப் பாவனை அற்றவராக இருத்தல் வேண்டும்.
7. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப் பத்திரங்களின் நிழற் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கிராமசேவையாளர் உதவி அரச அதிபர் குணநல நற்சான்றிதழ் வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

தி. இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல: 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி : rasa46@yahoo.com

(C-8789)



## மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு

சிறிது காலம் மட்டுமே பாவித்த் நல்ல நிலையிலுள்ள NP-BBO XXXX இலக்க MAHINDRA CENTURO மோட்டார் சைக்கிள் அதன் கொள்முதல் பெறுமதியின் 1/2 விலைக்கு 125,000/=ற்கு விற்பனைக்கு உள்ளது. (9423)

தொடர்புகளுக்கு:
077 853 6808



## பிரிவு கேட்டு பெருந்துயர் அடைகின்றோம்



அமரர் **கிருஷ்ணமூர்த்தி**

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் அமைப்பாளராக இருந்து மன்றத்தை கட்டிக் காத்த பெருந்தகை **கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அடியேனை திருமுறைப் பணிக்குள் அமிழ்த்திவிட்ட அற்புத மனிதர் அவர். நாளும் பொழுதும் இரவும் பகலும் கனவிலும் நனவிலும் திருமுறை ஓதும் பணியை பணியாய் கொண்ட திருமுறை வல்லாளர். தான் ஓதுவதும் மட்டுமல்ல; திருமுறை வல்லாளர்களை பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று ஓதுவித்தும் தானும் கேட்டு மற்றவர்களையும் கேட்க வைக்கும் ஒரு பண்பாளர். அன்னாரது ஆன்மா தில்லைக் கூத்தன் திருவடிக்கீழ் நித்திய பரிபூரண பேரின்ப பெருவாழ்வில் திளைக்கும் என்பது திண்ணம்.

அகில இலங்கை திருமுறை மன்றம் (C-8790)

க.கு.க. சிவபாலன், பொருளாளர், அகில இலங்கை திருமுறை மன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விவகாரங்களில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீட்டுக்கு இடமில்லை



## இலங்கை அரசாங்கம் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிநாட்டுச் சக்திகள் தலையீடு செய்ய அனுமதியளிக்கப்படாது என வெளிவிவகார அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார். மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை மீது சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளுக்கு வெளிநாட்டு நீதிபதிகளையோ அல்லது கண்காணிப்பாளர்களையோ இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் பல்வேறு சர்வதேச நிபந்தனைகளுக்கு இணங்கியிருந்தது. இதனால் இலங்கை சர்வதேச ரீதியில் சில விடயங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சர்வதேசத்தின் இலக்காக மாறியிருந்த இலங்கையை அதிலிருந்து மீட்டெடுக்க அரசாங்கத்தினால் முடிந்தது. ஜனநாயகம் முக்கியமானது என கருதும் நாடாக இலங்கையை தற்போது சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும், நாட்டின்இறையாண்மை மிகவும் முதன்மையானது என்றே கருதுகின்றேன்.

மனித உரிமை மீறல் விசாரணைகளின் போது சர்வதேச நீதிபதிகள் கண்காணிப்பாளர்களின் பங்களிப்பு இருக்காது. நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படும் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கப் போவதில்லை என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-3)

## இலங்கை கடற்படை நிகழ்வுகளில் பாகிஸ்தான் கடற்படைத் தளபதி



பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் மொகமட் சகாவுல்லா இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அவரை இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, விமான நிலையத்தில் வரவேற்றார்.

பாகிஸ்தான் கடற்படைத் தளபதியுடன், அவரது முதன்மை செயலர் கொமடோர் ஜவாய்ட் இக்பால், பாகிஸ்தான் கடற்படை பயிற்சி அகடமியின் தளபதி கொமடோர் அட்னான் அகமட் ஆகியோரும் இலங்கை வந்துள்ளனர்.

திருகோணமலை கடற்படை பயிற்சி அகடமியில் நடைபெறும், பயிற்சியை முடித்து வெளியேறும் கடற்படையினரின் அணிவகுப்பு நிகழ்வில், பாகிஸ்தான் கடற்படைத் தளபதி விருந்தினராக பங்கேற்கவுள்ளார்.

அத்துடன் கடற்படை பயிற்சி அகடமியின், பயணக் கழகத்தையும், பாகிஸ்தான் கடற்படைத் தளபதி திறந்து வைக்கவுள்ளார்.

1986ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி ஈச்சந்தீவில் புலிகளின் மறைவிடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலியான, கொமாண்டர் சாந்திகுமார் பகாரின் நினைவாக இந்த பயணக் கழகம் திறந்து வைக்கப்படவுள்ளது.(இ-3-8)

## இலங்.அமைச்சர்களுக்கு அமெரிக்காவில் சிகிச்சை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

"இலங்கை அமைச்சர்களுக்கு, அமெரிக்காவில் மருத்துவச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான முறைமையொன்று, தயாரிக்கப்பட வேண்டும்" என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிகிச்சைகளுக்காக, அமெரிக்காவுக்கு சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில், இலங்கையை வந்தடைந்தார்.

அவரை, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்றனர். அத்துடன் நலம் விசாரித்தனர்.

அங்கு வைத்து கருத்துரைக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 'நான், இரண்டு வாரங்கள் விடுமுறையில் இருந்தேன். போகும் வழியில், சிங்கபூரில் தங்கியே சென்றேன். அங்கிருக்கும் வைத்திய உபகரணங்கள்- உலகில் எங்குமே இல்லை. சிங்கப்பூர் அமைச்சர் ஒருவருக்கு, அமைச்சரவையில் வைத்தே, மாரடைப்பு ஏற்பட்டுவிட்டது என்றார்.

'அமெரிக்காவில், சகல நோய்களுக்கும் ஒரே இடத்தில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளலாம். அந்தளவுக்கு அங்கு வசதிகள் உள்ளன. எங்களுடைய அமைச்சர்களும், அமெரிக்காவுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளும்முறைமையை ஏற்படுத்தவேண்டும்' என்றார்.

அப்போது, அங்கிருந்தவர்களில் ஒருவர், அப்படியென்றால், விலாசத்தை தேடிப் பிடித்து கொள்ளவேண்டும் என்று கூறவே, பிரதமர் உள்ளிட்ட சகலரும் சிரித்து விட்டனர்.

தொடர்ந்து கருத்துரைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அங்கு தங்கியிருந்த காலத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்ரேரஸையும், பொதுநலவாய நாடுகளின் பொதுச்செயலாளர் பெற்றீசியா ஸ்கொட்லேனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கம், ஜனநாயகம்மற்றும்பொருளாதார மேம்பாடு ஆகியன தொடர்பிலான செயற்பாடுகள் குறித்து இவ்விருவரும் விரிவாக கேட்டறிந்து கொண்டதுடன், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர். அந்த வகையில் நாமும் வேலை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## இனவாதத்தை தூண்டுபவர்கள் பிக்குகள் அல்லர்-சந்திரிகா சாடல்

இனவாதத்தை தூண்டும் காவியுடை தரித்தவர்களை நான் பௌத்த பிக்குகள் என அழைப்பதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"காவியுடை அணிந்த சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் இனவாத, மதவாத அடிப்படையிலேயே செயற்படுகின்றார்கள். அவ்வாறான நபர்களை நான் பௌத்த பிக்குகள் என கூறுவதில்லை. காவி உடை தரித்தால் கௌதம புத்தரின் கொள்கைகளை பின்பற்றி அதன் வழி நடக்க வேண்டும். அதனை எமக்கு சொல்லி கொடுக்க வேண்டும். எனினும் சில பௌத்த பிக்குகள் கொலைசெய்யவும், பொறாமை கொள்ளவும் குரோத உணர்வுடன் வாழவும் கற்றுக்கொடுக்கிறார்கள். ஒருசில பௌத்த பிக்குகள் மதக் கொள்கைகளுக்கு முற்றிலும் புறம்பான காரியங்களை செய்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலும் இவ்வாறான கடும்போக்காளர்கள் இருந்தார்கள். இதனால் யாழ்ப்பாண மக்களுக்கு அழிவுகள் ஏற்பட்டன. இனவாத அடிப்படையில் போர் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் மதவாத அடிப்படையில் செயற்பட சிலர் முயற்சிக்கின்றார்கள் என சந்திரிகா பண்டாரநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## இலங்கைத் தூதரகங்களில் மீள அரசியல் நியமனங்கள் அதிகரிப்பு

### நல்லாட்சி மீது அதிருப்தி

துறைசார் இராஜதந்திரிகள் அல்லாதோரை வெளிநாடுகளில் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளாக நியமிக்கப்படுவது தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலும் அதிகரித்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இலங்கை பாதுகாப்புச்செயலராக பணியாற்றும் கருணாசேன ஹெட்டியாராச்சி, ஜேர்மனிக்கான தூதுவராகவும், புத்தி அதாவுட, பிரான்ஸ்க்கான தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளனர். உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றக் குழு இவர்களை நாளை 14 ஆம் திகதி பகிரங்க நேர்காணலுக்காக அழைத்துள்ளது.

இந் நிலையில் இவர்களையும் சேர்த்தால், வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படும், துறைசார் இராஜதந்திரிகள் அல்லாதவர்களின் எண்ணிக்கை 36 ஆக அதிகரிக்கும். வெளிநாடுகளில் இலங்கைக்கு 67 தூதரகங்கள் மற்றும் தூதரகப் பணியகங்கள் உள்ளன.

இதில், 53 வீதமானவற்றில் துறைசார் இராஜதந்திரிகள் அல்லாத- அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களே தலைமைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் முன்னாள் படை அதிகாரிகள் ஆவர்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வரும் போது வெளிநாடுகளில் அரசியல் செல்வாக்கினால் நியமிக்கப்பட்ட தூதுவர்கள் நீக்கப்பட்டு, துறைசார் இராஜதந்திரிகள் நியமிக்கப்படுவார்கள் என்றும் இராணுவ அதிகாரிகள் சிவில் பணிகளில் இருந்து நீக்கப்படுவார்கள் என்றும் வாக்குறுதி அளித்திருந்தது.

எனினும், அந்த வாக்குறுதியை மீறும் வகையில் வெளிநாட்டுத் தூதரகங்களில் அரசியல் செல்வாக்கிலான நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதுடன், முன்னாள் படை அதிகாரிகளும் தொடர்ந்தும் சிவில் பணிகளுக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-8)

## அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் சீனாவுடன் இன்னும் உடன்பாடு இல்லை



அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கும் விடயத்தில், சீன நிறுவனத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் இன்னமும் உடன்பாடு ஏற்படவில்லை என துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை இயக்குவது தொடர்பாக, சீன நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் பல மாதங்களாகப் பேச்சுக்களை நடத்தி வந்தாலும், இன்னமும் இணக்கம் ஏதும் எட்டப்படவில்லை. கடந்த தைமாதம் ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டது. எனினும், அதில் ஒப்பமிடுவதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததால், அது பிற்போடப்பட்டது.

அதற்குப் பின்னர், துறைமுக உடன்பாடு குறித்த பேச்சுக்கள் நடப்பதாகவும், இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை என்றும் நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்குச் செல்லும் பரபரப்பான ஆட்டத்தில் இலங்கையை போராடி வெற்றி பெற்றது பாகிஸ்தான்



சம்பியன்ஸ் டிராபி தொடரின் அரையிறுதிக்கான தகுதி போட்டியில் பாகிஸ்தான் வெற்றிக்கு 237 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது இலங்கை.

சம்பியன்ஸ் டிராபி 50 ஓவர் கிரிக்கெட் தொடரின் கடைசி லீக் ஆட்டம் கார்டிஃப் சோபியா கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் பாகிஸ்தான் - இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்தி வருகின்றன. இந்த போட்டியில் வெற்றி பெறும் அணி அரையிறுதிக்கு முன்னேறும் என்பதால் இரு அணிகளும் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் களம் இறங்கின.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி இலங்கை அணியின் டிக்வெல்லா, குணதிலகா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 26 ஓட்டங்களாக இருக்கும்போது குணதிலகா 13 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.


அடுத்து வந்த குசால் மெண்டிஸ் 27 ஓட்டங்களிலும், சண்டிமால் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் வெளி

யேறினார்கள். அணித் தலைவர் மத்தியூஸ் தன் பங்கிற்கு 39 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம் இழந்தார். அதனபின் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர். ஆனால் தொடக்க வீரர் டிக்வெல்லா சிறப்பாக விளையாடி 73 ஓட்டங்கள் சேர்த்தார்.

திசாரா பெரேரா (1), லக்டல் (26), குணரத்னே (27), நுவான் பிரதீப் (1) ஓட்டங்களில் ஆட்டம் இழக்க இலங்கை அணி 49.2 ஓவரில் 236 ஓட்டங்கள் சேர்த்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பாகிஸ்தான அணி சார்பில் அதிகபட்சமாக ஜுனைட் கான், ஹசன் அலி ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

இதனையடுத்து 237 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி தொடக்கத்தில் இலங்கை அணியின் பந்து வீச்சை எளிதாக எதிர்கொண்டனர். ஆனால் சிறிய

இடைவெளியில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தனர். அப்படி இருந்த போதிலும் அணித் தலைவர் சர்ஃப்ராஸ் அகமதின் நிதான ஆட்டத்தால் பாகிஸ்தான் அணியை வெற்றிக்கு அழைத்து சென்றார். இறுதியில் பாகிஸ்தான் அணி 44.5 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 237 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணியில் அதிகபட்சமாக சர்ஃப்ராஸ் அகமது 61, பஃகர் ஜமான் 50, அசார் அலி 34 ஓட்டங்கள் எடுத்தனர். அபாரமாக பந்து வீசிய பிரதீப் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த தோல்வியின் மூலம் இலங்கை அணி வெளியேறியது. ஜுன் 14ஆம் திகதி நடைபெறும் அரையிறுதி போட்டியில் இங்கிலாந்து அணியை பாகிஸ்தான் அணி எதிர்கொள்கிறது. அதேபோல் ஜுன் 15ஆம் திகதி நடைபெறும் 2-வது அரையிறுதி போட்டியில் இந்தியா அணியை



பங்களாதேஷ் அணி எதிர்கொள்கிறது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சர்ஃப்ராஸ் தெரிவு செய்யப்பட்டார்.

## ஹயஸ் - பிக்கப் ...

விபத்துக்குள்ளாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயத்திற்கு பயணிகளை ஏற்றிச் சென்ற ஹயஸ் வாகனமும் கிளி நொச்சியில் இருந்து வந்த பிக்கப் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதன் போது விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர்கள் பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் சிலர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-111)

## ஞானசாரருக்கு விரை ..

ஞானசார தேரருக்கு காணப்படுகின்ற மரண அச்சுறுத்தல் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞான சார தேரர் நேற்றைய தினமும் மேன் முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

இந்த வழக்கில் கடந்த 31ஆம் திகதியும் ஞானசார தேரர் நீதிமன்றில் முன்னிலையாகாததினால் தேரரை கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த தவணைக்கு கட்டாயம் ஞானசார தேரர் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும். அவ்வாறு முன்னிலையாகாத பட்சத்தில் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக நேற்றும் நீதிமன்றில் முன்னிலையாக முடியவில்லை என ஞானசார தேரர் தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

எனினும் அடுத்தகட்ட விசாரணையில் ஞானசார தேரர் நீதிமன்றத்தில முன்னிலையாகாவிட்டால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்படுமென நீதிமன்றம் அறிவித்துள்ளதுடன், இந்த வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் ஜுலை மாதம 18, 19, 20 ஆம் திகதிகளில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஞானசார தேரர் சார்பாக பிரசன்னமாகிய சட்டத்தரணி பிரியந்த வல்லியத்த, ஞானசார தேரர் நீதிமன்றத்திற்கு வரவில்லை. ஞானசார தேரருக்கு மரண அச்சுறுத்தல் காணப்படுவதாக மே 25ஆம் திகதி டிலந்த வித்தானகேவினால் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதுதொடர்பாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை மன்றில் தெரியப்படுத்தியுள்ளனர். இது ஞானசார தேரரினால் உருவாக்கப்பட்ட பீதியல்ல. விசாரணை இடம் பெற்று வருகின்றது. அண்மையில் பலர் மீது நீதிமன்றத்திற்கு வெளியேயும், உள்ளேயும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் ஞானசார தேரர மன்றிற்கு வந்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் ஏதும் நடத்தப்பட்டால நாம் என்ன செய்வது? எனவே அவருக்கு எதிராக பிடியாணையை பிறபிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை நான் எதிர்த்தேன். இதனை கவனத்திற்கொண்ட நீதிமன்றம், பிடியாணை நேற்று பிறப்பிக்கப்படாது என்றும், விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளதாகவும அறிவித்தது என்றார். (செ-11)

## ஞானசாரருக்கு ...

கலகொடஅத்தே ஞானசார தேரர், மறைந்திருக்க சம்பிக்க ரணவக்க உதவுவதாக, லங்கா சமசமாஜ கட்சியின் பிரதம செயலாளர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

சில ஊடகங்களில் தேரர் மறைந்திருப்பது பிரபல அரசியல்வாதி ஒருவரிடம் என செய்திகள் வெளியாகிய போதும், அது யார் என இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இதனை தான் வெளிப்படுத்துவதாகவும் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரருக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக கூறியுள்ள அவர், 2014ம் ஆண்டு கொழும்பு மாவட்ட வேட்பாளராக ஞானசாரர் களமிறங்கியது அக் கட்சி சார்பிலேயே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜாதிக ஹெல உறுமயவின் தற்போதைய தலைவரான ஹெதிகல்லே விமலசார தேரர் முதலில் பொதுபல சேனா அமைப்புடன் இணைந்து செயற்பட்டவர் எனவும் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (செ - 11)

## விசாரணை குழு ...

பிரதேசசபை மண்டபத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் பற்றி ஆராயும்போது குறித்ததீர்மானம் சபையில் பேராளர் ஒருவரால் கொண்டுவரப்பட்டது.

தீர்மானம்

வடக்கு மாகாண கல்விபண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்கள் அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா மீது முதலமைச்சர் நியமித்த விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் இச்சபை கவனத்தைஈர்த்து நீதிவழிதழுவி ஆராய்ந்து பார்த்து அதன்பிரகாரம் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து மறுஆய்வு விசாலமான பரிசீலனைகளையும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இச்சபை முன் மொழிந்தது. மற்றும்

நீடித்து நிலைக்க கூடியதும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்புக்களை நிறைவேற்றக்கூடியதுமான அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிய தமிழ்மக்களின் போராட்டத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாத வகையிலும் ஒன்றுபட்ட சக்தியாக எழுந்துநிற்கும் தமிழ்தேசியரீதியிலான ஒன்றுபடலை சிதைத்து விடாதவகையிலும் காரியங்களை கையாளப்பட வேண்டும்மென்று இச்சபை கருதுகின்றது என்றும்

அரசியல் நிர்வாக ஸ்திரமற்ற கால மாற்றம் ஒன்றில் வடக்கு மாகாண சபை பொறுப்பேற்றுக் கொண்ட தமிழ்தேசியகூட்டமைப்பு அதன் ஆட்சிக்காலத்தில் பலவீனமடைதல் அல்லது பலவீனப்படுத்துவதற்க்கான முயற்சிக்கு துணைபோதல் தமிழ்மக்களின் அங்கீகாரத்திற்கு உரியது அல்ல என்பதையும் எதிர் கால தமிழர்கள் ஆட்சியில் வலுவான இச்சபை வலியுறுத்துகின்றது என்றும்

சுமத்தப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து சட்டரீதியாகவும் தார்மீகரீதியாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நம்பகத்தகுந்த தன்நிலை விளக்கத்தை அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உண்மையாகவும் நேர்மையாகவும் தயாராக உள்ளமையினால் பரிந்துரைகளை மேன்முறையீட்டுக்குழு ஒன்றின் மூலம் மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தை முன் வைத்தனர்.

இத்தீர்மானத்தை முன்வைத்தபின் கருத்து தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அரியரத்தினம்.

முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவினால் கலவிபண்பாட்டுஅலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர்கள விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா மீது சுமத்தப்பட்ட பரிந்துரைகள் பொய்யானது என்றும் அந்த விசாரணைக்குலுவிற்கும் தான் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். அத்துடன் பேராளர்களில் ஒருவர் வடக்குமாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட் குற்றச்சாட்டுக்களை நீதியான முறையில் விசாரணையை முன எடுப்பதோடு தமிழரசுக்ககட்சி சார்ந்த அமைச்சர் மீது சுமத்தப்பட்ட குற்றச சாட்டிற்கு அதே கட்சியை சார்ந்த மாகாண சபை உறுப்பினர் ஒருவரே சாட்சியம் அளித்ததாகவும் குறிப்பிடப்பட்ட அறிக்கை தொடர்பான உண்மை தன்மையை அறிந்து சாட்சியம் அளித்த உறுப்பினர் மீது கட்சியின் வரைமுறைகளை மீறியமைக்காக குறித்த உறுப்பினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

இதனை மாகாண சபையின உறுப்பினர் பசுபதிப்பிள்ளை அரியரத்தினம் வழி மொழிந்தார். (செ-111)

## வாகன விபத்து ...

சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்த பிரஸ்தாப குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகத்தினைச் சேர்ந்த சின்னாவி சண்முகலிங்கம் (வயது 52) என்பரே உயிரிழந்து ள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

## அறிக்கை...

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதன் பின்னர் இலங்கையின் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுயாதீனத் தன்மை தொடர்பில் தயாரித்த அறிக்கை நேற்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் 35 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது.

இதன்போதே மொனிக்கா பின்டோ இலங்கை தொடர்பில் தயாரித்த அறிக்கையை அவரது விசேட பிரதிநிதியான தியாகோ காசியா சயான் நேற்று சபையில் சமர்ப்பித்துள்ளார். (செ-11)

## பாரிய...

ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்தார்.

முறிகள் கொடுக்கல் வாங்கல் குறித்து விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில், கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க நேற்று கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற விதம் தொடர்பில் சாட்சியமளித்தார்.

1.308 பில்லியன் முறிகளை ஏலத்தில் விற்று அதனை 10.058 பில்லியனாக அதிகரித்தமையால் 889.358 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அரச கடன் திணைக்களம் சிபாரிசு செய்த 2.608 நிதிக்கு பதிலாக 10.058 பில்லியன் முறிகள் மூலம் பெற்றுக் கொண்டமையால் 688. 538 மில்லியன் ரூபாய் நட்ட மேற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்ச்சைக்குரிய முறிகள் கொடுக்கல் வாங்கல் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி ஏலத்தில் விட்ட போது முதல்நிலை பங்குதாரர்கள் 20.708 பில்லியன் ரூபாயை முறிகளுக்காக பெற்றுக் கொண்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (செ-11)

## சீனி விலை...

சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இருப்பினும், சதொச விற்பனை நிலையங்களில் சீனி ஒரு கிலோ 102.00 ரூபாய் சில்லறை விலையில் விற்கப்படுவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசார தேரர் நேற்றும் நீதிமன்றில் ஆஜராகவில்லை

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் நேற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகவில்லை.

மேற்படி வழக்கில் கடந்த 31ஆம் திகதியும் ஞானசார தேரர் நீதிமன்றில் ஆஜராகவில்லை, இதனால் ஞானசார தேரரை கைது செய்ய பிடியாணை பிறப்பிக்குமாறு சட்டமா அதிபர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த தவணைக்கு கட்டாயம் ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் அவ்வாறு ஆஜராகாவிடின் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்படும் என நீதிபதி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக நேற்றும் நீதிமன்றில் ஆஜராக முடியவில்லை என ஞானசார தேரர் தனது சட்டத்தரணி மூலம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.



இதன் போது, ஞானசார தேரருக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லை எனவும், அடுத்த தவணைக்கு கட்டாயம் தேரர் நீதிமன்றில் பிரசன்னமாக வேண்டும் என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜூலை மாதம் 18.19.20 ஆம் திகதிகளில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ-3)


## காணி விற்பனைக்கு

தென்மராட்சி கச்சாய் கிளாலி வீதி வன்னியர் கோவில் அண்மையில் 42 பரப்பு காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு
077 422 8705,
077 272 0103 (9420)

## தவறிவிட்டது

உரும்பிராய் வடக்கு உரும்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட பரமநாதன் ஜதீசன் என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன ஆவணங்கள் 08.06.2017 வியாழக்கிழமையன்று மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 967 2461,
077 542 8696 (C-8785)

## அன்பு வாசகர்களே!
## உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் சைவசித்தாந்த முதுகலைமாணி (MA)
ஆன்மீகச் சொற்பொழிவாளர், ஆசிரியர்

### நித்தியானந்தன் தசீதரன்

(நித்தியதசீதரன், என்.ரி.தரன்)



மலர்வு - 24.10.1975
உதிர்வு - 13.05.2017

கடந்த 13.05.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் நித்தியானந்தன் தசீதரன் அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (14.06.2017) புதன்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மதியம் 11.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நினைவு மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது. அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது இறுதிப் பயணத்தின் போது அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தினர் அனைவரும் தயை கூர்ந்து இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

பன்னாலை, தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம். (C-8788)

குடும்பத்தினர்
தொ.பே. 021 221 5702

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் - 31.10.1928
மறைவு - 07.06.2012

திதி - சதுர்த்தி

அமரர். திருமதி.

### சிவயோகம் செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியை – கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை.)

அம்மா என்று அழைக்காது உயிரிலில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பேராசிரியர் மா.சின்னத்தம்பி (மருமகன்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப் பிள்ளைகள் (9187)

"சுபசதனம்"
சம்பியன் லேன், கொக்குவில்.

## இராசி பலன்

13.06.2017
(வைகாசி 30, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.02 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 12.10 மணிவரை
சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை
இராகுகாலம் 2.52 - 4.22 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி | செவ் புத |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை, புனர்பூசம் | | |
| சந் | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

**இடபம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடியலாம்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** ஆதாயம் தரும் வேலை ஒன்றில் அக்கறை காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்:** செய்தொழில் முன்னேற்றமுண்டு, காரிய நன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் உதவுவார்கள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரச வழியில் சலுகைகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்துசேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், செய்தொழிலில் ஊக்கம் காட்டுவீர்கள் வருமானம் திருப்தி தரும், உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**தனுசு:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நீண்டநாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.

**மகரம்:** கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், பணியில் பொறுப்புக்கள் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் ஏற்படலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழிலில் சில மாற்றங்களைச் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், நட்பு வட்டம் விரிவடையும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்கு சலுகை வழங்கல்

க.பொ.த. (உ/த) மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விசேட தேவையுடைய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளுக்குச் சலுகை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் 2017.06.14 (புதன்கிழமை) காலை இடம்பெறும். சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் நேர்முகத் தேர்வில் தோற்றினால் மட்டுமே சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# கோம்பயன்மணல் மயானப் பகுதியில் குப்பை கொட்டுவதால் சுகாதார சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோம்பயன்மணல் மயானத்தின் முன் குப்பைகள் கொட்டப்படுவதனால் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது.

எனவே . உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-8-105)

# சீரற்ற குடிநீர் விநியோகம்; சீராக்கப்படுவது எப்போது?

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் குடிநீர் விநியோகம் சீரின்மையால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இப் பிரதேசத்தில் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரும் மானிப்பாய் பிரதேச சபையினரும் குடிநீர் விநியோகத்தினை மேற்கொண்டு வருகின்றனர். நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் விநியோகிக்கப்படும். குடிநீரில் குளோரின் அதிகளவில் கலந்திருப்பதனால் மக்களின் பாவனைக்கு உகந்ததாக இருப்பதில்லை.

அது மட்டுமின்றி நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினரால் வழங்கப்பட்ட தண்ணீர் குழாய்களை சில விசமிகள் அடிக்கடி உடைத்து விட்டு செல்கின்றனர். அத்துடன் மானிப்பாய் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் குடிநீர் மக்கள் பாவனைக்கு உகந்ததாக காணப்படுகின்ற போதிலும் சீரற்ற முறையில் குடிநீர் விநியோகிக்கப்படுவதனால் அப் பிரதேச மக்கள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அதாவது மானிப்பாய் பிரதேச சபையால் கிழமையில் இரண்டு தடவைகள் தான் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. சனி, ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய இரு நாட்களில் திடீரென வந்து விநியோகித்து விட்டுச் செல்கிறார்கள்.

இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ளனர். எனவே மேற்குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து குடிநீர் பிரச்சினையை விரைந்து தீர்க்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-102)

# 27 வருடங்களுக்கு பின்னர் அந்தோனியார் ஆலய திருவிழா



ஊரணி புனித அந்தோனியார் ஆலய திருவிழா 27 வருடங்களுக்கு பின்னர் இம்முறை நடைபெறுகின்றது.

1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பிரதேச மக்கள் வெளியேறியமையால் இவ் ஆலயம் கைவிடப்பட்டிருந்தது.

17 வருடங்களின் பின்னர் ஊரணி பிரதேச மக்கள் மீள்குடியேற்றப்பட்டு பிரதேச மக்களினால் இவ் ஆலயம் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு ஆலயத் திருவிழாவையும் முன்னெடுத்துள்ளார்கள்.

இப் பிரதேசத்தில் முழுமையாக மீள்குடியேற்றம் நடைபெறாத போதிலும் தற்காலிகமாக ஆலயத்தை அமைத்து புனிதர் அந்தோனியாரின் இறந்த நாளின் நினைவாக கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று தேர்ப்பவனியும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (இ-5-104)







குப்பிளான் தெற்கு ஞானகலா முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா ஞானகலா முன்பள்ளி முன்றலில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தேசியமீனவர் ஒத்துழைப்பு இயக்க யாழ். மாவட்ட இணைப்பாளர் ந. இன்பநாயகம் மாணவிக்கு பரிசில் வழங்கு வதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# காலநிலைசார் அனர்த்த முன்னெச்சரிக்கை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

முழு அளவிலான காலநிலைசார் அனர்த்த முன்னெச்சரிக்கை நிகழ்வுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்டத்தில் இயற்கை மற்றும் மனிதரால் ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்து அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட பங்குதாரர்களி டையே ஒருங்கிணைப்பு, ஒத்து ழைப்பு மற்றும் விழிப்புணர்வு நடைபெறவுள்ளது. இச் செயற்பாட்டினை மேற் கொள்வதற்காக முழு அளவிலான அனர்த்த முன்னெச்சரிக்கை நிகழ்வொன்றினை யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவிற் குட்பட்ட J/68 மற்றும் J/69 ஆகியகிராமசேவையாளர் பிரிவுகளில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-106)

# விசாகப் பொங்கல் நாளை

தெல்லிப்பழை மேற்கு- விழிசிட்டி - வீம சிட்டி வித்தகபுரம் சிவகுருநாத சுவாமி ஆலய வைகாசி விசாகப் பொங்கல் அர்த்தசாம அபிஷேக ஆராதனைகள் நாளை 14 ஆம் திகதி புதன்கிழமை இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகி நாளை மறுதினம் அதிகாலை 6.30 மணிக்கு பொங்கலுடன் அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும். (8)

# நீந்திக் கரையை அடைந்த கடற்றொழிலாளர்கள்

குருநகர் கடற்பரப்பில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை தொழிலுக்காகச் சென்ற 3 மீனவர்கள் படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நீந்திக் கரையை அடைந்தனர்.

இரவு 11 மணியளவில் படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகு கடலில் மூழ்கிய-தையடுத்து படகிலிருந்து குதித்துநீந்திக் கரையை அடைந்தனர். (இ-5-106)








யாழ். ஒஸ்மானியா கல்லூரி, மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்ற ரம்ழான் புனித அல்குர்ஆன் போட்டி பரிசளிப்பு விழாவின் போது யாழ். எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம்.இக்பால் பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.







ஊரணி புனித அந்தோனியார் ஆலய கொடியேற்ற நிகழ்வு கடந்த சனிக்கிழமை பங்குத்தந்தை அருட் திரு ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெற்ற போது..
(படங்கள்:- இணுவில் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

மீது கடும் கோபம் கொண்டிருந்தார்.

அதாவது 2015 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி பிரதமர் ரணில் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கிடையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இச் சந்திப்பின்போது முதலமைச்சர் விக்னேஸ்வரனும் பிரசன்னமாகியிருந்தார்.

இச்சந்திப்பின் போதுதான், இராணுவத்தை வடபகுதியில் இருந்து அகற்றப் போவதில்லை என்று மகாநாயக்கர்களிடம் சொல்லப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கூறியிருந்தார். இவ்வாறு அவர் கூறும்

இந்த மௌனம் கூட்டமைப்பின் தலைவர்களின் ஏற்பாட்டில்தான் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டபாட்டில் விமர்சனம் செய்தார் என்று ஊகிப்பதற்கும் இடமுண்டு.

ஆக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தந்தித் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியின் பின்னர் பிரதமர் ரணில்-முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோருக்கிடையில் கடும் பகை ஏற்படலாயிற்று.

இருவரும் கொண்ட கோபம் எத்தன்மையது என்பதை



## ஒருபுறம் வேடன்; மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான்

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் கதைக்கமாட்டேன், அவரைச் சந்திக்கவும் மாட்டேன். வடக்கில் இராணுவம் குடி கொண்டுள்ள ஒரு சிறு பகுதியையும் விட்டுக் கொடுக்கமாட்டேன் என பௌத்த மகா நாயக்கர்களிடம் கூறவுள்ளேன் என்று நான் கூறியதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் பொய் சொல்கிறார். அவரை நான் ஒருபோதும் சந்தித்ததுமில்லை, கதைத்ததுமில்லை. எப்பவோ ஒருமுறை அவர் எனக்கொரு கடிதம் எழுதியது மட்டுமே ஞாபகம் என்றெல்லாம் தந்தித் தொலைக்காட்சிக்கு பிரதமர் ரணில் தெரிவித்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பேட்டிக்கு வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் மறுத்தான் கொடுக்கத் தவறவில்லை.

பிரதமர் ரணிலின் கருத்துக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் கொடுத்த மறுத்தானில்,

வடமாகாணத்திலிருந்து படையினர் வெளியேற்றப்படமாட்டார்கள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் கூறிய விடயம் உண்மையானது. ஆனால் அவர் தற்போது அதனை மறுக்கலாம். என்னுடைய கருத்து பொய்யானது என்றால் படையினரின் வெளியேற்றம் தொடர்பில் அவரின் நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

நான் முதலமைச்சரைச் சந்திக்கப் போவதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே சந்திப்பேன் என அவர் கூறும் கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்தும் முயற்சியாகவோ அல்லது ஒரு உபாயமாகவோ நான் பார்க்கின்றேன் என்பதாக முதலமைச்சரின் கருத்துக்கள் அமைந்திருந்தன.

இது ஒருபுறமிருக்க, முதலமைச்சர் விக்னேஸ்வரன் பொய் சொல்கிறார் எனப் பிரதமர் கூறியதை மறுதலித்த முதலமைச்சர் விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை போது கூட்டமைப்பின் தலைவர்கள் உடனிருந்தனர்.

ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் நான் அப்படிக் கூறவில்லை. அவர் பொய் சொல்கிறார். அவரை நான் சந்திக்கவேயில்லை என்றெல்லாம் பிரதமர் ரணில் கூறியபோது அதனைச் சடுதியாக மறுத்து அறிக்கை விட வேண்டியவர்கள் உடனிருந்த கூட்டமைப்பின் தலைவர்கள் என்பது ஏற்புடையது.

அறிக்கை விடவேண்டியவர்கள் அதனைச் செய்யாதவிடத்து அவர்கள் மீது முதலமைச்சர் கோபம் கொள்வது நியாயமானதே. தங்கள் முதலமைச்சரைப் பார்த்து அவர் பொய் சொல்கிறார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிய போது கூட்டமைப்பின் தலைவர்கள் கடுப்படைந்திருக்க வேண் டும். ஆனால் அவர்கள் பேசாமல் மௌனம் காத்தனர்.

அறிவதற்கு வசா விளானில் உள்ள வளலாய் என்ற இடத்தில் நடந்த நிகழ்வொன்று உதவிற்று.

ஆம், உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட யாழ்ப்பாணம் வளலாய்ப் பகுதியில் சுமார் 400 ஏக்கர் காணி விடுவிப்பு நிகழ்வு 23.03.2015 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மகளிர் விவகார அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை வெளியேற்றி விட்டு முகாம் வாயிலை மூடியது இராணுவம்

## வற்றாப்பளை சென்ற மக்கள் அவதி

வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை 7 மணி முதல் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதுக்குடியிருப்பு வற்றாப்பளை பிரதான வீதியில் அமையப்பெற்றுள்ள முல்லைத்தீவு இராணுவப் படை கட்டளை தலைமையக வாயில் மக்கள் போக்குவரத்திற்காக திறந்து வைக்கப்பட்டது.

பாதை திறக்கப்பட்டதும் முல்லைத்தீவு இராணுவப்படை கட்டளை தலைமையகம் முன்பாக நேற்று முன்தினம் 103ஆவது நாளாகவும் தமது சொந்த நிலத்தை விடுவிக்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மக்கள் குறித்த பிரதான வீதில் அமையப்பெற்றிருக்கும் தமது பூர்வீக ஆலயத்தில் சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர்.

இவர்களோடு சம உரிமை இயக்கம் மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சியினைச் சேர்ந்த பௌத்த மதகுரு உள்ளிட்ட சுமார் 20 பேர் அடங்கிய குழுவும் சென்றிருந்தது. இதனை கண்காணித்த இராணுவத்தினர் பொலிஸாரூடாக இவர்களை வெளியேற்ற முற்பட்ட வேளையில் தமது ஆலயத்தில் வழிபடுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு இருப்பதாக மக்கள் தெரிவித்து தமது முருகன் ஆலய முன்றலில் ஒன்று கூடியிருந்தனர்.



இந்த நிலையில் மக்களையும் குறித்த இரண்டு கட்சியினரும் வெளியேறுமாறு கோரி இர்ாணுவத்தினர் பிரதான வாயில் இரண்டையும் மீண்டும் மூடிக்கொண்டனர். குறித்த குழப்ப நிலையில் குறித்த பகுதிக்குச் செல்ல ஊடகவியலாளர்களுக்கும் தடைவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சுமார் இரண்டு மணித்தியாலம் மக்களின் கடுமையான போராட்டம் தொடர்ந்த நிலையில் அந்த பகுதிக்கு விரைந்த மாவட்ட அரசாங்க அதிபரும் இராணுவம், பொலிஸார் ஆகியோர் இணைந்து மக்களையும் குறித்த இரண்டு கட்சியினரையும் வெளியேறுமாறும் வெளியேறிய பின்னர் வீதி திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத்துக்கு வருகின்ற பக்தர்களின் நலன் கருதி குறித்த பகுதியில் இருந்து மக்கள் உடனடியாக வெளியேறினர். இதனைத் தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபர் மக்கள் முன்னிலையில் சிறிது நேரத்தில் குறித்த வீதி ஏற்கனவே திறந்து விட்டது போன்று திறந்துவிடப்படும் என்று தெரிவித்தார். இருப்பினும் இதுவரை வீதியானது திறந்து விடப்படவில்லை.

இதனால் பக்தர்கள் சுமார் 3 கிலோமீற்றர் நடைபவனியாக வரவேண்டிய நிலை ஏற்பட்டது. அத்தோடு இராணுவமும் அரசாங்க அதிபரும் தம்மை ஏமாற்றிவிட்டதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (2-281)

## காட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து

### வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு மடப்பண்டம் எடுத்து வரப்பட்டது





வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று இடம்பெற்றது.

நேற்று முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் இருந்து அதிகாலை 3 மணியளவில் மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயத்தை காலை ஐந்து மணிளவில் மடப்பண்டம் வந்தடைந்தது.

அதன்பின்னர் ஆலய பூசகர்கள் கச்சிநேரும் நிகழ்வு நடைபெற்று பின்னர் பூசைக்குரிய தூளி பிடிக்கும் நிகழ்வு நடைபெற்று அதனைத் தொடர்ந்து காலை ஏழு மணியில் இருந்து ஆலயத்தில் பூசைகள் நடைபெற்றது.

உலகெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகைதந்து தமது நேர்த்திக்கடன்களை செய்தனர். (2-2...)

வன்னி வலம்







கிளிநொச்சி பொதுச்சந்தையின் புதிய கடைத்தொகுதிக் கட்டடம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்:-கிளிநொச்சி,பரந்தன், மல்லாவி செய்தியாளர்கள்)

## அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு வவுனியாவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை





தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி வவுனியாவில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் கந்தசுவாமி கோவிலில் நேற்று காலை 7.30 மணிக்கு இந்த பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்போது, தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன், தீபம் ஏற்றி பஞ்சபுராணம் ஓதி வழிபாடும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம், பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.வாசன், அந்தணர் ஒன்றியச் செயலாளர் பிரபாகரக் குருக்கள், வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கம், தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், வர்த்தகர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர். (2-250)

# மாங்குளம் வைத்தியசாலையில் பிரேத அறை அமையுங்கள்

## பிரதேச மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கோரிக்கை

மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்போரின் சடலங்களை மரண விசாரணைகள் முடிந்து உறவினர்களிடம் கையளிக்கும் வரை பாதுகாக்க வசதி இன்றி உள்ளக /வெளியக நோயாளர் பிரிவுகளுக்கு முன்னால் வைக்கும் அவல நிலை காணப்படுகின்றது. சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும் வெளிநோயாளர்கள் மற்றும் விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வரும் உள்ளக நோயாளர்கள் சடலங்களில் இருந்து வெளியேறும் கிருமிகளின் தாக்கத்திற்குட்படுவதுடன், சடலங்களில் இருந்து வெளியேறும் துர்வாடையினாலும் பாதிக்கப்படுவதுடன், உளரீதியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.



இது தொடர்பில் பல தடவைகள் வடக்கு மாகாண சுகாதாரத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் தீர்வு கிடைக்கவில்லை என மாங்குளம் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது சுமார் 15 கிராமங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 750 குடும்பங்களுக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்களின் சுகாதார வைத்திய சிகிச்சைகளை வழங்கி வருவதுடன், ஏ - 9 வீதியில் இவ் வைத்தியசாலை அமையப்பெற்றிருப்பதால் பிரதான வீதியில் நடைபெறும் விபத்துச் சம்பவங்களின் போது, படுகாயமடைந்த பலரது உயிர்களைக் காப்பாற்றி வருவதுடன், அவசர நோயாளர் காவு வண்டி சேவையையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது.

இவ்வாறான நிலையில், இந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழக்கும் நோயாளர்களது சடலங்களைப் பாதுகாப்பாக வைத்து பராமரிக்க கூடிய நவீன வசதிகளுடன் கூடிய பிரேத அறை மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் மக்கள் இடப்பெயர்வின் பின்னரான மீள்குடியேற்றம் நடைபெற்று 8 வருடங்கள் கடந்தும் அமைக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக, வடக்கு மாகாண சபை அமர்வின் போது இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், தற்போது மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் சில காலங்களே இருக்கும் நிலையில் கூட பிரேத அறை அமைப்பதற்கு எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

எனவே வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்தி மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் கூடிய பிரேத அறை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாக இணைந்து கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் மீதான விசாரணை குழுவின் பரிந்துரைகளை மீளாய்வு செய்ய கோரிக்கை

## கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு கையளிப்பு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான விசாரணைக்குழுவின் பரிந்துரைகளை மீளாய்வு செய்யுமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள்குழுவினால்வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கோரிக்கை அடங்கிய கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி பொதுச் சந்தை புதிய கடைத் தொகுதி கட்டடத் திறப்பு விழாவில் வைத்து கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர், செயலாளர் ஆகியோர்களால் நேரில் கையளிக்கப்பட்டது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு மாகாணத்தின் அமைச்சர்கள் மீதான விசாரணைக் குறிப்புக்களையும் பரிந்துரைகளையும் பத்திரிகை வாயிலாக வாசித்து அறிந்தோம். அவ் அறிக்கை தொடர்பில் நாங்கள் விளங்கிக் கொண்ட வகையிலும் கலந்துரையாடல்களில் பெற்றுக் கொண்ட அபிப்பிராயங்களின் அடிப்படையிலும் மேற்படி விடயம் தொடர்பில் தங்களுக்கு அறியத்தருவது எமது கடமையும் பொறுப்பும் என கருதுகிறோம்.

குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல விடயங்கள் நிர்வாகத் துறையின் நடைமுறைகளோடு தொடர்புபட்டவை என்பதை புலப்படுத்துகின்றது. வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பேற்ற புறச் சூழல் விசாரணையாளர்களால் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது கருத்தில் எடுக்கப்படவேண்டியது.

குறிப்பாக கடந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் நிர்வாக முறைகேடுகளால் சீர்கெட்டு இருந்த வடக்கு மாகாணத்தை சுத்தப்படுத்துகின்ற கடமை அமைச்சர்களுக்கு இருந்தது என்பதையும் அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது என்பதையும் தாங்கள் உணர்வீர்கள்.

இன்றைய சூழலில் வடக்கு மாகாண சபையை பலவீனப்படுத்துதல், பலவீனப்படுத்துவதற்கு முயற்சித்தல் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்கான முயற்சிகளை பலவீனமாக்கும் என்பதுடன் அது நோக்கிய தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து விடும் என்பதை முதன்மையாக தாங்கள் ஆராய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

மேலெழுந்த வாரியாக வெளிப்பட்டிருக்கும் இவ் அறிக்கையை ஏற்று அங்கீகரிக்க முனைந்தால் வடக்கு மாகாண அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு தத்துவம் கேள்விக்குள்ளாக்கப்படும் என்பதுடன் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவையே பதவி விலகுவது ஜனநாயகத்தை மகிமைப்படுத்தும் என்பதையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலம் இன்னமும் 15 மாதங்களில் நிறைவு பெற இருப்பதனால் தங்களின் தலைமையின் கீழான முதலாவது அமைச்சரவை பலவீனப்படுத்துவதன் மூலம் எங்கள் எல்லோரது மதிப்பையும் பெற்றுள்ள தங்களின் தலைமைத்துவம் கேள்விக் குறியாகி விடக் கூடாது என்பதே எமது விருப்பாகும்.

விசேடமாக குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சட்ட ரீதியானதும் தார்மீக ரீதியிலானதுமான சான்றுகளை முன்வைக்க குறித்த அமைச்சர்கள் தயாராக இருப்பதாக வெளிப்படுத்தப்படுகின்றது.

எனவே அவர்களுக்கு மேன்முறையீடு வழங்கவும் குற்றச்சாட்டுக்களையும் அதற்கான பதில்களையும் விசாலமாக பரிசீலிக்கவும் மேன்முறையீட்டு உயர் குழுவை நிறுவி மயக்கமற்ற உண்மைகளை கண்டறிய வேண்டும் எனவும் தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளுக்கும் ஒற்றுமைக்கும் பங்கமற்ற தீர்மானம் ஒன்றை தாங்கள் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-277)

# விவசாய வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் திட்ட வடக்கு மாகாண அலுவலகம் திறந்து வைப்பு





ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள விவசாய வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் திட்டத்திற்கான வடக்கு மாகாணத்திற்கான அலுவலகம் வவுனியாவில் நேற்று முற்பகல் 11 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, சூசைப்பிள்ளையார்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குறித்த அலுவலகத்தை ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயாகமகே திறந்து வைத்தார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஆரம்ப கைத்தொழில் அமைச்சு விவசாய வேளாண்மைத் துறையை நவீனமயப்படுத்தி கிராமிய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதன்கீழ் கிராமிய மக்களுக்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள், கடன் உதவிகள், மானியங்கள் என்பவற்றை வழங்கி உற்பத்திகளை ஊக்குவிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு கட்டமாக வடக்கின் விவசாய வேளாண்மைத்துறை உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில் வடக்கிற்கான இணைப்பு அலுவலகமாக குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

விவசாய வேளாண்மைத் துறை அமைச்சின் வடக்கு மாகாண முகாமை யாளர் ரோகண ஹமகே தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர், வவுனியா மாவட்ட அரச அதிபர் ரோஹண புஸ்ப குமார, மேலதிக அரசாங்க அதிபர் த.திரேஸ்குமார், ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் கருணாதாச, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் வாசல, மதத்தலைவர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)




# கட்டுப்பாட்டு விலைக்கு மணல் வழங்கக் கோரி கவனயீர்ப்பு






கிளிநொச்சியில் கட்டுப்பாட்டு விலைக்கு மக்களுக்கு மணல் வழங்குமாறு கோரி நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் குறித்த விடயம் தொடர்பில் மகஜர் கையளிக்கப்பட்டது.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மக்கள்,

வீட்டுத் திட்டத்திற்கு வழங்கப்படும் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தின் பெரும்பகுதி மணல் கொள்வனவிற்கு செலவாகின்றது. மணலுக்கு 8 ஆயிரம் ரூபா வரை செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் வீட்டுத் திட்டத்தை முழுமைப்படுத்த முடியாதுள்ளது. மகஜரைப் பெற்றுக் கொண்ட அரச அதிபர் மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில்,

கட்டுப்பாட்டு விலைக்கு மக்களுக்கு மணலை வழங்குவதற்கு கூட்டுறவு சபைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த பிரச்சினை தொடர்பில் தொடர்ந்தும் அவதானித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கடந்த காலங்களில் திட்டமிட்டு மக்களுக்கு குறைந்த செலவில் மணல் வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில் தாங்கள் இணைத் தலைவர்களாக செயற்பட்டபோது பொருத்தமற்ற பகுதிகளில் மண் அகழப்படுவது, அனுமதியற்ற முறையில் மணல் சூறையாடப்படுவது ஆகியவை தொடர்பிலும் முறைப்பாடுகள் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் அவரிடம் வினவியபோது, அந்தக் காலப் பகுதியில் அவற்றை கட்டுப்படுத்தியதாக அவர் குறிப்பிட்டார். (2-15-312)

# தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி கொடிதின வாரம் வவுவில் அனுஷ்டிப்பு





(குருமன்காடு)

இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக ஜூன் மாதம் 10 ஆம் திகதி முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நாடு முழுவதும் தேசிய இந்து சமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்து சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் இந்து சமய அறநெறிக்கல்வி கொடி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

தேசியக் கொடி மற்றும் நந்திக் கொடி ஏற்றப்பட்டு நாயன்மார்களில் ஒருவரான சம்பந்தரின் படத்திற்கு மாலை அணிவித்து கொடி தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டது.

அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் கொடி அணிவித்து வைக்கப்பட்டதுடன் வர்த்தகர்களும் இந்து சமய அறநெறிக் கல்விக்காக நன்கொடைகளை வழங்கி வைத்தனர்.

இதன் மூலம் திரட்டப்படும் நிதியைக் கொண்டு அறநெறி கல்வியை ஊக்குவிக்கவும், நலிவுற்ற இந்து சமய பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி. றோஹண புஸ்பகுமார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் த.திரேஸ்குமார், வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கம், மாவட்ட கலாசாரா உத்தியோகத்தர் இ.நித்தியானந்தம், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் சி.கஜேந்திரகுமார், வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார், வவுனியா மாவட்ட வர்த்த சங்கப் பிரதிநிதிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், வர்த்தக பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-250)

# கட்டடத் திறப்பு விழாவும் கற்றல் உபகரணம் வழங்கலும்

(பூநகரி)

பூநகரி வினாசியோடை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு பாடசாலை அதிபர் செ.உதயகலன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலய பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரன், பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்ணேந்திரன், கௌரவ விருந்தினராக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தருமரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இன்றைய தினம் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், பாடசாலை வளாகத்தில் மரநடுகை நிகழ்வும் நடைபெறும். (2-84)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோர்



குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோர்தான். பெற்றோர் குழந்தைகள் மனதில் உறவுகள் பற்றி நல்ல எண்ணம் தோன்றும் வகையில் நல்ல விடயங்களை மட்டும் அவர்கள் முன் பேசுங்கள்.

இன்றைய சூழ்நிலையில் எல்லா உறவுகளும் தனித்தனி தீவுகளாக பிரிந்து வாழ்கின்றன. ஒருவரோடு ஒருவர் எந்தத் தொடர்பும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய மன அழுத்தத்தை உண்டுபண்ணும் என்பது போகப் போகத்தான் தெரியும். இப்போது ஒருவரது உள்ளத்து உணர்வுகளை பெற, இங்கே அவருக்காக யாருமில்லை.

ஆங்காங்கே மனநல ஆலோசகர்கள் இருக்கிறார்கள். முன்பின் தெரியாத அவர்களிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு குடும்ப பிரச்சினைகளை சொல்லி ஆறுதலும், ஆலோசனைகளும் பெறுகிறார்கள்.

முற்காலத்தில் எல்லா பிரச்சினைகளையும் பேசி தீர்க்க வீட்டில் பெரியவர்கள் இருந்தார்கள். இப்போது தனிக்குடித்தனமாகி விட்டதால் பெரியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள். வீட்டுப் பெரியவர்கள் உதாசீனப்படுத்தப்பட்டதால் இன்றைய இளைய தலைமுறைகள் வழிகாட்டுதலின்றி தவிக்கின்றனர்.

அதனால் இளைஞர்கள் மட்டுமின்றி சிறுவர், சிறுமியர்கள் கூட மனஅழுத்தம் கொண்டவர்கள் பட்டியலில் இணைந்துவிட்டார்கள்.

அவர்களால் தங்கள் பிரச்சினைகளை வெளியில் சொல்ல முடியவில்லை. அவர்கள் சொல்ல விரும்பினாலும் அதை கேட்கவும் ஆளில்லை.

அதனால் அவர்களாகவே முடிவு எடுத்து விடுகிறார்கள். சிறுவர்கள் மத்தியில் பெருகி வரும் தற்கொலைக்கு இதுவே காரணமாக கூறப்படுகிறது.

உயிரின் விலை அவர்களுக்கு உணர்த்தப்படவில்லை. அம்மா-அப்பா தவிர மற்ற உறவுகள் பற்றியும் அவர்களுக்கு புரிய வைக்கப்படவில்லை.

பெரும்பாலான பெற்றோர்கள் திருமணம், குடும்ப விழாக்களுக்குக்கூட குழந்தைகளை அழைத்துச் செல்வதில்லை. கடமைக்காக இருவர் மட்டும் போகிறார்கள். சில நேரங்களில் கணவனோ, மனைவியோ யாராவது ஒருவர் தான் போய் தலையைக் காட்டுகிறார்கள்.

குழந்தைகளை அழைத்துச் செல்லாததால் உறவுகளை அறிமுகப்படுத்தும், நல்ல சந்தர்ப்பங்கள் வீணடிக்கப்படுகின்றன.

ஏனோ தெரியவில்லை, வருங்கால சந்ததிகள் உறவுகள் தெரியாமலேயே வாழ வேண்டும் என்று முடிவு செய்துவிடுகிறார்கள். அது பெருந்தவறு.

கோவில் திருவிழாக்கள், பண்டிகைகள் எல்லாமே உறவுகளுடன் கலக்கும் சந்தர்ப்பத்திற்காக மட்டுமே உருவாக்கப்பட்டவை.

அவைகளை திட்டமிட்டு முறையாக பயன்படுத்தி, ஆண்டுக்கு ஒரு முறையாவது உறவுகளை சந்திக்கும் வழக்கத்தை வைத்துக் கொள்ளவேண்டும்.

உறவினர்களை வீட்டிற்கு அழைத்து வந்து குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

வீட்டிற்கு உறவினர்கள் வந்தால் குழந்தைகள் வெளியே வந்து அந்த அறையையே எட்டிப்பார்ப்பதில்லை. பெரும்பாலான பெற்றோரும் அதை விரும்புவதில்லை.

ஏன் இந்த வேண்டாத கட்டுப்பாடு? அவர்களை உறவினர்களோடு பழக அனுமதிப்பது, மனோரீதியான ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

அம்மா - அப்பாவே உலகம் என்று குழந்தைகள் வாழவேண்டும் என்று பெரும்பாலான பெற்றோர் நினைக்கிறார்கள்.

அது தவறு. பெற்றோரே தனக்கு கெடுதல் செய்வது போன்று தோன்றும்போது குழந்தைகள் முறையிட நம்பிக்கையான உறவுகள் வேண்டும். பெற்றோர் செய்வது நியாயம் என்றால், அதை அந்த உறவினர்கள்தான் எடுத்துக்கூறவேண்டும்.

அதுவே குழந்தைகள் மனதில் ஆழமாக பதியும். தேவைப்படும்போது தங்களோடு உறவாட உறவுகள் இல்லாமல் போனால், எதிர்காலத்தில் தங்கள் பெற்றோர் மீதே குழந்தைகளுக்கு ஒரு வித வெறுப்பு தோன்றிவிடும்.

விருந்தோம்பலுக்கு பெயர்போன இந்திய மக்கள் இன்று உறவினர்களைத் தவிர்க்கிறார்கள்.

இந்த நிலை நீடித்தால் அம்மா-அப்பாவே தூரத்து உறவாக மாறிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது.

உறவினர்களிடம் நல்லதும் கெட்டதும் கலந்துதான் இருக்கும். யாரும் நூறு சதவீதம் நல்லவராகவும் இருக்க முடியாது. கெட்டவராகவும் இருக்க முடியாது.

அதனால் மற்ற உறவினர்களைப் பற்றி குழந்தைகள் முன் குறை சொல்வதை நிறுத்துங்கள். இது அவர்கள் மனதை பெரிதும் பாதிக்கும் செயல்.

இதனால் அவர்கள் காரணமில்லாமல் உறவுகளை வெறுக்க நேரிடும்.

என்றாவது நேரில் பார்க்க நேர்ந்தாலும் அவர்களை உதாசீனப்படுத்துவார்கள். குழந்தைகள் மனது துவேஷத்தால் பாழ்படக் கூடாது. அவர்கள் மனதில் அன்பை மட்டுமே விதைக்க வேண்டும். அப்போதுதான் நாம் அதை அறுவடை செய்ய முடியும்.

குழந்தைகளின் உணர்வுகளை கட்டுப்படுத்தி வழி நடத்த வேண்டும். அவர்கள் வளரவளர அதுதான் நமக்கு பெரிய சவாலாக இருக்கும். எளிதில் வெளிப்படுத்தக் கூடிய குணம் கோபம்தான். அதை கட்டுப்படுத்த கற்றுத்தர வேண்டும். கோபத்தில் அவர்கள் செய்யும் தவறுகள் அவர்களை சிக்கலில் ஆழ்த்தி விடும். உறவுகள் சிதைவதும் பிரிவதும் கோபத்தில் தான்.

கோபத்தை அவர்கள் உறவுகள் மீது காட்டவும், மரியாதை இல்லாமல் பேசி அவமதிக்கவும் சிறிதும் அனுமதிக்காதீர்கள். கோபம் என்பது குழந்தைகளுக்கானதல்ல. அதை உறவுகள் மீது காண்பித்தால் மற்றவர்கள் மத்தியில் அவர்கள் கெட்ட பெயர் வாங்க வேண்டியிருக்கும். இது அவர்கள் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

கோபத்தை கட்டுப்படுத்த கற்றுக்கொடுங்கள்.

கோபத்தை அடக்குவதால் சுற்றி இருப்பவர்கள் அவர்களை மதிப்பார்கள். அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை வளரும். சட்டென்று ஒரு தவறான முடிவுக்கு வருவது கோபத்தால்தான். அந்தக் கோபம் அவர்களை தவறாக வழி நடத்திவிடும்.

குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோர்தான். பெற்றோரைப் பார்த்துதான் அவர்கள் உறவுகளை மதிக்க கற்றுக்கொள்வார்கள்.

அதனால் அவர்கள் மனதில் உறவுகள் பற்றி நல்ல எண்ணம் தோன்றும் வகையில் நல்ல விடயங்களை மட்டும் அவர்கள் முன் பேசுங்கள்.

உறவுகள் மனித வாழ்க்கைக்கு முக்கியமான அஸ்திவாரம். அதை தொலைத்துவிட்டு கட்டடம் கட்ட முயற்சி செய்யாதீர்கள். உறவுகளை உதாசீனப்படுத்திவிட்டு வாழும் வாழ்க்கையில் பக்க விளைவுகள் அதிகம்.

அதனால் குழந்தைப் பருவத்திலிருந்தே உறவுகளை அனுசரித்துச் செல்ல அவர்களை பழக்கப்படுத்துங்கள்.

# வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவதால் இவ்வளவு நன்மைகளா?



விற்றமின் C, B6, ஃபோலிக் அமிலம், கல்சியம் சத்துக்களை உள்ளடக்கிய வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று பார்க்கலாம்.

வெங்காயத்தில் சல்பர், விற்றமின் C, B6, பயோடின், ஃபோலிக் அமிலம், குரோமியம், கல்சியம் மற்றும் நார்ச்சத்து போன்றவை வளமாக நிறைந்துள்ளன.

இவ்வளவு சத்துக்களை உள்ளடக்கிய வெங்காயத்தை பச்சையாக சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் என்னவென்று தெரியுமா?

வெங்காயத்தில் உள்ள க்யூயர்சிடின் தமனிகளில் ப்ளேக்குகளின் உருவாக்கத்தைத் தடுத்து, மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது.

வெங்காயத்தில் உள்ள அழற்சி எதிர்ப்பு பண்புகள் சுவாசக்குழாய் தசைகளை ரிலாக்ஸ் அடையச் செய்து, ஆஸ்துமா மற்றும் மூச்சுக் குழாய் அழற்சியில் இருந்து விடுபட உதவுகிறது.

வெங்காயம் சளி, இருமல், காய்ச்சல், தும்மல் மற்றும் மூக்கு ஒழுகல் போன்றவற்றையும் தடுக்க பெரிதும் உதவியாக இருக்கும்.

வெங்காயத்தில் உள்ள ஆன்டி - மைக்ரோபியல் தன்மை சளி, காய்ச்சல், தும்மல், மூக்கு ஒழுகல் போன்ற நோய்களை சரி செய்து, அல்சர் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

வெங்காயத்தில் உள்ள கரையக் கூடிய நார்ச்சத்துக்கள், குடலில் நல்ல பக்றீரியாக்களின் வளர்ச்சியை அதிகரித்து, செரிமானம், மலச்சிக்கல், சிறுநீர்ப்பை கோளாறுகள் போன்ற



Health Care

## மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

பிரச்சினை ஏற்படாமல் தடுக்கிறது.

வெங்காயத்தில் உள்ள ஆன்டி - செப்டிக் மற்றும் ஆன்டி - மைக்ரோபியல் பண்புகள், காசநோயை ஏற்படுத்தும் மைகோ பக்றீறியத்தை செயலிழக்கச் செய்து, காசநோய் வராமல் தடுக்கிறது.

பிரசவத்திற்கு பின் பெண்கள் வெங்காயத்தை சிறிது பச்சையாக தினமும் சாப்பிட்டால், அது தாய்ப்பால் உற்பத்தியை அதிகரிக்க உதவுகிறது.

வெங்காயத்தில் கலோரிகள், சோடியம் குறைவு மற்றும் கொழுப்புகள் அற்றது என்பதால், அது இரத்த நாளங்களின் நெகிழ்வுத் தன்மையை அதிகரித்து, இரத்த சோகை, உயர் இரத்த அழுத்த பிரச்சினை வராமல் தடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் கடைகளுக்கு தீ வைத்த நபர் கைது

## பொதுபலசேனாவுடன் தொடர்புடையவர்

நுகேகொடை மற்றும் விஜேராம பிரதேசங்களில், முஸ்லிம்களுக்கு சொந்தமான நான்கு வர்த்தக நிலையங்களுக்கு தீ வைத்த சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர், 2014ஆம் ஆண்டு முதல்பொதுபல சேனா அமைப்புடன் இணைந்து செயற்பட்ட நபராவார்" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அரசாங்க தகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

32 வயதான குறித்த சந்தேகநபர், மேற்படி வர்த்தக நிலையங்களுக்கு தீ மூட்டிய சம்பவங்களுடன் நேரடியாக தொடர்புடையவர் என்று தகவல் கிடைத்துள்ளது.

"கடந்த ஒரு மாதத்துக்குள் மட்டும், முஸ்லிம் பள்ளிவாசல்கள் இரண்டு மற்றும் முஸ்லிம்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள் இரண்டு ஆகியன வற்றுக்கு தீ மூட்டப்பட்டுள்ளன.

நுகேகொட விஜயராம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தீ வைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர், மஹரகம பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அவர், தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். அவர்,மேற்படி நான்கு சம்பவங்களுடன் நேரடியாக தொடர்புபட்டவராவார்.

அவர், கலகொட அத்தே ஞானசார தேரர் கைது செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிராக, பொறளையில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டத்துடன் நேரடியாக தொடர்புபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(இ-3)




வண்ணை திருவருள்மிகு

**ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலய**

**வருடாந்த கொடியேற்ற பெருந்திருவிழா – 15.06.2017**

நாளை மறுதினம்(15.06.2017) வியாழக்கிழமை காலை 8.30க்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு அகில இலங்கை இந்திய புகழ்பூத்த நாதஸ்வரத் தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன் கொடியேற்றப் பெருந் திருவிழா மிகச் சிறப்பாக இடம் பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலைஅலையாக வருகை தந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்திலும் நண்பகல் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் ( அன்னதானத்திலும்) கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தினைப்பெற வாரீர் வாரீர்.

கொடியேற்றப் பெருந்திருவிழா உபயகாரர்கள்

கிருஷ்ணா ஜுவல்லறி
இல. 09.கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C8782)

கிருஷ்ணா அடைவுக்கடை ,
இல, 370, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


# அமைச்சர் ஹக்கீமுக்கு பங்களாதேஷ் அழைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான பங்களாதேஷ் மக்கள் குடியரசின் உயர்ஸ்தானிகர் எம். றியாஸ் ஹமீதுல்லாஹ் நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் முகாமைத்துவ அமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஜுலை மாதம் 29 ஆம் , 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள குடிநீர் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தூதுவர் அமைச்சருக்கு அழைப்பு விடுத்தார்.

2030 ஆம் ஆண்டை நோக்கிய சவால் மிக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு - 6 குறித்தும், நீர் தொடர்பிலான ஏனைய விடயங்கள் குறித்தும் பிராந்திய நாடுகள் எவ்வாறு தம்மை தயார்படுத்திக் கொள்வது என்பதை விரிவாக ஆராய்வதே இந்த மாநாட்டின் பிரதான நோக்கமாகும். (இ-3)


**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம் செவ் 1
ல்உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7424

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 37
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7425

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 56செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSc BIT/ அரசதொழில்
தொ.இ: B/7426

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: B/7427

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 53
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: G/7469

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 5சூரிசெவ் 10 இல்
உயரம்: 158cm
தகைமை/தொழில்:BSc/ அரசதொழில்
எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர
தொ.இ: G/7473

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: G/7474

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்:அனுசம் சூரிசெவ் 2இல்
உயரம்: 152cm
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7476

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# அரசு மீது நம்பிக்கை இல்லை

# இனவாதத்தை தூண்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.தே.க. அமைச்சர் விரக்தியுடன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு காலம் கடந்தும் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்காமையின் காரணமாக நாம் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளோம். எனவே அரசாங்கம் இனவாதத்தை தூண்டுவோருக்கு எதிராக காலம் தாழ்த்தாது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் இனவாத தாக்குதல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

இனவாத தாக்குதல்களை கட்டுப்படுத்துவதற்கும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கும் பொலிஸார் அதிகாரத்தை பிரயோகிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் தாக்குதல்கள் தொடர்பாக வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு இடமளிக்க முடியாது. அரசாங்கம் என்ற வகையில் நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டன. பல வர்த்தக நிலையங்களும் தொழிற்சாலைகளும் பள்ளிவாசல்களும் தாக்கப்பட்டும் தீயிட்டு கொளுத்தப்பட்டும் உள்ளன.

எனவே இந்த விடயம் தொடர்பாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் பேசினோம். இதன் பிரகாரம் நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் பூரண நடவடிக்கை எடுக்கும் என்றும் இதற்கான பூரண அதிகாரத்தை பொலிஸுக்கு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் எம்மிடம் குறிப்பிட்டார்.

எனினும் இந்த விடயம் காலம் கடந்தும் நடந்ததாக தெரியவில்லை. எனவே பொலிஸார் சட்டம் ஒழுங்கை உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். அதற்கான பூரண அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முஸ்லிம்கள் மீதான தொடர் தாக்குதல்களுக்கு காலம் கடந்தும் நடவடிக்கை எடுக்காதமையின் காரணமாக அரசாங்கத்தின் மீது நாம் நம்பிக்கை இழந்துள்ளோம். நாட்டில் வாழும் முஸ்லிம்களும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். ஆகவே அரசாங்கம் தொடர்ந்து காலம் தாழ்த்தாமல் இனவாதத்தை தூண்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், இனவாத தாக்குதல்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சசிகலா, தினகரன், தீபக்கால் தீபா உயிருக்கு ஆபத்து





(சென்னை)

எனக்கும் தீபா உயிருக்கும் ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு சசிகலா, தினகரன் மற்றும் தீபக் ஆகியோரே பொறுப்பாகும் என பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் மாதவன் புகார் அளித்துள்ளார்.

போயஸ் கார்டனில் நடந்த சம்பவம் தொடர்பாக தீபாவின் கணவர் மாதவன் சென்னை பொலிஸ்ஆணையர் அலுவலகத்தில் அளித்த புகார் விபரம் வருமாறு. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்துக்கு சென்றிருந்த தீபா அங்கு அசாதாரணமான சூழல் நிலவுவதாக கூறி என்னை அழைத்தார். இதன் பேரில் நான் அங்கு சென்றேன்.

அப்போது அங்கிருந்த தீபக் என்னை மிரட்டினார். அப்போது அங்கிருந்த அடையாளம் தெரியாத ரவுடிகள் என்னையும், தீபாவையும் தாக்கினர். அவர்களை மீண்டும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

தீபாவுக்கும் எனக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எங்களது உயிருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கு சசிகலா, தினகரன் மற்றும் தீபக் ஆகியோரே பொறுப்பாகும்.

எனவே எங்களை தாக்கியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தீபாவுக்கும் எனக்கும் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். இவ்வாறு மாதவன் புகார் மனுவில் கூறியுள்ளார். (இ-3)

# கட்சித் தலைமை, ஆட்சி

# தெரேசாவுக்கு எதிராக மூத்த அ



**(லண்டன்)**

***பிரிட்டன் தேர்தலில் ஆளும் கன்சர்வேட் டிவ் கட்சிக்கு ஏற் பட்ட சரிவுக்கு பொறுப் பேற்று பிரதமர் தெரேசா மே தன் வசமுள்ள தலைமைப் பொறுப்பையும் ஆட்சியையும் வேறு ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என ஐந்து மூத்த அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.***

பிரிட்டனில் அண்மையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆளும கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கும் இடையே

# கொங்கோ சிறையில் தீவிரவாதிகள் தாக்குதல்

## 11 பேர் உயிரிழப்பு; 900 கைதிகள் தப்பியோட்டம்




(கின்ஷாசா)

கொங்கோவின் கிழக்கு நகரான பெனியில் உள்ள சிறையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும், சுமார் 900 கைதிகள் சிறையில் இருந்து தப்பியோடி இருப்பதாக கொங்கோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் 8 பேர் சிறைக் காவலர்கள், மேலும் 30க்கும் அதிகமான சிறைக் காவலர்கள் சிறையிலேயே இருப்பதாக வடக்கு கிவு பிராந்திய ஆளுநரான ஜூலியன் பலுகு தெரிவித்துள்ளார். தாக்குதலைத் தொடர்ந்து பெனி மற்றும் புடெம்போ பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இராணுவம் மற்றும் பொலிஸார் மட்டுமே வெளியில் செல்லலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தாக்குதலை நடத்தியவர்கள் குறித்த விரிவான தகவல்கள் இன்னும் அறியப்படவில்லை.

முன்னதாக கின்ஷாசா பகுதியில் மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனரெனகொங்கோ பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதே போல் மே மாதம் கிறிஸ்தவ செக்ட் உறுப்பினர்கள் நடத்திய தாக்குதலில்சிறையில் அடைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ தலைவர் தப்ப வைக்கப்பட்டார். (இ-3)

# தீவிரவாதிகளுக்கு எ

# 4.7 கோடி டொலர்க



(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய நாட்டில் தீவிரவாதிகளுக்கு என்று 4.7 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் தனிச் சிறை கட்ட அரசு தீர்மானித்துள்ளது.

அவுஸ்திரேலிய நாட்டில் தீவிரவாத தாக்குதல் நடத்தியும், தாக்குதலுக்கு திட்டம் தீட்டியும் கைதாகும் நபர்களை காலவரையறையின்றி சிறையில் அடைத்து வைக்கவும், ஆபத்தான தீவிரவாதிகளை கண்டதும் சுட்டுக் கொல்லவும் அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைதாகி சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தீவிரவாதிகள் பரோலில் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதர கைதிகளுக்கு அளிக்கப் படும் அனைத்துவகை சலுகைகளும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.

இதனால், அங்கிருக்கும் இதர கைதிகளையும் மூளைச சலவை செய்து தீவிர வாதிகளாக மாற்றி விடுகின்றனர். தற்போது அந் நாட்டின் நியூ

# குற்றவாளிகளுக்குத் தண்டனை வேண்டும்; மட்டக்களப்பில் மனித சங்கிலிப் போராட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை மல்லிகைத்தீவில் சிறுமிகள் மூவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில், நீதி எங்கே எனக் கோரி மட்டக்களப்பில் மனித சங்கிலிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை - மூதூர - மல்லிகைத்தீவுப் பகுதியில் சிறுமிகள் மூவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்பட்ட சம்பவத்தைக் கண் டித்து, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், இது வரை சிறுமிகளுக்கான நீதி கிடைக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து, நேற்று குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியும், பாலியல் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த மனித சங்கிலி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

குற்றவாளிகளைக் கைது செய்து, கடுமையான தண்டனை வழங்க வேண்டும் போன்ற கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறும் இந்த போராட்டத்தில் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இலங்கையில் ஏற்கனவே இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோக சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டிருந்தால், இவ்வாறான கொடுமையான சம்பவங்கள் இடம்பெறமாட்டாது என போராட்டத்தில் கலந்துகொண்ட கிழக்குப்பல்கலைக்கழக மாணவி அஜந்தினி வன்னிய சிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சிறுவர்கள் தொடக்கம் பெண்கள் மீதான வன்கொடுமைகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்ற நிலையில், நல்லாட்சி அரசாங்கம் உறங்கிக் கொண்டிருக்கின்றதா என போராட்டத்தில் கலந்துகொண்ட மாணவன் ஒருவர் கேள்வியெழுப் பினார்.

இதேவேளை குற்றவாளி களுக்கு எதிராக பாரபட்ச மற்ற தண்டனை வழங்கப் பட வேண்டும் என சிவில் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (இ-3)

# தேசிய சமத்

# வெள்ளை ம

# ஆயிரக்கண

(வோஷிங்ட

தேசிய சமத்து

டனில் உள்ள

முனனால் ஆயி

ணைந்து பாரி

முன்னெடுத் து

நேற்று முன

முன்னெடுக்கப்ப

கலந்துகொண்

எடுத்துக்காட்டிய

அதிகரிக்குமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யை விட்டு விலகுங்கள்;

# ...அமைச்சர்கள் போர்க்கொடி

கடும் போட்டி நிலவியது. மொத்தம் உள்ள 650 இடங்களில் கன்சர்வேட்டிவ் கட்சி 318 இடங்களிலும் தொழிலாளர் கட்சி 262 இடங்களிலும் வெனறது. ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்காததால், வடக்கு அயர்லாந்தின் டியுபி கட்சியுடன் கூட்டணி அமைத்து கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சியமைக்க உள்ளது. தெரசா மே மீண்டும் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், கடந்த தேர்தலில் பெரும்பான்மைக்கும் அதிகமானஇடங்களைவென்ற கன்சர்வேட்டிவ் கட்சியால், இம்முறை பெரும்பான்மை பெற முடியாமல் போனது அக்கட்சியினரிடையே அதிருபதியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சரிவுக்கு பிரதமர் தெரேசா மே எடுத்த சில நடவடிக்கைகள்தான் காரணம் என. அவர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில், கட்சித் தலைமையையும், பிரதமர் பதவியையும் தெரசா மே, மற்றொரு முக்கிய தலைவரான போரீஸ் ஜான்சனிடம், ஒப்படைக்க வேண்டும் என ஐந்து அமைச்சர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். பிரெக்ஸிட் நடவடிக்கைகை முன்னெடுத்துச் செல்ல ஜான்சன் சரியான நபர் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

முன்னதாக தேர்தலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பொறுப்பேற்று பிரதமர் தெரசா மேயின் நெருங்கிய ஆலோசகர்களான திமோதி மற்றும் ஹில் ஆகியோர் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அ.தி.மு.க அரசு எந்த திட்டங்களையும் செயற்படுத்தவில்லை - மு.க.ஸ்டாலின்



(தூத்துக்குடி)

அ.தி.மு.க.அரசு எந்த திட்டங்களையும் செயற்படுத்தவில்லை என்று தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார்.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட முன்னாள் தி.மு.க. செயலாளர் என்.பெரியசாமியின் உருவப்படம் திறப்பு விழா தூத்துக்குடியில் நேற்று நடந்தது. இதில் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு என். பெரியசாமியின் உருவப்படத்தை திறந்து வைத்து பேசினார்.

முன்னதாக மு.க.ஸ்டாலின் தூத்துக்குடி சில்வர்புரம் பகுதியில் உள்ள மாடன் குளத்தில் நடைபெற்று வரும தூர்வாரும் பணிகளை பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது.


தமிழகத்தில் உள்ள 89 தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் முடிந்த வரை குளங்கள், குட்டைகள், ஏரிகள், கால்வாய்கள் உள்ளிட்ட நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தூர்வாரும் பணியில ஈடுபட்டு வருகின்றனர். தமிழகம் முழுவதும் தி.மு.க. உறுப்பினர் இல்லாத தொகுதியிலும் கூட தி.மு.கவினர் சிறப்பாக தூர்வாரும் பணியல் ஈடுபட்டு வருகின்றனர். இப்பணிகளை நானே நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறேன். தி.மு.க. ஆட்சியில் இல்லாவிட்டாலும் மக்கள் பணிகளை நிறைவேற்றுவதில் தீவிரமாக செயற்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்போது பினாமி ஆட்சி நடக்கிறது.

மக்களுக் கான திட்டங்கள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை. விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச் சினைகளை போக்க தமிழக அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவில்லை.

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார். பின்னர் மாடன் குளத்தின் கரையில் மரககன்றுகள்நடும்பணியை மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். (இ-3)

# ...என்று அவுஸ்திரேலியாவில் ...கள் செலவில் தனிச் சிறை



சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள சிறையில் மட்டும் தீவிரவாதவழக்குகளில்தொடர்புடைய 33 கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை இதர கைதிகளிடம் இருந்து தனிமைப் படுத்தி. தனியாக அடைத்து வைப்ப தறகாக புதிய சிறைச்சாலை ஒன்றை கட்ட அரசு திட்ட மிட்டது. இதையடுத்து. 4.7 கோடி டொலர்கள் செலவில் தீவிரவதிகளுக்கு என தனிச் சிறை கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மிக உயரிய கண்காணிபபு மற்றும் பாதுகாப்பு அம்சங்களுடன் கட்டப்படவுள்ள இந்த புதிய சிறைச்சாலை முதல்கட்டமாக 54 கைதிகள் வரை அடைத்து வைக்கும் வசதியுடன் அமையும். பின்னர், அதிகளவிலான கைதிகளை கையாள்வதற்கு வசதியாக விரிவாக்கம் செய்யப்படும் என நியூ சவுத் வேல்ஸ் மாநில சிறைத்துறை தலைமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# மரண தண்டனையிலிருந்து கடாபி மகன் விடுதலை

(டிரிபோலி)

மரண தண்டனையில் இருந்து லிபியா முன்னாள் ஜனாதிபதி முவம்மர் கடாபி மகன் விடுதலையானார்.

லிபியா ஜனாதிபதியாக இருந்த முவம்மர் கடாபி கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் புரட்சியின் மூலம் பதவி இழந்தார்.

இந்நிலையில் அவரது இளைய மகன் சயீப் அல்-இஸ்லாம் கடந்த 2011ஆம் ஆண்டு நைஜருக்கு தப்பிச் சென்ற போது பாலை வனத்தில் கைது செய்யப்பட்டார்.



4 ஆண்டு விசாரணைக்கு பிறகு அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. துப்பாக்கியால் சுட்டுக் கொல்லும்படி உத்தரவிடப்பட்டது.

அவருக்கு பொது மன்னிப்பு வழங்கும்படி குடும்பத்தினர் கோரிக்கை விடுத்து இருந்தனர். அதை ஏற்று அவரை லிபியா அரசு விடுதலை செய்தது.

மரண தண்டனையில் இருந்து விடுதலை செய்யப்பட்டசயீப் அல்-இஸ்லாம்லண்டன் பொருளாதார கல்லூரியில் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ...மத்துவத்தை வலியுறுத்தி ...ா மாளிகையின் முன்பாக ...ணக்கானோர் ஆர்ப்பாட்டம்

(...ிங்டன்)

...மத்துவத்தை வலியுறுத்தி, வோஷிங் ...ள்ள வெள்ளை மாளிகையின் ...ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று ...பாரிய ஆர்ப்பாட்டமொன்றை ...் துள்ளனர்.

...முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ...கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில் ...ாண்டவர்கள், பாகுபாட்டை ...ட்டியதோடு, தமது உரிமையை ...மாறும் கோரினர். (இ-3)

# ஈரானைத் தொடர்ந்து சவுதியைத் தாக்குவோம்

## ஐ.எஸ். தீவிரவாதிகள் மிரட்டல்

(டுபாய்)

ஈரானைத் தொடர்ந்து சவுதி அரேபியாவில் தாக்குதல் நடத்தப்போவதாக ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

ஈரான் பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமையன்று தீவிரவாதிகள் துபபாக்கிச் சூடு நடத்தினர். கொமேனி நினைவிடத்திலும் தாக்குதல் நடதத்தப்பட்டது. இந்த தாக்குதல்களில் சுமார் 17 பேர் உயிரிழுந்தனர். பலர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. அத்துடன், ஈரானில் உள்ள ஷியா பிரிவினர் மீது மேலும் தாக்குதல்கள் நடத்தப்படும் என மிரட்டியுள்ளனர். இதன்மூலம் ஈரானில் முதல் முறையாக ஐ.எஸ். பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதேபோன்று சவுதி அரேபியாவிலும் தாக்குதல் நடத்தப்படும் என ஐ.எஸ். அமைப்பு மிரட்டல் விடுத்திருக்கிறது. சமீபத்தில் வெளியாகி உள்ள ஒரு வீடியோவில், முகத்தை மறைத்தபடி பேசும் 5 தீவிரவாதிகள், ஈரானில் உள்ள ஷியா பிரிவினருக்கும், சவுதி அரேபியா அரசாங்கத்திற்கும் மிரட்டல் விடுத்துள்ளனர். 'ஈரானில் முதல் முறையாக தாக்குதல் நடத்தப்படும். ஈரானைத் தொடர்ந்து சவுதி அரேபியாவில் தாக்குதல் நடத்துவோம்' என கூறியுள்ளனர்.

சர்வதேச தீவிரவாத அமைப்புகளின் தகவல்களைத் தேடும் அமைப்பான சைட் புலனாய்வுக்குழு இந்த தகவலை வெளியிட்டிருக்கிறது. மேலும், இந்த வீடியோ ஈரான தாக்குதலுக்கு முன்னதாக பதிவு செய்யப்பட்டிருக்கலாம என்றும் தெரிவித்துள்ளது.


சவுதி அரேபியா, எகிப்து, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் கட்டாருடனான தூதரக உறவை முறித்துக் கொண்டதால் மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றமான சூழ் நிலை நிலவுகிறது. இந்த சூழ் நிலையல் சவுதியில் தாக்குதல் நடததப்போவதாக ஐ.எஸ். அமைப்பு கூறியிருப்பதால் பதற்றத்தை அதிகரித்துள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்போம்

ஐக்கிய நாடுகள் சபையின் நாடுகளுக்கு இடையிலான தொழிலாளர் அமைப்பினால் ஜூன் 12ஆம் திகதி உலக சிறுவர் தொழிலாளர்கள் எதிர்ப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஜூன் மாதம் சிறுவர் பாதுகாப்பு மாதமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் தொழிலாளர் என்பது 14 வயதுக்குட்பட்டவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல் ஆகும். இச் சிறுவர் தொழிலாளர்கள் எவ்வாறு உருவாகின்றனர் என நோக்குவோம் ஆயின் அசாதாரண சூழ்நிலைகளால் பெற்றோரை இழந்த பிள்ளைகள், வறுமைக் கோட்டுக்கு உட்படுவோர், பெண் தலைமைத்துவக் குடும்ப நிலைகளில் உள்ள பிள்ளைகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொழிலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.



இவர்களே குடும்பத்தைக் கவனிக்க வேண்டியவர்களாகவும் சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பை சுமக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையினாலும் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற போக்குகளாலும் சிறுவர்கள் வேலைக்குச் செல்கின்றனர். தாய், தந்தையரின் மறு திருமணம், பெற்றோரின் கல்வி அறிவின்மை போன்றவை முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன.

படிக்கும் வயதில் தமது இளமைக்கால சுகபோகங்களை மகிழ்ச்சிக்குரியதாக மாற்றுகின்ற காலத்தில் கல்வியின் எதிர்கால பெறுமதியினை தெரிந்தும் தெரியாமலும் நாளாந்த கூலிக்குச் செல்வதன் மூலம் உடனடி பணத் தேவையை நிறைவு செய்பவர்களில் சிலர் அதனை ஆடம்பரத் தேவை கருதியும் பயன்படுத்துகின்றார்கள்.

"கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்பது போல தொலைக்காட்சி விளம்பரங்கள், கைத்தொலைபேசி பாவனைகள், சுவரொட்டிகள் போன்றன சிறுவர்கள் மனங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவ்வாறு வேலைக்குச் செல்லப்படும் சிறுவர்கள் உழைப்பாளி வர்க்கத்தினாலே சுரண்டப்படுகின்றார்கள்.

மூலை முடுக்குகளிலே காணப்படும் தொழில் நிலையங்கள், செல்வந்த குடும்பங்கள் இவர்களை லாவகமாகப் பயன்படுத்துகின்றார்கள்.

அதிக வேலை குறைந்த கூலி என்ற வகையில் சுரண்டப்படுவது மட்டுமல்லாமல் பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் வன்முறைக்கும் உட்படுகின்றனர்.

நகரப் பகுதியிலே கைக் குழந்தைகளை கைகளிலே ஏந்தியபடி தோள்களிலே சுமந்த வண்ணம் இளம் குடும்பப் பெண்கள் அக்குழந்தைகளை காட்சிப் பொருள்களாக, பணயப் பொருட்களாக வைத்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே நாம் உங்களிடம் கையேந்துகின்றோம். என்ற வகையில் பணம் சம்பாதிக்கின்றனர்.

1981 நவம்பர் 24 ஆம் திகதி சிறுவர் உரிமைகள் சாசனத்தின் மூலம் சிறுவர் உரிமைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. 18 வயதுக்கு குறைந்தவர்கள் சிறுவராக வாழ்வதற்கும் தகாத பயன்பாட்டுக்கு உட்படுவதில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் கல்வி மற்றும் சுதந்திர கலாசார விடயங்களில் ஈடுபடுவதற்கும் சுகாதார முறையில் தமது வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்கும் உரிமை உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது.

1956 இலக்கம் 47 ஐ கொண்டுள்ள சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்தும் சட்டத்தின் 13 ஆம் 14ஆம் வாசகத்தின்படி கட்டாயக் கல்வியின் வயதில் இருக்கின்ற 14 வயதுக்கு குறைந்த பிள்ளையொன்றை தொழில் ஒன்றில் ஈடுபடுத்துவது தவறானதாகும்.



திருமதி. பரமேஸ்வரி
பரமசிவம்
ஆசிரியர்
யா/ நாவாந்துறை
றோ.க. வித்தியாலயம்.

20 ஆவது வாசகத்தில் 14 - 18 இற்கு இடைப்பட்ட இளவயதினரை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்துவது தவறாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் உழைப்பை சுரண்டுவதில் இருந்து பாதுகாத்தல். 14 - 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நெறிகளுக்கு கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களில் இருந்து தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் இதற்கு எதிராக செயற்படுபவர்களுக்கு ஒருவருட சிறைத்தண்டணை அல்லது 10,000 ரூபா தண்டப் பணம் செலுத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமை சாசனத்தின்படி சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டியதோடு பிள்ளைகள் சிறுபராயத்தை கல்விக்கும் அவர்களது ஏனைய அபிலாசைகளை விருத்தி செய்து கொள்வதற்கும் சந்தர்ப்பமளித்து, பாதுகாப்பதும் சமூக பொருளாதார அல்லது வேறு காரணிகளால் பிள்ளைகள் கல்வியில் இருந்து இடைவிலகுவதை தவிர்ப்பதும் அனைவரதும் தலையாய கடமையாகும்.



சிறுவர்களை வழிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பும் கடமையுமாகும். பாடசாலைக் கல்வியினை ஒருசீராகக் கற்பதனால் பெறக்கூடிய நன்மைகளை அவர்கள் விளங்கி ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்களை நெறிப்படுத்துவதுடன் சிறு வயதில் வேலைக்குச் செல்வதனால் உழைப்பாளி வர்க்கத்தினால் சுரண்டப்படுகின்றீர்கள் என்பதையும் அப்போது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படலாம் எனவும் இதனால் உடல், உள பாதிப்புக்களுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாக காணப்படுவீர்கள் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். சிறுவயதில் அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய விடயங்களான கல்வி, விளையாட்டு, ஓய்வு, சுகமான நித்திரை, நல்ல நண்பர்கள் போன்ற பல உள்ளன எனவும் தெளிவுபடுத்த வேண்டும்.

அவர்களிடம் ஆற்றல்கள், வெளிப்பாடுகள் நிறையவே உள்ளன. அவற்றை வெளிக்கொணருவதற்கு நாம் சந்தர்ப்பமளிக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகளே என்பதை உணருவோம் உணர்த்துவோம்.

# அந்தோனி! அருள் தா ஐயா!



விழிக்குடத்தில் நீருமில்லை அழுது முடிக்க!
வேதனையை விலக்கிமெள்ள ஆற்றுப்படுத்த
எழுந்துவரப் பெற்றவளும் அருகில் இல்லை!
ஏறெடுத்துப் பார்த்தேனுன் அன்பு முகத்தை!
பழிக்கஞ்சா வஞ்சகரால் புழுவாகத் துடித்துப்
பரிதவித்தோம்! தீக்காட்டு மான்கள் போலக்
கொழுகொம்பாய் எமைத்தாங்கிக் கருணை ஊற்றாய்
கிறிஸ்துவிடம் பரிந்துரைப்பாய் எந்த நாளும்!

சீதமலர் காற்றிலாடி வாசம் வீசச்
சோலைக்குயில் பூபாளம் மீட்ட யாழின்
நாதமலை பாயத்தேர் மீத மர்ந்து
நாலு திக்கும் பக்தருனை வாழ்த்தப்பொன்னின்
பாதமதைக் கடல் முத்தம் வைத்துச் சத்தம்
போடுகின்ற பாஷையூரில் உறைந்த முத்தே!
ஆதரிப்பாய்! அடியோரை என்றும் கோடி
அற்புதனே! அந்தோனி! அருள்தா ஐயா!

சிங்கராயர் வசீகரன்

(13.06.2017 இன்று செவ்வாய்க்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் கோயிலின் தேர்த்திருவிழா நிகழ்வை முன்னிட்டு எழுதப்பெற்ற கவிதை)

# அந்தோனியார் ஆலய கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கேரதீவு வீதி நாவற்குழி புனித அந்தோனியார் ஆலய கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும்.

தொடர்ந்து இடம்பெறும் இவ்வாலயத் திருவிழாவில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. அன்றையதினம் காலை 7 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையோடு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (இ-3)

# பெரியவிளான் அந்தோனியார் ஆலயத் திருவிழாத் திருப்பலி

(இளவாலை)

பெரியவிளான் அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாத் திருப்பலி இன்று காலை 7 மணிக்கு நற்கருணை நாதர் சபையின் இலங்கைக்கான மாகாண துணை முதல்வர் அருட்பணி கலாநிதி ஜஸ்டின் சவ்ஹான் அடிகளார் தலைமையில் இடம்பெறும். (இ-104)

# யானை தாக்கி மதகுரு பலி!

(கொழும்பு)

பௌத்த மதகுரு ஒருவர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொச்சிக்கடை, கட்டான பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஊர்வலத்தில் சென்ற யானையொன்று தாக்கியதிலேயே குறித்த பௌத்த மதகுரு பலியாகியுள்ளார்.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

இவர் 25 வயதுடைய களனிப் பல்கலைக்கழக பட்டதாரியாவார் என தெரிவிக்கப்படுகின்றது.

கொச்சிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுடனான உறவுகளால் இந்தியாவுடனான உறவுகள் ஒருபோதும் பாதிக்கப்படாது

(கொழும்பு)

சீனாவுடனான இலங்கையின் உறவுகளால் இந்தியாவுடனான உறவுகளுக்குப் பாதிப்பு ஏற்படாது என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்ராங்கனி வகீஸ்வரா தெரிவித்துள்ளார். டில்லியில் இருந்து வெளியாகும் 'தி ஸ்டேட்மன்' நாளிதழுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



சொந்த பொருளாதார அபிவிருத்தி நலனைக் கருத்தில் கொண்டு, எல்லா நட்பு நாடுகளுடனும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவே கொழும்பு விரும்புகிறது. விடுதலைப் புலிகள் மீண்டெழுவதற்கான சாத்தியங்கள் இல்லை. நாட்டுக்கு வெளியே உள்ள சிலர் தான் அவ்வாறான பரப்புரைகளை மேற்கொண்டு உணர்வுகளை தூண்டுகின்றனர். ஆனால் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தளவானவர்கள்.

முப்பது ஆண்டுகளாக நீடித்த போரினால், நாங்கள் ஒரு கடினமான காலகட்டத்தைக் கடந்து வந்திருக்கிறோம். இப்போது, நாங்கள் மக்களுக்காக நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

ஆனாலும், ஒரு நாட்டுடனான உறவுகளை இழந்து இன்னொரு நாட்டுடனான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதாக யாரும் கூற முடியாது.

நாட்டில் முதலீடுகளை கவர்வதற்காக இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, ஆசியான், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்றவற்றுடன் இணைந்து பணியாற்ற கொழும்பு விரும்புகிறது.

இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்பாட்டை செய்து கொள்வதற்கு பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

திருகோணமலை பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்கும் உடன்பாட்டில் கையெழுத்திடுவதில் இந்தியா ஆர்வம் கொண்டுள்ளது. ஆனாலும் இருதரப்புகளும் எப்போது உடன்பாட்டுக்கு வரும் என்று கூறும் நிலை இப்போது இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (3.8)

# அமெரிக்க பாதுகாப்புச் செயலருடன் இலங்கை பாதுகாப்புச் செயலர் சந்திப்பு



(கொழும்பு)

அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ஜேம்ஸ் மாட்டிசை, இலங்கை பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

சிங்கப்பூரில் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதி வரை நடந்த சங்கிரிலா கலந்துரையாடல் எனப்படும், 16 ஆவது ஆசிய பாதுகாப்புக் கருத்தரங்கின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறுகிய நேரம் இடம் பெற்ற இச்சந்திப்பின் போது இருவரும் தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டு, உரையாடியுள்ளனர்.

எனினும் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான எந்த தகவல்களும் அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை.

கடந்த ஜனவரியில் அமெரிக்க பாதுகாப்புச் செயலராகப் பதவியேற்ற பின்னர், ஜேம்ஸ் மாட்டிசை இலங்கையின் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த உயர்மட்டப் பிரமுகர் ஒருவர் சந்தித்திருப்பது இதுவே முதல்முறையாகும். (3-8)

# புகையிரதத்தில் மோதுண்டு சகோதரர்கள் பலி

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு சகோதரர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புகையிரத தண்டவாளத்தில் நின்று செல்பி எடுத்துக் கொண்டிருந்த போதே மருதானையிலிருந்து அளுத்கம நோக்கிச் சென்ற கடுகதி புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்.

இதன்போது அநுராதபுரத்தைச் சேர்ந்த 24 மற்றும் 12 வயதுடைய சகோதரர்களே உயிரிழந்துள்ளனர்.

12 வயதுடைய சிறுவன் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த 24 வயதுடைய நபர் நேற்று முன்தினமே சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிங்கப்பூரிலிருந்து வருகை தந்த மகனை அழைப்பதற்காக குடும்பத்தினர் அநுராதபுரத்திலிருந்து கொழும்பிற்கு வருகை தந்ததாகவும் அதன் பின்னர் காலி முகத்திடலை பார்வையிடச் சென்ற போதே அனர்த்திற்கு முகம் கொடுத்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (இ-8-3)

## உதவிப் பணிகளில் ஈடுபட

# கொழும்பை வந்தடைந்தது அமெரிக்க போர்க்கப்பல்



(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த வழிகாட்டல் ஏவுகணைப் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ் லேக் எரி (USS Lake Erie) 14 நாட்கள் பயணமாக, கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில், மனிதாபிமான உதவிப் பணிகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே இப் போர்க்கப்பல் கொழும்பு வந்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. 360 அமெரிக்க கடற்படையினர் இப் போர்க்கப் பலில் கொழும்பு வந்துள்ளனர். இவர்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதவிப் பணிகளில் ஈடுபடவுள்ளதுடன், இலங்கை கடற்படையினருடன் இணைந்து, பல்வேறு பயிற்சிகளிலும் ஈடுபடவுள்ளனர்.

ஜூன் 25 ஆம் திகதி வரை யு.எஸ்.எஸ்.லேக் எரி போர்க்கப்பல் கொழும்பில் தரித்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

## இன்று ஒரு தகவல்

### யோசனைத் திலகங்களுக்கு ஒரு யோசனை

சிலபேர் வாயைத் திறந்தாலே போதும், வெறும் யோசனையாகத்தான் கொட்டும். இதை இப்படிச் செய்திருக்கலாம். இனி நீங்கள் இப்படிச் செய்யுங்கள் என்று ஏதாவது சொல் லிக் கொண்டே இருப்பார்கள்.

இந்தக் காலத்தில் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்கிற நினைவு பலருக்கும் அதிகமாகிவிட்டதாலும், மற்றவர்களின் யோசனையைப் பின்பற்றி நடந்தால் அது கேவலம் என்றும் இது ஒரு வகையில் எடுப்பார் கைப்பிள்ளைத்தனம் என்று எண்ணுவதாலும் யோசனை வழங்கும் திலகங்கள் அவ்வளவு பேரும் ஓர் எல்லைக்குள் தங்களை வரையறுத்துக் கொண்டு நின்று கொள்வது நல்லது.

யார் யாருக்கு நாம் யோசனை சொல்லலாம்? இதில் சில வரையறைகளும் உண்டு.

முதலாவது, யோசனை சொல்கிறவருக்கும் அதைக் கேட்டுக் கொள்ளும் நபருக்கும் இடையே ஏதோ ஒருவகையில் பிணைப்பு இருக்க வேண்டும். பிணைப்பு இருந்தால் மட்டும் போதாது. இடைவெளியில்லாத அளவுக்கு மனதளவில் நெருக்கம் இருக்க வேண்டும்.

அல்லது கேட்டுக் கொள்கிறவர்களுக்காகவாவது நம் நன்மைக்குத்தானே சொல்கிறார் என்கிற மனநிலை இருக்க வேண்டும். யோசனைகள் உருப்படியானவையாகவும் நடைமுறைக்குச் சாத்தியமானவையாகவும் நன்மையில் முடிகிறவையாகவும் இருக்க வேண்டும்.

யோசனை சொல்கிறவர்கள் வெற்றிகரமானவர்களாகவோ அல்லது வயதால் தகுதி பெற்றவர்களாகவோ இருக்க வேண்டும் என்று இந்த உலகம் எதிர்பார்க்கிறது.

நிச்சயமாகக் கேட்டுக் கொள்ளமாட்டார்கள் என்று தெரிந்த இடத்திலும் யோசனைகளை உதிர்க்க வேண்டாம். யோசனைகளை ஆர்ப்பாட்டமாகவும் உரத்த குரலிலும் பெருமை பிடிபடாத வகையிலும் சொல்லாமல் இதமாக கனிவாக அக்கறையையும் அதில் குழைத்துச் சொல்ல வேண்டும்.

நான் இதே தவறைச் செய்து விட்டு இப்போது கஷ்டப்படுகிறேன். நீங்களாவது இதிலிருந்து தப்பிக்க வேண்டும் என்கிற பாணியில் நம் அனுபவங்களைப் பேச வேண்டும். வெறும் யோசனைகளைச் சொல்வதை விடுத்து நம்மையும் சம்பந்தப்படுத்தி பேசுவது பலனைத் தரும்.

யோசனைகளை பலர் முன்னிலையில் சொல்வது தவறு. இதை எவரும் விரும்புவது இல்லை

இப்படியெல்லாம் செய்யாமல் இஷ்டத்திற்கு மற்றவர்களுக்கு யோசனைகளை வழங்கிக் கொண்டு இருந்தால் சரிதான் போய்யா உன் வேலையை பார்த்துக்கிட்டு என்கிற பதிலையும் இதைவிட கடுமையான சொற்களையும் கேட்க வேண்டி வரும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

(தொடர்ச்சி...)

இவ்விழாவிற்கான செலவு வீண்விரயமே. இச்செலவை வவுனியா மாவட்ட பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் செய்திருப்பதற்கான நியாயபூர்வமான காரணங்கள் உள்ளன. எனினும் இதற்கான சாட்சிகள் விசாரணைக்குழு முன் வைக்காத நிலையில் இச் செலவுகளுக்கு கௌரவ அமைச்சரே பொறுப்பு எனச் சுட்டிக்காட்ட இக்குழுவிற்கு முடியாதுள்ளது.

**4.8 ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இதுவரையில் நன்கு வெற்றி அளிக்கவில்லை எனத் தெரிந்திருந்தும் தவ றான செல்வாக்கை செலுத்தி நீர்ப்பாசனத் திணைக்க ளத்திடமிருந்து சாத்தியக்கூற்று அறிக்கையை பெற்று புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தினை முன்னெ டுத்து 32 மில்லியன் ரூபாவை வீண்விரயம் செய்தமை.**

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைக்குழு முறைப்பாட்டாளர் சம்பந்தப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகளது சாட்சியங்களை பதிவு செய்ததோடு விசாரணையின் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட ஆவணச் சான்றுகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டது. அதற்கு மேலதிகமாக களப் பரிசோ தனை செய்ததுடன் மாயவனூர் கிராம மக்களான பயனா ளிகளையும் சந்தித்து அவர்களது கருத்துகளையும் பதிவு செய்துள்ளது.

புழுதியாறு நீர்ப்பாசனத் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி கிராமத்தில் மாயவனூர் என்னும் கிராமத்தில் மகரநாட்டிலிருந்து குடியேறி தலா 1/2 ஏக்கர் மேட்டுக் காணிகளை பெற்று குடியிருக்கும் 100 குடும்பங்களுக்கு அவர்கள் தம் காணியில் மேட்டு நிலப் பயிர்செய்கையை செய்து அவர்களது வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்க மாக புளிக்கன் குளத்தில் இருந்து நீர் கால்வாய் வெட்டி நீரை கொண்டுவந்து சுமார் 20 அடி உயரத்தில் உள்ள மேட்டு நிலத்துக்கு டீசலினால் இயங்கும் நீர்ப்பம்பி மூலம் நீரை மேலேற்றி நீரை விநியோகிக்கும் திட்டமாகும்.

இது போன்ற ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கூட்டு விவசாயிகள் பங்கு பற்றும் அடிப்படையில் கடந்த காலங்களில் (1980-90) ஆரம்பிக்கப்பட்டு அதாவது நாட்டில் உப உணவுப் பயிர்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டிருந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அரச உதவி இன்மையாலும் மேலதிக (Over Head) செலவு காரணமாகவும் விவசாயிகளால் கைவிடப்பட்ட திட்டமா கும். பின்னர் முத்தையன் கட்டு திட்டத்தில் யுத்தத்தின் பின்னர் ICRC இன் உதவியுடன் மீள ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் அத்திட்டம் பூரண வெற்றியளிக்கவில்லையாயினும் நீர் இறைப்பு இயந்திரங்களை இயக்குவதற்கு கூடிய செலவு காரணமாக உச்ச பயனைப் பெறமுடியவில்லை.

அதே நேரத்தில் விவசாயத் திட்டமொன்றை செயற்படுத்த திட்டமிடும் பொழுது நீர்ப்பாசனம் தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கையை மாத்திரம் நம்பியிருக்காது விவசாய சமூக பொருளாதார சாத்தியக்கூற்று அறிக்கைகளையும் பெற்றே திட்டத்தில் முதலீடு செய்யவேண்டும் என்பது யாவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் நியதியாகும். எல்லா செயற்றிடங் களையும் செயற்படுத்துவது அமைச்சு கொள்கைத்தீர்மானம் எடுப்பது தான் அமைச்சர் செய்யும் பணி என அமைச்சர் சார்பாக விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த அமைச்சின் செயலாளருக்கு ஏன் மேற்படி விடயம் தெரியவில்லை என்பது அவரது சாட்சியங்களின் உண்மைத்தன்மையில் விசார ணைக்குழு தனது சந்தேகத்தை தெரிவிக்கின்றது.

இத்திட்டப் பயனாளிகள் அரை ஏக்கர் மேட்டுக்காணியை மாத்திரம் கொண்ட கூலித் தொழிலாளர்கள். ஓரிரு குடும் பத்தவர்கள் தவிர மற்றவர்கள் பொருளாதார ரீதியில் ஏழை கள். ஏழைகள் சேமிப்பு அற்றவர்கள். டீசல் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்க நிதி வசதியற்றவர்கள். அவர்களால் இத்திட்டத்தை இயக்க முடியாது என்பதுடன் அவர்களை ஒன்றிணைக்கும் ஓர் அமைப்பேனும் இத் திட்டத்தை இயக்கு வது தொடர்பாக ஒழுங்காக இயங்குவதாக தெரியவில்லை.

அத்தோடு முக்கியமாக ஒரு விடயம் விவசாயத் திணை க்களம் இச் செயற்றிட்டத்தில் இணைக்கப்படவில்லை. இணை க்கப்பட்டிருப்பின் மக்களது அனுபவத்தின் படியும் மண் வளத்தின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய நீரை அடிப் படையாகக் கொண்டு ஒவ்வோர் விவசாயக் குடும்பத்துக்கு மான பயிர்ச்செய்கை அட்டவணையை (Cropping Calen-dar) தயாரித்து இத்திட்டத்தை சிறப்பாக இயக்கியிருக்க சந்தர்ப்பம் உண்டு.

பயனாளிகளின் கருத்துப்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நீர் இறைக்கும் இயந்திரம் இயக்கப்படவில்லை யெனவும் தங்களோடு கலந்துரையாடப்படாமல் செயற்படு த்தப்பட்ட திட்டமெனவும் கருத்து தெரிவித்துள்ளதோடு இத்தி ட்டத்துக்கு பதிலாக சூரிய சக்தியால் இயங்கும் செலவு குறை ந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை பூட்டியிருக்கலாம் எனவும் ஒவ்வொரு காணிக்கும் ஒவ்வொரு கிணறை தந்திருக்கலாம் எனவும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். நீர்பாய்ச்சு வாய்க் கால்கள் நல்ல முறையில் நிர்மாணிக்கப்பட்டு இருப்பினும் அவை பராமரிக்கப்படாமையினால் செடிகள் வளர்ந்தும்




சேதமாகியும் இருப்பது பயனாளிகளோ அல்லது அத் திட்ட த்தை நிர்மாணித்த திணைக்களத்தினது அக்கறையின் மையை காட்டுகின்றது.

விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர், கௌரவ விவசாய அமைச்சரின் கோரிக் கையின்படியே இத் திட்டத்தை செயற்படுத்தியதாகவும், வாய்க்காலில் நீர் இருப்பதால் மறைமுகமாக நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து, கிணறுகளில் நீர் மட்டம் உயர்வதற்கான சாத்தியம் உள்ளது எனத் தெரிவித்துள்ளதுடன் டீசல் நீர் இறைப்பு இயந்திரத்தின் இயக்க செலவு அதிகமாக இருக்கும் (Overhead Expenditure) என்பதையும் ஏற்றுக் கொண்டு ள்ளார். அதே நேரத்தில் இத் திட்டம் பயனளிக்க காலம் எடுக்கும். பின்னர் சரியாக வரும் என்று கருதப்பட்ட விசாரணையின் பொழுது கௌரவ விவசாய அமைச்சர் வழங்கிய விளக்கம் பூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது எனக் குழு கருதுகின்றது.

நீண்டகால யுத்தம் காரணமாக வட மாகாணத்தின் முக்கிய வாழ்வாதார துறையாகிய விவசாயத்துறை பெரிதும் பாதி க்கப்படுகின்றதுடன் தேசிய தரத்துக்கு இத் துறையை மேம் படுத்த பல வேலைத் திட்டங்களை செயற்படுத்தப்பட வேண்டிய இக் காலப்பகுதியில் ரூ.32 மில்லியன் செலவு செய்து நடைமுறைப்படுத்தப்படாது உள்ள இத் திட்டத்திற்கு செய்ய ப்பட்ட செலவு ஓர் வீண் விரயம் என்ற நிலைக்கு தள்ளப் பட்டுள்ளது.

கௌரவ அமைச்சர்களின் நெருக்குதல் காரணமாக மற்றைய தொடர்புடைய திணைக்களங்களது உதவி பயனா ளிகளது பொருளாதார நிலை என்பவற்றை கருத்தில் எடுக் காது நிர்மாணிக்கப்பட்ட இத் திட்டம் எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை. இதற்கு கௌரவ விவசாய நீர்ப்பாசன அமைச்சரே பொறுப்புக் கூற வேண்டும் என இக் குழு அபிப்பிராயப்படுகின்றது.

**4.9 (அ). யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங் கத்திற்கு 2014 ஆம் ஆண்டு மே மாதம் வரை தலை வராக இருந்த பெரியதம்பி இராசநாயகம் இரஞ்சன் என்பவரை நியாயமான காரணங்கள் இன்றி கூட்டுறவு ஆணையாளருக்கு ஊடாக அதிகார துஷ்பிரயோகம் மூலம் பதவி நீக்கம் செய்தமை.**

யாழ்கோ நிறுவனம் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் ஒன்றாகும். அதை சங்கத்தின் உப விதிகளின்படி பணிப்பாளர் சபைக்கு 9 அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் இருந்தது. ஆனால் மத்திய அரசாங்கத்தினால் ஆரம்பிக் கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி கருத்திட்டத்தினால் உருவாக் கப்பட்டு பின்னர் கூட்டுறவு சங்கம் என்ற வலை அமைப்பு க்குள் அதன் நிர்வாகம்கொண்டுவரப்பட்ட பொழுதும் மத்திய கால்நடை அபிவிருத்தி அமைச்சினாலும் அரச அதிபரினா லும் இத் திட்டத்துக்கு பெருமளவு நிதி வழங்கப்பட்ட காரணத்தி னால் அதன் நிதியை பாதுகாக்கும் நோக்கில் பணிப்பாளர் சபைக்கான இரு அங்கத்தவர்களை அரசாங்க அதிபரின் சிபார்சில் நியமிக்கப்பட வேண்டும் என்ற கடப்பாடு கூட்டுற வுச்சங்க துணை விதி 35.1இன் கீழ் உள்ளது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் அவர்கள் 2014 ஆம் ஆண்டு அரசாங்க அதிபரின் சிபார்சைப் பெறாது 01.05. 2014 இலிருந்து திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, திரு.கந் தையா மகாதேவன்ஆகிய இருவரையும் பணிப்பாளர் சபை க்கு நியமித்துள்ளார். இந் நியமனம் மூலம் முன்னர் அரசாங்க அதிபரின் சிபார்சின்படி பொதுச் சபைக்கு நியமிக்கப்பட்டு பொதுச் சபையால் தலைவராக தெரிவு செய்யப்பட்டு 30.04. 2014 வரை தலைவராக கடமையாற்றிய திரு.ரஞ்சனது பதவி பறிக்கப்பட்டுள்ளது. அப் பதவிக்கு அரச அதிபரின் சிபார்சி னால் நியமிக்கப்படாத திரு.இ. சர்வேஸ்வரா என்பவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கான சிபார்சு கூட்டுறவுத் திணை க்களம் விவசாய அமைச்சுக்குக் கீழ் கொண்டுவராத காலப் பகுதியான 2014.04.03ஆம் திகதி கௌரவ விவசாய அமைச்சினால் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கௌரவ அமைச்சரின் ஆலோசனையின்படி இந் நியமனம் செய்யப்பட்டதாக முன்னாள் கூட்டுறவு ஆணையாளரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியை இங்கு ஏற்க வேண்டியுள்ளது.

அதே நேரத்தில் அரசாங்க அதிபரின் சிபார்சு இல்லாத ஒருவரை இயக்குநர் சபைக்கு நியமித்து அவரை தலைவராக தெரிவு செய்ததில் உள்ள நிர்வாக முறைகேட்டை தவிர்ப்பதற் காக அரசாங்க அதிபரிடம் பணிப்பாளர் சபைக்கு இருவரை சிபார்சு செய்யும்படி கோரிக்கை விடுவதை தவிர்த்து தம்மால் முறைகேடாக நியமிக்கப்பட திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ் வரா மற்றும் திரு. கந்தையா மகாதேவன் ஆகியோர்களது பெயர்களை தனது கடிதத்தில் உள்ளடக்கி அதுவும் அந் நியமனம் வழங்கப்பட்ட பின்னரே அதாவது 27.04.2015 இல் கூட்டுறவு உதவி ஆணையாளரால் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. இது வடமாகாண கூட்டுறவு ஆணையாளரால் செய்யப்பட்ட நிர் வாக முறைகேடாகும். இம் முறைகேடு கௌரவ விவசாய அமைச்சரின் அழுத்தத்தால் ஏற்பட்டதாகும்.

ஆனால் கௌரவ விவசாய அமைச்சரின் சிபார்சின் அடிப்படையிலேயே இ. சர்வேஸ்வராவின் நியமனத்தை செய்ததாக முன்னாள் கூட்டுறவு ஆணையாளரது சாட்சியில் தெரிவித்துள்ளமையை விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது. ஆனால் அந்த நியமன காலத்தில் கூட்டுறவு திணைக்களம் கௌரவ அமைச்சர் ஐங்கரநேசனது அமைச் சுடன் இணைக்கப்பட்டுத்தானும் இருக்கவில்லை என்பதை யும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அதாவது கூட்டு றவுத்துறை கௌரவ முதலமைச்சரது அமைச்சுடன் இணை க்கப்பட்டு இருந்துள்ளது. திரு. சர்வேஸ்வராவின் நியமனத் தால் ரஞ்சனது நியமனம் தானாகவே செயலிழந்துள்ளது.

ரஞ்சன் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கான காரணம் அவருக்கு தெரிவிக்கப்படவில்லை என்பதுடன் 2014 இல் நிர்வாக சீர்கேடு என்ற அடிப்படையில் பதவி நீக்கம் செய்ய ப்பட்டதென, முன்னாள் கூட்டுறவு ஆணையாளர் விசார ணையின் போது தெரிவித்திருந்தாலும் ரஞ்சனுக்கு எதிரான குற்றப்பத்திரம் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அதாவது 2016 இல் தான் அனுப்பப்பட்டதை கவனத்தில் கொள்ளும் பொழுது கூட்டுறவு ஆணையாளரும் கௌரவ அமைச்சரும் விசாரணைக்குழு விற்கு முன்னர் அளித்த சாட்சியும் விளக்கமும் உண்மைக்கு புறம்பானது என்பதையும் கூட்டுறவு ஆணையாளர் தனது அதிகாரத்தை தானே அமைச்சருக்கு கையளித்துள்ள நிர்வாக முறைகேடும் கௌரவ அமைச்சரால் செய்யப்பட்ட அதிகார துஷ்பிரயோகத்தையும் மூடி மறைப்பதற்கு செய்யப்பட்ட செயலாக கருத வேண்டியுள்ளது.

இதனடிப்படையில் பார்க்கும் பொழுது சர்வேஸ்வரா மகாதேவன் ஆகியோரை கூட்டுறவு ஆணையாளர் மூலம் நியமனம் செய்து அதன் மூலம் ரஞ்சனை தலைவர் பதவியில் இருந்து நீக்கம் செய்தமை கௌரவ அமைச்சரது அதிகார துஷ்பிரயோகமே என இவ் விசாரணைக் குழு கருதுகிறது.

**4.9. (ஆ) 2015 இல் யாழ்கோ பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கத்திற்கு தலைவராக முன் அனுபவ மில்லாதவரும் அரச அதிபரால் முன் சிபார்சு செய்யப் படாதவருமான இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா என்பவ ரைக் குடும்ப நண்பர் என்ற அடிப்படையில் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவராக நியமித்தமை தொடர்பில் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.**

யாழ்கோ கூட்டுறவு சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு அரசாங்க அதிபரின் சிபார்சு பெறப்படாது1.5.2014 இலிருந்து விவசாய அமைச்சரின் சிபார்சை அடிப்படையாகக் கொண்டு திரு.இ.சர்வேஸ்வரா மற்றும் கந்தையா மகாதேவா ஆகியோர் நியமிக்கப்பட்டதாகவும், சட்ட பூர்வமான அமைச்சருக்கு அவ் அதிகாரம் இல்லையெவும் கூட்டுறவு ஆணையாளர் இவ் விசாரணைக் குழுவின் முன் அளித்த தனது சாட்சியத்தில் குறிப்பிட்டதையும் நேரடியாக திரு. இ. சர்வேஸ்வராவின் பாற் பண்ணை தொழில் தொடர்பான அனுபவமின்மையை அமை ச்சருக்குத் தான் தெரிவித்ததாகவும் அதற்கு அமைச்சர் மகா தேவாவின் ஆலோசனையைக் கேட்டு அவர் நடந்து கொள் வார் எனத் தெரிவித்து திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவின் நியமனத்தில் உறுதியாக இருந்துள்ளமையை கூட்டுறவு ஆணையாளரது சாட்சியிலிருந்து தெளிவாகின்றது.

அதே நேரத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்தியாவிலிருந்து வந்த காலம் தொடக்கம் கௌரவ அமைச் சரை தனக்கு தெரியும் என இ. சர் வேஸ்வரா குழுவின் முன் அளித்த சாட்சியத்தில் தெரிவித்துள்ளமையும் அவர் தனது மனைவியுடைய குடும்ப நண்பர் எனவும் தனது மாமனாரின் பள்ளித் தோழன் எனவும் அவர் தனது பெயரை சிபார்சு செய்திருக்கலாம் எனவும் அவர் தனது சாட்சியத்தின் பொழுது தெரிவித்திருக்கும் அதே நேரத்தில் கௌரவ அமைச்சர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை அவர் யாழ்கோ தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர் தான் தெரியும் என தனது சாட்சியத் தின் பொழுது முரண்பாடாக சாட்சியமளித்து சர்வேஸ்வராவுக் கும் தனக்கும் இடையே உள்ள முன் உறவை மறைக்க முயற்சித்துள்ளமையை விசாரணைக்குழு தனது கவனத்தில் எடுத்துள்ளது.

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

அத்தோடு தனக்கு கூட்டுறவு ஆணையாளரை நன்கு தெரியும் எனவும் அதனாலேயே தான் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபரின் சிபார்சின் பேரிலேயே தனது நியமனம் இருந்தது என்றும் உண்மைக்கு புறம்பான கௌரவ அமைச்சரின் சாட்சியும் சர்வேஸ்வரா–அமைச்சர் அவர்களுக்கிடையே நிலவி வந்த முன் தொடர்பையும் அமைச்சரின் சிபார்சின் அடிப்படையிலேயே கூட்டுறவு ஆணையாளருக்கு நெருக்குதல் வழங்கி இந் நியமனம் செய்யப்பட்டதை கூட்டாக இவ்விருவரும் மறுக்கும் விதத்தில் சொல்லப்பட்ட சாட்சி உண்மைக்கு புறம்பானதென இவ் விசாரணைக் குழு கருகிறது.

இந் நிலையில் கௌரவ அமைச்சர் தனது பதவி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து திரு. இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவை பணிப்பாளர் சபைக்கு கூட்டுறவு ஆணையாளர் மூலம் நியமித்து பின்னர் அவரை தலைவராக்கி திரு.ரஞ்சன் அவர்களை பதவி நீக்கம் செய்ய தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்பது விசாரணையின் பொழுது சாட்சிகள் மூலம் எண்பிக்கப்பட்டுள்ளதால் யாழ்கோ தலைவர் நியமனத்தில் விவசாய, கமநலசேவை ,கால்நடை அபிவிருத்தி ,நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார் என விசாரணைக்குழு கருதுகின்றது.

**4.10 மருதங்கேணி கடற்றொழில் சமாசத் தலைவரை நியாயமான காரணங்களின்றி கூட்டுறவு ஆணையாளர் மூலம் 2015 மார்கழி மாதம் அளவில் பதவிநீக்கம் செய்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.**

திரு.பொன்னுச்சாமி பிரேமதாஸ் என்பவர் உடுத்துறை கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்பட்டு மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 15 சங்கங்களின் தலைவராகக் கடமையாற்றி வந்துள்ளார்.சமாசத்தின் நோக்கம் மருதங்கேணி பிரதேசத்தில் வசிக்கும் கடல் தொழிலாளர்களது தொழில்சார் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதாகும்.

அதேநேரம் 2015 ஏப்ரல் மாதமளவில் ஆசிய அபிவிருத்தி வங்கி, விவசாய, கமநலசேவை, கால்நடை அபிவிருத்தி, நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல் சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன், கூட்டுறவு ஆணையாளர், பிரதேச செயலாளர் ஆகியோரடங்கிய பொதுக் கூட்டமொன்று திரு.பொ.பிரேமதாஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றுள்ளது. அதில் மருதங்கேணி கடல் பிரதேசத்திலிருந்து கடல் நீரை எடுத்து சுத்திகரிக்கப்பட்ட நீர் போக மீதி நீரை கடலில் விடுவதாகவும் அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாதெனவும் கௌரவ அமைச்சராலும் ஆசிய அபிவிருத்தி வங்கி, தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் கூட்டத்தில் பங்குபற்றிய கடல் தொழிலாளர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றினால் தமது தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுமென தெரிவித்து அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தமது சம்மதத்தை வழங்க முடியாதெனவும் தெரிவித்துள்ளனர். அதனால் கூட்டம் இடைநடுவில் நிற்பாட்டப்பட்டது.

எனினும் கௌரவ முதலமைச்சரின் தலைமையில் அவரது வதிவிடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இத் திட்டத்திற்கான சம்மதத்தை வழங்க வேண்டுமென எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்கவும் இத்திட்டத்துக்கான அனுமதியை வழங்கும்படி பிரதேச செயலாளர், மருதங்கேணி கூட்டுறவுத் திணைக்களம் என்பன கௌரவ அமைச்சரது நெருக்குதல் காரணமாக சமாசத் தலைவருக்கு நெருக்குதல் கொடுத்த காரணத்தினாலும் சமாசத் தலைவர் சமாச கடிதத் தலைப்பில் ஒரு கலந்துரையாடலுக்கு சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளை கொண்ட கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி இருந்துள்ளார்.

அந்தக் கூட்டத்தில் இத்திட்டத்திற்கு சம்மதம் கிடைக்கவில்லை. இந்நிலையில் கௌரவ அமைச்சர் அவர்கள் சமாசத்தின் தலைவரை அப்பதவியிலிருந்து நீக்குவதன் மூலம் புதிய பணிப்பாளர் சபையை நியமிப்பதன் மூலமும் நீர்வழங்கல் தொடர்பான சம்மதத்தை பெறலாம் என்று எண்ணி சமாசத்தின் பொது முகாமையாளர் மூலம் தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான காரணங்களைப்பெற திட்டமிட்டு இருந்ததாக எண்ணுவதற்கான காரணம் இருந்துள்ளது. ஏனெனில் சங்கத்தின் கடிதத் தலைப்பை பாவித்து தலைவர் கூட்டம் கூட்டிய ஆவணத்தை பொது முகாமையாளர், தலைவரின் முன் அனுமதி இன்றி கௌரவ அமைச்சரிடம் கையளித்துள்ளார். கௌரவ அமைச்சர் அதனைக் காரணமாக கொண்டு சமாசத் தலைவரை அதிகார துஷ்பிரயோகம் என்ற குற்றச்சாட்டின் கீழ் பதவி நீக்கம் செய்யும்படி கூட்டுறவு ஆணையாளருக்கு பணித்துள்ளார். கூட்டுறவும் உதவி ஆணையாளர் மூலம் அக்குற்றச்சாட்டின் தன்மை, அதன் தாக்கம், சட்டபூர்வத்தன்மை என்பவற்றை ஆராயாமல் கௌரவ அமைச்சரின் பணிப்புரையை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இச்செயற்பாட்டை அனுமதித்துள்ளார்.



சமாசத் தலைவர் கடிதத் தலைப்பை குறிப்பிட்ட நோக்கத்திற்காக பாவித்தமை அவரை பதவிநீக்கும் அளவுக்கான பாரதூரமானவை அல்ல என்று குழுவின்முன் கூட்டுறவு ஆணையாளர் அளித்த சாட்சியமும் திரு.கணேஷ்–முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் அவசரப்பட்டு பிழையான தீர்மானத்தை எடுத்துள்ளார் என்று விசாரணைக்குழுவின் முன் அளிக்கப்பட்ட கௌரவ அமைச்சரின் விளக்கமும் மேற்படி கூற்றுக்குச் சாதகமாக அமைந்துள்ளன.

இவ்விடயத்தில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தில் கௌரவ அமைச்சரின் சட்டபூர்வமான வகிபாகம் என்ன? அவர் ஏன் தானாகவே இத்திட்டம் செயற்படுத்த கடற்தொழிலாளர் சங்கத்திற்கு நெருக்குதல் கொடுத்தார்.இவ்வாறான மத்திய அரசாங்கத்தின் திட்டத்தை நிறைவேற்றும் முகவராக கௌரவ விவசாய அமைச்சருக்கு மாகாண சபை விசேட அதிகாரத்தை வழங்கி இருந்ததா?அல்லது கௌரவ முதலமைச்சர் அவருக்கு அங்கீகாரத்தை வழங்கினாரா?அவ்வாறு வழங்கி இருந்தாலும் அது அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு உட்பட்டு மாகாணசபை சட்ட விதிகளுக்கு உட்பட்டதா என்பதை எண்பிப்பதற்கான காரணங்கள், ஆவணங்கள் கௌரவ அமைச்சரிடம் இருக்கவில்லை. அவரது சாட்சியங்களின் பொழுது அவை முன்வைக்கப்படவில்லை. அதே நேரம் அவர் தனது சாட்சியத்தில் சமாசத்தின் பொது முகாமையாளர் தலைவரினால் கடிதத் தலைப்பு மக்களை ஒன்று கூட்டி கடல் நீர் பிரச்சினை தொடர்பாக ஆராய பாவிக்கப்பட்டதன் பிரதியை அவர் கௌரவ அமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? அமைச்சரிடம் அவ் ஆவணம் கையளிக்கப்பட்டபொழுது அவ் ஆவணம் தனக்கு தொடர்புடையது அல்ல. கூட்டுறவு உதவி ஆணையாளரிடமோ அல்லது கூட்டுறவு ஆணையாளரிடமோ கையளிக்கும் படி அமைச்சர் தெரிவித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது அக் கடிதத்தை தானே பெற்று அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க தூண்ட வேண்டிய தேவை என்ன? என்ற சந்தேகங்கள் அமைச்சர் இது தொடர்பாக எடுத்த நடவடிக்கையில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாசத்தின் பொது முகாமையாளர் ஏன் அக்கடிதத் தலைப்பிலான கடிதத்தின் பிரதியை அதைப்பாவித்தது தவறாயின் தனது சமாசத் தலைவரின் கவனத்திற்கு தான் கொண்டு வந்திருக்க வேண்டும். அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்க வேண்டும். அவர்களது ஆலோசனையைப் பெற்று இருக்க வேண்டும். அதனைத் தவிர்த்து நேரடியாகவே அமைச்சரிடம் கொண்டு சென்று கையளித்தமையும் உடனடியாக அமைச்சர் கூட்டுறவு ஆணையாளர் மூலம் தலைவரை பதவிநீக்கம் செய்வதற்கான சதித்திட்ட நடவடிக்கையில் ஒன்றாக வும் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்காத சமாசத்தின் தலைவரை கூட்டுறவுத் துறைக்கான அமைச்சர் என்ற அதிகாரத்தை சட்டத்திற்கு அப்பாற்பட்ட முறையில் துஷ்பிரயோகித்து பதவி நீக்கம் செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டை எண்பிக்க சான்றாக உள்ளது.

சமாசத்தின் தலைவரை பதவிநீக்கம் செய்த பின்னர் மக்கள் பிரதிநிதிகளை தவிர்த்து பிரதேச செயலர், பாடசாலை அதிபர், சங்கங்களால் சமாசத் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு அவர்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரை தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, நியமனம் செய்து இத் திட்டத்திற்கு குறுக்கு வழியில் அனுமதிபெற முயற்சித்த கௌரவ அமைச்சரது நோக்கமும் நிறைவேறவில்லை. ஆனால் அவரது அதிகார துஷ்பிரயோகம் தான் வெளியில் மேலோங்கி நிற்கிறது.

எனவே இக்குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் சாட்சிகளின் படி எண்பிக்கப்பட்டுள்ளது என இக்குழு தீர்மானிக்கிறது.

மொத்தமாக வட மாகாண விவசாய, கமநலசேவை கால்நடை. அபிவிருத்தி, நீர்வழங்கல், உணவு வழங்கல் விநியோகம், சுற்றாடல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனிற்கு எதிராக சுமத்தப்பட்ட (4.1) தொடக்கம் (4.10) வரையிலான குற்றச்சாட்டுக்களும் நியாயமான நடை[illegible] மாகாணசபைக்கு [illegible] என்ற விடய அமைச்சர் என்ற அடிப்படையில் தனது அதிகார வரம்பை மீறிச் செய்யப்பட்டமை தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனக்கு வேண்டியவர்களை கூட்டுறவு அமைப்புக்களில் நியமிக்க கூட்டுறவு ஆணையாளரை நெருக்குதல் கொடுத்தமை தனது அணுகு முறைக்கு ஒத்துழைக்காதவர்களை கூட்டுறவு அமைப்புக்களின் தலைவர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுத்தல். தனதும் அமைச்சினதும் செல்வாக்கை பொதுமக்களுக்கும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் காட்டுவதற்காக பெரியளவிலான விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தி நடத்துதல் , சட்டபூர்வமற்ற விதத்தில் விவசாய முதலீடுகளுக்கு தடைகள் ஏற்படுத்தல். கடந்தகால அனுபவத்தை கவனத்தில் எடுக்காது அமைச்சு நிதியை செலவிட்டு வெற்றியளிக்காத திட்டங்களை நடைமுறைப்படுத்திய நடவடிக்கை அவர் நிர்வாகத்தின் மீது கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

கௌரவ அமைச்சர்களது நடவடிக்கைகள் கௌரவ முதலமைச்சரின் அனுசரணையுடனே நடைபெறுகின்றது என்ற மாயையை கௌரவ அமைச்சர் மேற்சொன்ன அனைவரிடம் தெரிவிப்பதோடு இவ் விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கும் பொழுது தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கும் கௌரவ முதலமைச்சரின் சம்மதம் பெறப்பட்டதாகவும், சகல நிகழ்வுக்கும் கௌரவ முதலமைச்சரால் தொடக்கி வைக்கப்பட்டது. கௌரவ முதலமைச்சர் இந் நிகழ்வுகளுக்கு சமுகமளித்துள்ளார். அவர் அனுமதித்துள்ளார் என்ற அவரது விளக்கத்தை நியாயமானது என ஏற்றுக்கொள்ள வேண்டியதற்கு நியாயபூர்வமானதோ அல்லது சட்டபூர்வமானதோ அல்லது நிர்வாக நடைமுறை பூர்வமானதாக காரணங்கள் இருப்பதாக இக்குழு கருதவில்லை.

### IV. குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைக் குழுவினால் கண்டறியப்பட்டவை.

மாகாணசபை அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதிமோசடி அதிகார துஷ்பிரயோகம், பாரபட்சம், ஊழல் மற்றும் ஒழுக்கரீதியான குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குழுவிற்கான நியமனக் கடிதத்தின் பந்தி 7 இல் தெரிவிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டும் அதற்கான வழிகாட்டல் நெறிமுறைக்கும் உட்பட்ட தொழிற்பாடுகளின் அடிப்படையில் முறைப்பாடுகளை எழுத்து முறைப்பாடுகளின் தன்மையை ஆராய்தல் அம்முறைப்பாடுகள் தொடர்பாக நபர்களை அழைத்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பாக மாகாண சபை நிர்வாகத்தில் உள்ள சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை குழுவின் முன் அழைத்து அவர்களது வாக்கு மூலங்களைப் பதிவு செய்தல், முறைப்பாடுகள் தொடர்பாக அலுவலக ஆவணங்களை பெறுதல் ஆகிய ஆரம்ப நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. மேலே தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளினடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நான்கு அமைச்சர்களுக்கெதிரான குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு வேண்டிய காலஅவகாசத்துடனான நாட்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ்விசாரணையின் பொழுது குற்றம் சாட்டப்பட்டவர்கள் தாமாகவோ அல்லது தனது சார்பில் ஓர் சட்டத்தரணி மூலமாகவோ குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மறுதலிப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

அத்தோடு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியோர் குறிப்பிட்ட விசாரணைத் திகதிகளில் தாமாகவோ அல்லது வேறு சம்பந்தப்பட்டவர்களோடோ வேண்டிய ஆவண இலத்திரனியல் சான்றுகள் உடனேயோ விசாரணைக்கு சமுகமளிக்கவும். குற்றம் சாட்டப்பட்டவர்களை குறுக்கு விசாரணை செய்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தை குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு அமைச்சர்களும் பூரணமாக ஏற்றுக்கொண்டு தாமாகவே முன்வந்து தமக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்திருந்தனர். முறைப்பாட்டுக்காரர்களில் கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோரைத் தவிர சகல முறைப்பாட்டாளர்களும் விசாரணையின் போது பங்குபற்றி சம்பந்தப்பட்ட அமைச்சர்களை குறுக்கு விசாரணை செய்தனர். மாகாணசபை உறுப்பினர் கௌரவ க.தா.லிங்கநாதன் தன்னுடன் மாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் கௌரவ சி. தவராசா அவர்களையும் அழைத்து வந்தார். அவருக்கும் விவசாய கமநல சேவை கால்நடை அபிவிருத்தி நீர் வழங்கல், உணவு வழங்கல் விநியோகித்தல், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசனை குறுக்கு விசாரணை செய்வதற்கு குழுவால் அனுமதி வழங்கப்பட்டது.

அங்கீகரிக்கப்பட்ட விசாரணை நடைமுறைகளுக்கு மேலதிகமாக விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள், அக்கருத்திட்டங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டதுமான பின்வரும் இடங்களை விசாரணைக்குழு நேரடியாகப் பார்வையிட்டு பயனாளிகளின் கருத்துகளையும் பதிவு செய்து கொண்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்க ஜனாதிபதி தொடர்ந்தும் மறுப்பு

அண்மைக் காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் நாசகார நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக சந்தர்ப்பம் ஒதுக்கித் தருமாறு கோரும் கடிதம் ஒன்றை முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையளித்தும் இது வரையும் ஜனாதிபதியிடமிருந்து பதில் ஏதும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் பள்ளிவாசல்களையும் முஸ்லிம்களது வர்த்தக நிலையங்களையும் இலக்கு வைத்து நடத்தப்பட்டு வரும் நாசகார செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்கே சகல அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து கடந்த மே மாதம் 19 ஆம் திகதி மேற்படி கடிதத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள்.

மூன்று வாரங்கள் கடந்த நிலையிலும் இதுபற்றி ஜனாதிபதியிடமிருந்து எத்தகைய பதிலும் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் 7 ஆம் திகதி ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் கூட்டப்பட்ட ஆளும் தரப்பினரின் கூட்டத்தின்போது நிகழ்ச்சி நிரலுக்குப் புறம்பாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

அதன்போது இதனைப் பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியவில்லையென்றால் அப்பொறுப்பை இராணுவத்திடம் கையளிக்க வேண்டியேற்படும் என்ற பதிலே ஜனாதிபதியிடமிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-3)




# விபத்தில் 28 பேர் காயம்

(கொழும்பு)

காலி - கொழும்பு வீதியின் கிந்தோட்ட, பிட்டவெல்ல பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

காலி நோக்கிச் சென்ற 4 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் பாடசாலை மாணவர்கள் இருவர் உள்ளதுடன், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

# உள்நாட்டில் நியாயம் கிடைக்காவிட்டால் ஜெனிவா செல்வோம் - றிசாத் எச்சரிக்கை



(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு உள்நாட்டில் நியாயம் கிடைக்காவிடின், ஜெனிவா வரை சென்று நீதி கேட்பதற்கும் நாங்கள் தயங்கமாட்டோம், அமைச்சுப் பதவியை தூக்கி எறிவதற்கும் நான் தயாராகவே உள்ளேன் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அம்பாறை, சாய்ந்தமருதில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"முஸ்லிம் சமூகத்தின் மீதான வன்முறைகளும் தாக்குதல்களும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என்று ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அத்தனை பேர்களிடமும் மிகவும் ஆணித்தரமாகவும் பக்குவமாகவும் முஸ்லிம் அரசியல் சக்திகளும், சமூக இயக்கங்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியபோதும் நாசகாரர்களின் நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

அமைச்சுப் பதவியை வகிப்பதால் நாங்கள் அடங்கிப்போகவேண்டும் என்று எவரும் தப்புக்கணக்குப் போட முடியாது.

சமூகத்துக்கான பாதிப்புக்கள் நிறுத்தப்படும் வரை நாங்கள் ஓயப்போவதும் இல்லை.

முஸ்லிம்களை துன்புறுத்தி வரும் பொதுபல சேனை போன்ற இனவாத இயக்கங்கள், இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னரானதும் முன்னரானதுமான வரலாற்றை ஆழமாக படித்துப் பார்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# புகையிரதத்தில் மனிதத் தலை

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் இருந்து அம்பேபுஸ்ஸ வரை செல்லும் புகையிரதத்துக்கு கீழ் உடல் இல்லாத தலை ஒன்று கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கனேமுல்ல பிரதேசத்தில் புகையிரதத்தின் கீழ் பகுதியில் மனித தலை சிக்கியிருந்தமையை பிரதேச மக்கள் அவதானித்துள்ளனர்.

குறித்த மனித தலை கம்பஹா புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1101

நீருஜா




சிவாகரன்




மதனரூபி




வேணுதாஸ்




ராதிகா




குலேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஞானசாரரைக் கண்டுபிடிக்க இராணுவத்தை அனுப்புவேன்



## ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரரைக் கண்டுபிடிப்பதற்கு தேவைப்படுமாயின் இராணுவப் புலனாய்வுப் பிரிவையும் பயன்படுத்த உத்தரவிடவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், அண்மையில் நடைபெற்ற அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தின் போதே, இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது.

ஞானசார தேரர் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டதாகவும், விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனைக் கண்டுபிடிப்பதற்கு, புலனாய்வு அமைப்புகளால் முடியுமானால், ஞானசாரரை ஏன் கண்டுபிடிக்க முடியாது எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கண்டுபிடித்தது, இராணுவ புலனாய்வு அமைப்பே என்பதை ஞாபகமூட்டியதோடு, தேவைப்படுமாயின், இந்தப் பணியிலும் அவர்களை ஈடுபடுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணமாக, வெளிநாடுகளிலிருந்து பணமாகவும் பொருளாகவும் கிடைத்த உதவிகள் தொடர்பில், விரிவான அறிக்கையொன்றை வழங்குமாறு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவிடம், அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இதற்குப்பதிலளித்த அமைச்சர் யாப்பா, இந்தியாவிலிருந்து இரண்டு கப்பல்களில் கிடைக்கப்பெற்ற உதவிகள் தவிர, ஏனையவற்றின் விவரங்களைச் சமர்ப்பிக்க முடியுமெனத் தெரிவித்ததோடு, இந்தியக் கப்பல்கள் தொடர்பான விபரம், கடற்படையிடமிருந்து பெறப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது, தேவையான விபரங்களை, கடற்படையிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு, ஜனாதிபதி உத்தரவிட்டார்.

அத்தோடு, வெள்ள, மண்சரிவு இழப்பீடுகளின் போது, அரச ஊழியர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு, இங்கு முடிவெடுக்கப்பட்டது.

முன்னைய இழப்பீட்டுத் திட்டத்தின் போது, அரச ஊழியர்களுக்கு இழப்பீடு வழங்கப்படாது என முடிவெடுக்கப்பட்டது. தற்போது எடுக்கப்பட்டுள்ள முடிவின்படி, சேதமான வீடுகளுக்கு, 2.5 மில்லியன் ரூபாயைப் பெறும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தவிர, வெள்ளம், மண்சரிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஓர் அங்கத்தவருக்கு, அரசபணியை வழங்கவும், இதன்போது முடிவெடுக்கப்பட்டது. (இ-3)

# முஸ்லிம்களைப் புறக்கணிக்கின்றது நல்லாட்சி

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி சாடல்

"முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் இனவாத தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதியிடமிருந்தோ அல்லது பிரதமரிடமிருந்தோ இன்று வரை எந்தப் பொறுப்பான பதில்களும் வரவில்லை. பொறுப்பும் பதிலும் கூற வேண்டிய நல்லாட்சி தனது அடிப்படைக் கடமையினை தொடர்ந்தும்புறக்கணிப்பதனை அனுமதிக்க முடியாது என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலை குறித்து அந்த அமைப்பினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் "முஸ்லிம்களுக்குச் சொந்தமான கடைகளை தாக்கும், எரிக்கும் சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இதனை அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். தொடர்ச்சியான அழுத்தங்களுக்குப் பின்னர், தற்போதுதான் ஓரிருவர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுங்கியிருக்கும் ஏனைய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து, நீதி மன்றத்தின் முன்னிறுத்த வேண்டும்.

மிகக் குறுகிய காலத்தில், இதுபோன்ற சம்பவங்கள் அடுக்கடுக்காக நாளாந்தம் இடம்பெற்றுவருவதானது, அரசாங்கத்தின் இயலாமையை மாத்திரமின்றி பக்கச்சார்பான நிலைப்பாட்டினையே புலப்படுத்துகிறது. இந்நிலை தொடருமாயின், இது இந்த நாட்டை மோசமான பின்விளைவுகளுக்கே இட்டுச் செல்லும்.

நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டிய சர்ச்சைக்குரிய மதகுருவை, அமைச்சரவை அங்கத்தவர் ஒருவரே பாதுகாத்து வைத்துள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் ஒருவர் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

இது இப்போது நாடெங்கும் பேசுபொருளாக மாறியு ள்ளது.

புலிகளை அடக்க முடிந்த புலனாய்வுப் பிரிவுக்கு அந்த நபர் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை என்பது வேடிக்கையான விடயம் என, பலரும் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளனர்.

அரசாங்கத்தினதும் சட்டம் ஒழுங்குக்குப் பொறுப்பான அமைச்சரினதும் பொலிஸாரினதும் இயலாமையை அப்பட்டமாக வெளிப்படுத்தும் இவ்வாறான கருத்துகளுக்கு அரசாங்கத்தின் பதில்தான் என்ன?

இவ்வளவு இடம்பெற்றும், இதன் முக்கியத்துவத்தையும் பாதிப்பையும் குறைத்து மதிப்பிடும் வகையிலேயே அரசாங்கத்தின் பொறுப்பான பதவிகளிலுள்ளோர் நடந்து கொள்கின்றனர்.

ஜனாதிபதியும் பிரதமரும் நாட்டு மக்கள் எல்லோரினதும் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் செயற்பட வேண்டும். அதற்காகவே எல்லா இன மக்களும் ஒன்று திரண்டு அவர்களுக்கு வாக்களித்தனர்.

இந்த நெருக்கடியான சூழலிலும் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால், நிலைமை மேலும் சிக்கலாகி அழிவுக்கே வழி வகுக்கும். இதில் நல்லாட்சி அதிக கரிசனை கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-8)

# இராணுவச் சிப்பாய்மீது வெள்ளை வானில் வந்த குழுவினர் கடும் தாக்கு.

(கொழும்பு)

இராணுவ வீரர்கள் சிலருடன் சமய வழிபாடுகளில் கலந்துகொள்ள கதிர்காமம் சென்ற இராணுவ வீரர் மீது, வெள்ளை வானில் வந்த குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இனந்தெரியாத சிலர், நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் தன் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றதாக, தாக்குதலுக்கு உள்ளான இராணுவ வீரர், கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான இராணுவ வீரர், சிகிச்சைக்காக கதிர்காமம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பாதுகாப்பு கருதி வேறு பெரிய வைத்திசாலையில் சிகிச்சை பெற வேண்டும் என, பொலிஸாரிடம் அறிவித்துவிட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-3-8)

# மாகாணசபைத் தேர்தலை பிற்போடும் அதிகாரமில்லை

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)



மாகாணசபைத் தேர்தல்களைப் பிற்போடுவதற்கு அமைச்சர்களுக்கோ வேறு எவருக்குமோ அதிகாரம் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

'ஒரு மாகாணசபையின் பதவிக்காலம் முடிந்து ஒரு வாரத்துக்குள், புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும்.

மாகாணசபைத் தேர்தலை அண்மையில் ஏற்பட்டது போன்ற பாரிய அனர்த்தம் அல்லது பிரபலமான ஆணை அல்லது நீதிமன்ற தீர்ப்பினால் மாத்திரமே பிற்போட முடியும்.

அல்லது வேறு எந்த நபரோ மாகாணசபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு சட்டத்தில் அதிகாரம் வழங்கப்படவில்லை .

இலங்கையில் கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக்காலம், எதிர்வரும், செப்டெம்பர் மாதத்துடன் முடிவடையவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-3)

# பன்றி இறைச்சியுடன் வர்த்தகர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது

(கொழும்பு)

மஸ்கெலியா நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் காட்டுப்பன்றி இறைச்சியை சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக வைத்திருந்த ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சந்தேக நபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் நாளை 14ம் திகதி ஹற்றன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த சுமார் 8 கிலோ 600 கிராம் பன்றி இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைக்காலமாக சுற்றுலா பிரயாணிகள் காட்டுப்பன்றி இறைச்சியினை விரும்பி உண்பதனால் காட்டுப்பன்றிகளை மிகவும் சூட்சுமமான முறையில் வேட்டையாடி சிலர் சுற்றுலாப்பயணிகள் செல்லும் ஹோட்டல்களுக்கு விற்பனை செய்து வருவதாக பொது மக்கள் தெரிவித்தனர்.

இது குறித்து உரிய அதிகாரிகள் அசமந்த போக்கினை காட்டி வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். (இ-3-8)

# வாடகைக்கு குடியிருந்த பெண்-சகோதரன் சண்டை சமாதானப்படுத்தச் சென்றவர் குத்திப்படுகொலை

தனது வீட்டில் வாடகைக்கு குடியிருந்த பெண்ணுடனான சண்டையை விலக்கச் சென்ற வீட்டு உரிமையாளரான வர்த்தகர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்ததோடு சந்தேக நபரும் படுகாய மடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி ஜயசுந்தர புர பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

உயிரிழந்த வர்த்தகர் தனது வீட்டில் வாடைகைக்கு குடியிருக்கும் பெண்ணுக்கும் அவரின் சகோதரனுக்குமிடையே ஏற்பட்ட சண்டையை விலக்க முற்பட்ட சமயம் சந்தேக நபருக்கும் குறித்த வர்த் தகருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் குறித்த வர்த்தகர் கத்திக் குத்துக்கு இலக்காகி நாவலப்பிட்டிய வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதன் போது குறித்த சந்தேக நபரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை நாவலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## நம்பாதே!

நேற்றைய தொடர்ச்சி....

ஐயோ! நான் இன்று விரதமாயிற்றே! இந்தத் தோல் வலையை நான் தீண்டக்கூடாதே! நாளைக்கென்றால், நீ என்ன சொன்னாலும் கேட்பேன்," என்று பதைபதைத்தாற் போல சொல்லிற்று.

என்ன, அப்படியா! என்று மான் பரிதாபமாகப் பார்த்தது நரியை.


என்ன! வெகு நேரமாகியும் இந்த மானைக் காணோமே!" என்று தேடிக் கொண்டு அங்கு வந்த காக்கை, அங்கிருந்த மானின் பரிதாப நிலையைக் கண்டு திடுக்கிட்டது.

நண்பா! எப்படி நேர்ந்தது இது? அநியாயமாய் இந்த வலையில் சிக்கிக்கொண்டு விட்டாயே!" என்று பச்சாதாபத்துடன் கேட்டது காகம்.

அதையேன் கேட்கிறாய் போ! அன்று உன் வார்த்தையைக் கேளாமல் இருந்ததால் ஏற்பட்ட வினை இது!" என்று கண்களில் நீர் வழிய ஆழ்ந்த பெருமூச்சு விட்டது மான்.

உன் நண்பன் எங்கே போனான்? அவனுக்குத் தெரிந்தால் உன்னை ஒரு நொடியில் விடுதலை செய்து விடுவானே!"

நன்றாய் சொன்னாய்! அவனாவது, என்னை விடுதலை செய்வதாவது! என் மாமிசத்தை ருசி பார்க்க இங்குதான் எங்கேயாகிலும் ஒளிந்து கொண்டிருப்பான்."



உம்! உண்மை நண்பனுடைய பேச்சைக் கேளாதவனுக்கு விபத்து சீக்கிரம் வரும் என்பர். அது இப்போது உண்மையாகி விட்டதே!" என்று, துக்கம் தொண்டையை அடைக்கச் சொல்லியது காக்கை.

அதற்குள் அந்தக் கொல்லைக்குச் சொந்தக்காரன், கையில் ஒரு குண்டாந்தடியை எடுத்துக்கொண்டு வந்துவிட்டான்.

அதைக்கண்ட காகம், நண்பா! நீ இப்போது மூச்சையடக்கிக் கொண்டு சவம் போல் கிட உன் கண்களை நான் கொத்துவது போல் நடிக்கிறேன். நீ இறந்துவிட்டதாக எண்ணி வலையை அவிழ்த்துச் சுருட்டி வேறு எங்கேயாகிலும் வைக்கப் போவான். அந்தச் சமயம் பார்த்து நான் குரல் கொடுக்கிறேன். நீ உடனே துள்ளிக் குதித்து ஓடிப்போய் விடு," என்றது.

சரி!" என்று மான் மூச்சையடக்கிக் கொண்டு சவம் போல் கிடந்தது.

காக்கையை விரட்டிக் கொண்டே வந்து வேடனும் மான் இறந்துவிட்டதாக நினைத்தான்.

"பாவம்! அகப்பட்டுக் கொண்ட அதிர்ச்சியிலேயே இறந்துவிட்டது போலும்!" என்று பரிதாபப்பட்டுக் கொண்டு, வலையை அவிழ்த்துச் சுருட்டிக் கொண்டு சற்று எட்டி வைக்கச் சென்றான்.

உடனே காகம் குரல் கொடுக்க, மான் துள்ளிக் குதித்து ஓடத் தொடங்கி விட்டது.

அதுகண்ட கொல்லைக்காரன், "ஐயோ! ஏமாந்துவிட்டேனே!" என்று அவசர அவசரமாகத் தன் கையிலிருந்த குண்டாந்தடியை எடுத்து அந்த மானைப் பார்த்து வீசியெறிந்தான்.

அக்குண்டாந்தடி, சற்று தூரத்திலிருந்த புதரில் விழுந்து, அங்கு பதுங்கியிருந்த நரியைத் தாக்கவே, மண்டை பிளந்து அப்போதே அது உயிர் துறந்தது."

நம்பிக்கை துரோகிகளுக்கு இப்படிப்பட்ட சாவு தான் ஏற்படும்.

முற்றும்.

06.2017
13

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1886 - பிரித்தானியக் கொலம்பியாவின் வான்கூவர் நகரத்தின் பெரும் பகுதி தீயினால் சேதமடைந்தது.
- 1917 - முதலாம் உலகப் போர்: லண்டன் நகர் மீது ஜேர்மனியப் போர் விமானங்கள் தாக்கியதில் 46 குழந்தைகள் உட்பட 162 பேர் கொல்லப்பட்டனர்.
- 1925 - சார்ல்ஸ் ஜென்கின்ஸ் படங்களையும் ஒலியையும் ஒரே நேரத்தில் அனுப்பும் முறையை முதன்முறையாக வெற்றிகரமாகப் பரிசோதித்தார். 10-நிமிட அசையும் படத்தை 5 மைல்கள் தூரத்திற்கு அனுப்பினார்.
- 1934 - ஹிட்லரும் முசோலினியும் வெனிசில் சந்தித்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பறக்கும் குண்டுகளை இங்கிலாந்து மீது வீசியது. மொத்தம் 11 குண்டுகளில் 4 குண்டுகள் இலக்குகளைத் தாக்கின.
- 1948 - ஈழத்தின் முதல் எழுத்தாளர் சங்கமான தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1952 - சோவியத்தின் மிக்-15 போர் விமானம் சுவீடனின் டிசி-3 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது.
- 1981 - லண்டனில் இடம்பெற்ற அணிவகுப்பு நிகழ்வு ஒன்றில் சிறுவன் ஒருவன் இரண்டாம் எலிசபெத் மகாராணியை நோக்கி வெற்றுத் துப்பாக்கிக் குண்டுகளைத் தீர்த்தான்.
- 1983 - பயனியர் 10 சூரியக் குடும்பத்தைத் தாண்டிய முதலாவது விண்கப்பல் ஆனது.
- 2007 - திருகோணமலையில் மேர்சி கோப்ஸ் என்னும் பன்னாட்டுத் தன்னார்வல அமைப்பின் பிலிப்பைன்ஸ் பணியாளர் ஒருவர் இலங்கைக் கடற்படையினரால் சுடப்பட்டார்.

### பிறப்புகள்

- 1870 - ஜூல்ஸ் போர்டெட், நோபல் பரிசு பெற்ற பெல்ஜிய மருத்துவர் (இ. 1961)
- 1905 - ஜேம்ஸ் இரத்தினம், இலங்கை வரலாற்றாளர் (இ. 1988)
- 1928 - ஜான் நாசு, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர் (இ. 2015)
- 1933 - யாழ்வாணன், ஈழத்து எழுத்தாளர் (இ. 1996)
- 1944 - பான் கி மூன், 8ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர்
- 1981 - கிறிஸ் எவன்ஸ், அமெரிக்க நடிகர்
- 1987 - ஜி. வி. பிரகாஷ்குமார், தமிழ்த் திரைப்பட இசையமைப்பாளர்

### இறப்புகள்

- 1969 - பீரகலாத் கேசவ் அத்ரே, இந்திய ஊடகவியலாளர், இயக்குநர் (பி. 1898)
- 2012 - மெஹ்தி அசன், பாகிஸ்தானிய கசல் பாடகர் (பி. 1927)

### சிறப்பு நாள்

- கண்டுபிடிப்பாளர் நாள் (அங்கேரி)
- மாவீரர் நாள் (ஈராக்கிய குர்திஸ்தான்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 90 | 120 | 160 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 110 | 90 | 120 | 120 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 400 | 300 | 450 | 500 |
| தக்காளி | 140 | 100 | 160 | 160 | 160 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 80 | 60 | 70 |
| கோவா | 140 | 140 | 200 | 160 | 180 | 160 |
| கரட் | 230 | 200 | 280 | 400 | 250 | 240-320 |
| பூசணி | 70 | 80 | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 50 | 100 | 160 | 140 | 80 |
| வாழைக்காய் | 60 | 40 | 80 | 80 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 350 | 200 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 | 120 | 100 | 220 |
| பாகற்காய் | 140 | 150 | 180 | 160 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 100 | 120 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | — | 160 | 140 | 120 |
| பயற்றங்காய் | 80 | 50 | 60 | 80 | 130 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 140 | 160 | 120 | 120 |
| பீற்றூட் | 120 | 100 | 160 | 160 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 150 | 320 | 280 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 80 | 150 | 160 | 180 | 200 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 240 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 120 | 120 | 120 | 150 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 120 | 80 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 65 | 50-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | — | — | 280 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | — | 300 | 280 | 250 | 300 |
| முள்ளங்கி | 80 | — | 80 | 120 | 90 | 120 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 100 | — | — | — | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோடியில் நின்றுகொண்டு காட்டும் பிடிவாதம் ஒருபோதும் நிலைக்காது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதலமைச்சரை எதிர்ப்பதுதான் நோக்கம் என்றால் எது செய்தாலும்...

தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவர்கள். இதில் ஒரு பகுதியினர் உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள், உறவுகளின் பிரிவுகள் என தாங்க முடியாத துன்பத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் சிலர் கிரந்தம் விடுவதைக் காணும் போது இதயம் வெடித்து விடும் போல் உள்ளது.

இன்று வடக்கு மாகாண சபை தனது முழுச் சிந்தனையையும் எதற்காகச் செலவிடுகிறதென்பது அனைவருக்கும் தெரிந்ததே.

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்தைக் குழப்ப நினைத்தவர்கள் மாகாண சபையின் செயலாக்கத்தை எங்கோ கொண்டு போய் விட்டனர்.

இதனை அவர்கள் தமக்கான வெற்றி என்று நினைக்கலாம். ஆனால் இது வெற்றி அன்று.

வடக்கின் முதலமைச்சர் மீது பழி சுமத்தவும் அவரின் காலத்தில் மாகாண சபை திறம்பட இயங்கவில்லை என்பதை காட்டுகின்ற நோக்கத்தோடும் வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்கள் சிலர் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர்.

ஒரு கனதியான முதலமைச்சர் வாய்க்கப் பெற்ற சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி எங்கள் மக்களுக்கு செய்யக்கூடிய நன்மைகளைச் செய்வோம் என்று நினைக்காமல்,

வடக்கு மாகாண சபையைக் குழப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எந்தளவு தூரம் தொந்தரவு கொடுக்க முடியுமோ அந்தளவுக்குத் தொந்தரவு கொடுப்பதை நோக்காகக் கொண்டவர்களின் கபடத்தனத்தால் தமிழ் மக்கள் எந்த நன்மைகளையும் பெற முடியாதவர்களாக உள்ளனர்.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல முடியும். இந்த உலகத்தில் எழுந்த அத்தனை காவியங்களும் இதிகாசங்களும் தர்மத்தைப் போதிப்பதற்கானவை. மகாபாரதமாயினும் சரி, இராமாயணமானாலும் சரி அனைத்தும் அதர்மம் செய்தவர்கள் தங்களால் அழிந்து போவதை எடுத்துக் காட்டுவதாகும்.

மகாபாரதம், இராமாயணம் என்றெல்லாம் நீண்ட தூரம் செல்ல வேண்டாம். அண்மையில் ஓகோ என்று வெளியாகிய பாகுபலி படத்தின் கருப்பொருளே அதர்மம் அழிவதும் தர்மம் நிலைப்பதும்தான்.

தன் மகன் பல்வாள்தேவன், மகிழ்மதியை ஆளவேண்டும் என்பதற்காக அவன் தந்தை செய்த நாசகாரங்கள், அக்கிரமங்கள் கொஞ்சமல்ல.

ஆனால் ஈற்றில் நடந்தது என்ன? மகனை மகனின் மகனை இழந்து மகேந்திர பாகுபலிக்கு நடந்த பட்டாபிசேகத்தில் பிங்கலத்தேவரே இராஜ முடியை எடுத்துக் கொடுக்கின்ற நிலைமையில் இருந்தாரே.

இதைப்படம் என்று யாரும் நினைத்து விடக் கூடாது. இதுவே இயற்கை. இதுவே இறைவன். இதை மறந்து எந்த வழியிலும் வடக்கின் முதலமைச்சருக்கு இடுக்கண் கொடுத்து அவரை செய்ய விடாமல் செய்கிறேன் பார் என்றால் நிச்சயம் அதற்கான தண்டனையை இயற்கை வழங்கியே தீரும். இது சர்வ நிச்சயம்.

# பிரதமரை தெரிவு செய்யும் புதிய யோசனை பரிந்துரை

பிரதமரை நேரடியாக தெரிவு செய்வதற்கான யோசனை, புதிய அரசியலமைப்பு வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

புதிய பிரதமரை நேரடியாக தெரிவு செய்து கொள்வதற்கு, பிரதமர் பதவிக்காக முன்கூட்டியே பெயர் குறிப்பிட்டு வேட்பு மனுத்தாக்கல் மற்றும் தற்போதைய முறையிலான, வெஸ்ட்மினிஸ்டர் முறைமையின் கீழ் தெரிவு செய்தல் ஆகிய யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அந்த யோசனைகள் தொடர்பில், அரசியலமைப்பு வழிப்படுத்தல் குழுவில் கலந்துரையாடப்படுவதாக கூறப்படுகிறது. பிரதமரை தெரிவு செய்தல் உள்ளிட்ட புதிய அரசியலமைப்பில், இற்றைப்படுத்தப்பட்ட வரைவுகள் புதிய பிரிவுடன் முன்வைக்கப்பட்டுள்ளது. இற்றைப்படுத்தப்பட்ட புதிய வரைவுகள் தொடர்பில், இரண்டு பிரதான கட்சிகளை தவிர ஏனைய சகல கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய, புதிய வரைவுகள் தொடர்பில் எவ்விதமான கருத்துகளையும் தெரிவிக்கவில்லை என்றும், ஏனைய கட்சிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளும் நோக்குடன் அவ்விரு கட்சிகளும் செயற்படுவதாகவும் அறியமுடிகின்றது. (இ-8)

# 400 பேரில் 40 பேருக்கே மாலி செல்வதற்கு அனுமதி

## இலங்கையின் கோரிக்கையை நிராகரித்த ஐ.நா.

மாலியில் ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட 400 இலங்கைப் படையினரில் 40 பேருக்கு மாத்திரமே ஐ.நா. அனுமதி அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனையவர்கள், இறுதிக்கட்டப்போரில் பங்கேற்றவர்கள் என்ற அடிப்படையில் ஐ.நாவினால் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

மாலியில் ஐ.நா அமைதிப் படையில் பணியாற்றுவதற்காக 212 இலங்கைப் படையினரை, கவச வாகனங்கள் மற்றும் ஆயுதங்களுடன் தருமாறு ஐ.நா கோரியிருந்தது.

இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 400 இலங்கைப் படையினரைக் கொண்ட பட்டியல் ஐ.நாவுக்கு அனுப்பப்பட்டது.

இதில் 40 பேரை மட்டுமே ஐ.நா அங்கீகரித்துள்ளது. ஏனையவர்கள் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் காலத்தில், இறுதிக்கட்டப் போரில் பங்கேற்றவர்கள் என்ற அடிப்படையில், நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

மாலியில் இலங்கைப் படையினருக்கான கட்டளை அதிகாரியாக பணியாற்றத் தெரிவு செய்யப்பட்ட கேணல சமந்த விக்கிரமசேனவின் பெயரும் ஐ.நாவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்கள், வாகனங்களுடன் இலங்கைப் படையினர் தர நியமனங்களுக்கேற்ப உள்ளனரா என்பதை, ஆய்வு செய்ய ஐ.நா குழுவொன்று எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# உலகம் வெப்பமடைதலே அதிக மழைக்குக் காரணம்!

## தகவல் வெளியிட்டது நாசா

(கலிபோர்னியா)

உலகம் வெப்பமடைவதன் காரணமாகவே இலங்கையில் அதிக மழை பெய்ய காரணம் என சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட வெப்ப வலய நாடுகளில் அண்மைக் காலமாக அதிகளவு மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பலர் உயிரிழந்துள்ளனர்.

உலகின் வெப்பநிலை மேலும் அதிகரிக்க கூடும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக 200க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

# கல்விக் கண்காட்சி இன்று

யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்று காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்வி அலுவலக அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. க. ஜெயபாலசிங்கம், கௌரவ விருந்தினராக க. பிரசாந்தன் (Unimax திருநெல்வேலி) ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# நல்லாட்சி அரசை கவிழ்க்க முடியாது

(களுத்துறை)

மக்கள் பலம் நல்லாட்சியுடன் இணைந்துள்ள நிலையில் எவர் நினைத்தாலும் தேசிய அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது.

மேலும் நான்கு ஆண்டு காலத்திற்கு தேசிய அரசாங்கத்தை முன்னெடுத்து செல்ல பிரதான கட்சிகள் பேச்சு வார்த்தை நடத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

**எமது பிரதேசத்தில் விலங்கு விசர்நோய் இல்லாது ஒழிப்போம்!**

வளர்ப்பு நாய்களுக்கு வருடம் ஒருமுறை விலங்கு விசர்நோய் தடை ஊசி (யுசுஏ) கொடுத்து எமது பிரதேசத்தில் விலங்கு விசர் நோயை இல்லாது செய்திடுவோம்.

நன்றியுள்ள நாய்களை நலமே பாதுகாப்போம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ பெரிய செயல்களைப் பெருந்தியாகத்தால் மட்டுமே செய்யமுடியும். உலகப் பொதுவான தன்மை என்னும் அந்த ஒரே கருத்திற்காக தேவையானால் அனைத்தையும் தியாகம் செய்யவேண்டும்.

❖ பிறருக்கு முக்தியை வழங்குவதற்காக நீ நரகத்திற்குச் செல். என்னுடைய சொந்த முக்தியென ஒன்றும் இங்கு இல்லை.

❖ பிறர்க்கென எல்லாவற்றையும் தியாகம் செய்பவனுக்கே முக்தி கிடைக்கும். எனது முக்தி என ஓயாது பல்லவி பாடி இரவும் பகலும் தம் மூளையை அலுக்கச் செய்யும் பிறரோ தற்கால உண்மை நன்மையையும் பிற்கால முன்னேற்றத்தையும் அழித்தவாறே அங்கும் இங்கும் அலைவர். பலமுறை இதை நான் கண்டதுண்டு.

❖ ஒன்றையும் கேளாதே. எதையும் பதிலாக விரும்பாதே. கொடுக்க வேண்டியிருப்பதைக் கொடு. அது உன்னையே திரும்பி அடையும். ஆனால் அதைப்பற்றி இப்போது நினைக்காதே. அது ஆயிரம் மடங்காகப் பெருகி உன்னிடம் திரும்பும். ஆனால் அதில் கவனத்தைச் செலுத்துதல் கூடாது. கொடுக்கும் சக்தி உன்னிடம் உள்ளது. ஆதலால் கொடு. அதோடு நின்று விடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீலங்களின் கிரிக்கெட் போர்

# யூனியன் கல்லூரியை வீழ்த்தி கிண்ணத்தை சுவீகரித்தது மானிப்பாய் இந்துக் கல்லூரி



தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையில் முதல் முறையாக இடம்பெற்ற நீலங்களின் சமரில் சிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்திய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் 84 ஓட்டங்களினால் அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

இரண்டு நாட்களாக இடம் பெற்ற இந்தப் போட்டி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதா னத்தில் வெகு விமர்சையான ஆரம்ப நிகழ்வுகளுடன் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இடம்பெற்ற போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் தலைவர் சுஜீபன் முதலில் துடுப்பாட்டத்தினை தெரிவு செய்தார்.

அதன்படி களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியின் முன் வரிசை வீரர்கள் சிறந்த முறையில் பிரகாசிக்கத் தவறினர். இதன் காரணமாக ஒரு கட்டத்தில் 44 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டு களை இழந்து இக்கட்டான நிலை க்கு அவ்வணி தள்ளப்பட்டது.

எனினும் அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அனோசன் மற்றும் நிரோஜன் ஆகியோர் அணியை சரிவில் இருந்து மீட்பதற்காக சிறந்த முறையில்தமக்கிடையே 89 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர். அரைச் சதம் கடந்த அனோசன் வெறும் 32 பந்துகளை எதிர் கொண்டு, 9 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 58 ஓட்டங்களை குவித்தார். நிரோஜன் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

அதன் பின்னர் பின் வரிசை வீரராக வந்த கனிஷ்டன் மிகவும் அபாரமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை விரைவாக உயர்த்தினார். எதிரணியின் பந்து வீச்சாளர்களுக்கு கடும் சவாலாக இருந்த இவர், 78 பந்துகளை எதிர் கொண்டு 10 பவுண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றார்.

இவருக்கு பங்களிப்பு வழங்கிய ஏனைய பின்வரிசை வீரர்களான சுலக்ஷன் 23 ஓட்டங்களையும், துசிந்தன் 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

எனவே, அவ்வணி தமது முதல் இன்னிங்சிற்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றுகொண்டது.

பந்து வீச்சில் யூனியன் கல்லூரி சார்பாக வகீசன் 56 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், மதீசன் 58 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் அதிக பட்சமாகக் கைப்பற்றினர்.

பின்னர் தமது முதல் இன்னிங்சை ஆரம்பித்த யூனியன் கல்லூரி வீரர்கள், மானிப்பாய் தரப்பினரின் பந்து வீச்சை எதிர் கொள்ள முடியாமல் திணறினர். அவ் வணியின் முன்வரிசை வீரர் கள் உட்பட அனைத்து வீரர்களும் மிகக் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து செல்ல, தனி ஒரு வராக இருந்து போராடிய திவ்ய னாத் 36 ஓட்டங்களை அதிக பட்ச மாகப் பெற்றார்.

இதன் காரணமாக 31 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த யூனியன் கல்லூரி 113 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. பந்து வீச்சைப் பொறுத்தவரை, துடுப்பாட்டத்தில் சதம் கடந்த கனிஷ்டன் 38 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுகளையும், அணித் தலைவர் சுஜீபன் 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.





இதன் காரணமாக யூனியன் கல்லூரி பலோவ் ஒன் முறையில் மீண்டும் துடுப்பாட வேண்டிய நிலைக்கு உள்ளாகியது. இரண்டாவது இன்னிங்சிலும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பந்து வீச்சு அபாரமாக இருந்தமையினால் யூனியன் கல்லூரி வீரர்களால் ஓட்டங்களைப் பெற முடியாமல் போனது.

அவ்வணியின் முன் வரிசை வீரர்கள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரங்கு திரும்ப, லவன்ராஜ் மாத்திரம் தனித்து நின்று நீண்ட நேரம் களத்தில் இருந்து அரைச் சதம் கடந்தார். 66 பந்துகளை எதிர்கொண்ட அவர் நிதானமாக ஆடி 11 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் காரணமாக யூனியன் கல்லூரி வீரர்கள் 140 ஓட்டங்களை மாத்திரமே இரண்டாவது இன்னிங்சுக்காகப் பெற்று, இன்னிங்ஸ் மற்றும் 84 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவினர்.

பந்து வீச்சில் துல்லியமாக செயற்பட்ட விக்னேஷ்வரன் 46 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைப் பதம் பார்த்து இரண்டாவது இன்னிங்சில் அணிக்கு பெரிதும் பங்களிப்புச் செய்தார்.

போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சகலதுறை வீரருக்கான விருதை மானிப்பாய் இந்துக்கல்லூரி யினை சேர்ந்த கனிஸ்ரன், சிறந்த பந்து வீச்சாளராக மானிப்பாய் இந்துக் கல்லூரியினை சேர்ந்த விக்னேஸ்வரன், ஆட்டநாயகனுக்கான விருதை மானிப்பாய் இந்துக்கல்லூரியினை சேர்ந்த அனோசன், சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதை யூனியன் கெல்லூரியினை சேர்ந்ததரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (க)

# வடக்கின் வல்லரசனானது கஜபாகு இராணுவ அணி





சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அவுஸ்திரேலியா வாழ் கார்த்திகேசு குனரத்தினம் ஆதரவிலான வடக்கின் வல்லரசன் கரப்பந்தாட்ட தொடரில் வடக்கின்வல்லரசனாக முடிசூடியது கஜபாகு இராணுவ அணி.

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞனை 3:1 ரீதியில் வீழ்த்தி சம்பியனாகியது கஜபாகு இராணுவ அணி. (க)

# நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்த சுழல் கிண்ண உதைபந்துப் போட்டி





LONDON FIRST FRESH FOOD LTD இன் அனுசரணையுடன் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார் த்த மாக 3ஆவது வருடம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் இறுதி யாட்டத்தில் நேதாஜி அணியினை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இப்போட்டியில் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் எந்தவித கோல்களும்பதிவு செய்யப்படவில்லை. எனவே வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட தண்ட உதையில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இளங்கதிர் அணியின் பிரசாந், இச் சுற்றுத்தொடரின் தொடராட்ட நாயகனாக அதே அணியைச்சேர்ந்த மதுசாந் மற்றும் சிறந்த கோல்காப்பாளராக நேதாஜி அணியின் ஜிவிந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் அதற்கு முன்னதாக இடம்பெற்ற மென்பந்தாட்ட இறுதிப போட்டியில் தீருவில் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட இளங்கதிர் அணியானது 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக தீருவில் அணியைச்சேர்ந்த மயூரனும் தொடராட்டநாயகனாக அதே அணி யைச்சேர்ந்த பிரதீப்பும் தெரிவு செய்யப்பட்டனர் .

சுழல்கிண்ண உதைபந்தாட்டத்தை பொறுத்தவரையில் வல்லைவக்குள் எந்த அணியும் தொடர்ச்சியாக மூன்று முறை கைப்பற்றியதில்லை. இளங்கதிர் அணியானது தொடர்ச்சியாக மூன்று முறை கைப்பற்றி வரலாற்றுச்சாதனை படைத்துள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்தது என்ன?...

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, பிற்பகல் நான்கு மணியளவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களையும், சிவில் சமூக பிரதிநிதிகளையும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார். இந்த சந்திப்பு தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக சட்டபீட தலைவரும் சட்டத்தரணியுமான குமார வடிவேல் குருபரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எட்டு மாவட்டங்களிலிருந்தும் இன்றைய (நேற்று) சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். அதில் சிவில் சமூகம் சார்பாக நாங்களும் கலந்து கொண்டிருந்தோம். இதில் அவர்களால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட மகஜர் பிரதானமானது. அதில் மூன்று கோரிக்கைகள் மிகவும் பிரதானமானது. 2008, 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு வரும்போது இராணுவத்தினரிடம் சரணடையுமாறு கூறி தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியல் இராணுவத்திடம் இருக்க வேண்டும்.

அந்த பட்டியல் முழுமையாக வெளியிடப்பட வேண்டும். இரண்டாவது புனர்வாழ்வு என்ற பெயரிலும் தடுப்பு முகாம் என்ற பெயரிலும் 2009 இற்கு பின்னர் வடக்கு கிழக்கு உட்பட பல இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாம் என [illegible]ப்படும் நிலையில், 2009 இற்கு பின்னர் இற்றை வரை எங்கு இரகசிய தடுப்பு முகாம்கள் வைக்கப்பட்டிருந்தது? யார் யாரை ஆண்டு வாரியாக தடுத்து வைத்திருந்தீர்கள் என்ற பட்டியல் வெளியிடப்பட வேண்டும்.

அடுத்து மூன்றாவது 1983 இலிருந்து இலங்கையின் தடுப்பு முகாம்கள், சித்திரவதை முகாம்கள், இரகசிய தடுப்பு முகாம்கள் போன்ற இடங்களில் அவர்கள் எங்கெங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவலை மீளவும் ஆண்டு வாரியாக வெளியிட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கோரிக்கைகளை ஜனாதிபதியே தனது வாயால் வாசித்து காட்டியிருந்தார். இதன்போது சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜெயசுந்தர, அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோர் இருந்தார்கள்.

நாளைய தினம் (இன்று) தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டத்தில் இவை தொடர்பில் ஆராயுமாறு உத்தரவிடுவதாக கூறினார். தொடர்ச்சியாக இதனை அடுத்து வெளியிடப்படவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர்ப்பட்டியலை எங்கே பெற்றுக்கொள்ளலாம் என ஒருவர் கேட்டதனை தொடர்ந்து இந்த பட்டியல் எப்போது வரும் என தன்னால் கூற முடியாது எனவும்,

எனினும் அது தொடர்பில் ஆராயுமாறு முப்படையினருக்கும் உத்தரவிடுவதாக கூறியுள்ளார். இது பிரதானமாகும். 2009 இற்கு பின்னரும் காணாமல்போன தமது மகன்மார், உறவினர்கள் எங்கே இருக்கின்றனர் என்ற தகவல் உள்ளது எனவும் சில தாய்மார்கள் கூறினார்கள். இது தொடர்பில் குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்வதாக ஜனாதிபதி கூறினார். எனினும் மீண்டும் ஒரு குழு தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு நம்பிக்கையில்லை. ஆனால் ஒன்றை நாங்கள் மிக கவனமாக பார்க்க வேண்டும்,

நாளைய தினம் (இன்று) பகிரங்கமாக ஜனாதிபதி தேசிய பாதுகாப்பு கூட்டத்தில் கட்டளையிடுவதாக உறுதியளித்திருந்தார். மற்றது சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியல், தடுப்பு முகாம்களில் இருந்தவர்களின் பெயர்ப்பட்டியல், அனைத்தையும் வெளியிடுவதாகதான் கட்டளையிடுவதாக உறுதியளித்துள்ளார். அந்த கட்டளை நாளைய தினம் (இன்று) வழங்கப்பட வேண்டும். தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். அதனை நாங்கள் கவனித்து கொண்டிருப்போம் என ஊடகவியலாளர்களிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சார்பில் சட்டத்தரணி குருபரன் தகவல் தெரிவித்திருந்தார். (செ-4)

# 9 எதிரிகள் மீதும்...

ணியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நேற்றைய தினம் காலை 10 மணிக்கு யாழ்.மேல் நீதிமன்றில் ஆரம்பமாகியது.

வழக்கு தொடுநர் தரப்பில் இருந்து வழக்கை நெறிப்படுத்துவதற்காக பிரதி மன்றாதிபதி பி.குமாரரட்ண மற்றும் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஸான் ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

முதலாம் எதிரியான பூ.இந்திரகுமார், 2 ஆம் எதிரியான பூ.ஜெயக்குமார், 3ஆம் எதிரியான பூ.தவக்குமார், 4ஆம் எதிரியான ம.சசிதரன், 5ஆம் எதிரியான நி.சந்திரகாந்தன், 6ஆம் எதிரியான சி.துசாந்தன், 7ஆம் எதிரியான ப.குகநாதன், 8ஆம் எதிரியான ஜெ.கோகிலன், 9ஆம் எதிரியான ம.சசிகுமார் ஆகியோர மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

5ஆவது எதிரி சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதி ஆஜரானார். ஏனைய எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் எவரும் மன்றில் ஆஜராகவில்லை. தமக்கு சட்டத்தரணிகள் எவரும் ஆஜராவதற்கு தயாராக இல்லை என தெரிவித்த எதிரிகள், தமக்கு அரச தரப்பால் சட்டத்தரணிகளை நியமிக்குமாறு மன்றில் கோரியிருந்தனர். இதனையடுத்து, குறித்த விடயம் தொடர்பில் தீர்மானத்தினை எடுப்பதற்கு 15 நிமிடங்கள் வழக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில் 4ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் எதிரிகள் சார்பாக அரச தரப்பினால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி சி.கேதீஸ்வரனும் முதலாம், 2ஆம், 3ஆம் 5ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆ.ரகுபதியும் ஆஜராகியதுடன் 1 தொடக்கம் 9 வரையான எதிரிகளுக்கு மன்றால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி வி.ஜெயந்தன் ஆஜரானர். பாதிக்கப்பட்ட சாட்சிகளின் நலன் கருதி சட்டத்தரணி கே.ரஞ்சித்குமார் ஆஜரானார்.

வழக்கை ஆரம்பித்த பிரதி மன்றாதிபதி, சட்டமா அதிபரால் மேல் நீதிமன்ற பதிவாளருக்கு குறித்த வழக்கு தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களை மன்றில் கையளித்திருந்தார். அதாவது வழக்கு தொடர்பான தகவல்கள் அடங்கிய அத்தாட்சிப்பத்திரம், குற்றச்சாட்டு பத்திரம், வழக்குடன் தொடர்புடைய சான்றுப்பொருட்கள், விசாரணை அறிக்கைகள் போன்றவை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

குற்றப்பத்திரம் ஒவ்வொரு எதிரிகளுக்கு வழங்கப்பட்டதுடன் ஒவ்வாருவருக்கும் தனித்தனியே குற்றச்சாட்டு பத்திரம் மன்றில் வாசித்து காண்பிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி புங்குடுதீவு பகுதியில் சிவலோகநாதன் வித்தியா என்ற பெண்ணை வன்புணர்வுக்குள்ளாக்கும் நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியமை, வன்புணர்வு நோக்கத்துக்காக கடத்தியமை, கூட்டாக சேர்ந்து வன்புணர்வு செய்தமை, கூட்டாக சேர்ந்து வன்புணர்வு செய்து கொலை செய்தமை போன்ற பிரதான குற்றங்களும் மேற்குறித்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட 41 குற்றச்சாட்டுக்கள் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளதாக வாசித்து காண்பிக்கப்பட்டது.

இதில் 9ஆம், 4ஆம் எதிரிகளுக்கு எதிராக பிரதான குற்றச்சாட்டாக, வித்தியாவை வன்புணர்வு நோக்கத்துக்காக கடத்துவதற்கு சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. முதலாம், 2ஆம், 3ஆம், 5ஆம் 6ஆம் எதிரிகளுக்கு எதிராக மேற்குறித்த நான்கு பிரதான குற்றச்சாட்டுக்களும் சாட்டப்பட்டுள்ளன, 7ஆம் 8ஆம் எதிரிகளுக்கு எதிராக மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு உடந்தையா இருந்துள்ளதாக பிரதான குற்றச்சாட்டுக்களாக முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு தாம் சுத்தவாளிகள் என 9 எதிரிகளும் மன்றுரை செய்திருந்தனர்.

எதிரிகளுடைய வாக்குமூலங்களில் பெரும்பாலானவை சிங்கள மொழியில் இருப்பதனால் பேசும் மொழி தமிழாக இருக்கும் காரணத்தினால் தமிழில் மொழிபெயர்த்து அவற்றை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளரிடம் ஒப்படைக்குமாறு பிரதிமன்றாதிபதிக்கு நீதிபதிகள் பணிப்புரை விடுத்தனர்.

இதனையடுத்து எதிர்வரும் 28,29,30 மற்றும் யூலை மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் தொடர் விளக்கம் இடம்பெறும் என நீதிபதிகளால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி குறித்த வழக்கின் சாட்சிகளான 1 தொடக்கம் 37 வரையான சாட்சிகளையும் மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இதில் அரச தரப்பு சாட்சியாக மாறிய உ.சுரேஸ்கரன் சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட நிபந்தனைக்குரிய மன்னிப்பில் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபடியால் அவரை எதிர்வரும் 28ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

குறித்த எதிரிகள் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் தொடர் விசாரணை இடம்பெறவுள்ள காரணத்தால் அவர்களை சந்தித்து வழக்கு தொடர்பில் விளக்கம் பெறுவதற்கு இலகுவாக அவர்களை யாழ் சிறைச்சாலைக்கு மாற்றுமாறு எதிரிகள் தரப்பு சட்டத்தரணியால் மன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அது தொடர்பில் பரிசீலிப்பதாக தெரிவித்த மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினர் மேற்குறித்த எதிரிகள் 9 பேரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை வழக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டனர்.

யாழ்.மேல் நீதிமன்றில் தற்போதைய மன்றில் இடப்பற்றாக்குறை காணப்படுவதால் இவ்வழக்கின் அடுத்த விசாரணை நடவடிக்கைகள் யாழ்.மேல் நீதிமன்றின் 3ஆம் மாடியில் இடம்பெறும் எனவும் நீதிபதிகள் அறிவித்துள்ளனர். (செ-9)

# தமிழரசுக் கட்சி...

அறிக்கையின் தொடர் நடவடிக்கை குறித்து முதலமைச்சரின் முடிவுக்கு கட்டுப்படுவது என தமிழரசு கட்சியின் தலைவர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுடனான அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கையை சமர்ப்பிதற்கான விசேட அமர்வு நாளைய தினம் கூடுவதற்கு முன்னர் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் நேற்று திடீர் சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பு தமிழரசு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றதோடு, தமிழரசு கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். வடக்கு அமைச்சர்கள் மீதான குற்றச்சாடுக்கள் தொடர்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதன் அறிக்கை தற்போது வெளிவந்துள்ள நிலையில்,

அதில் இரண்டு அமைச்சர்கள் முறைகேட்டில் ஈடுபட்டவர்களாக கூறப்பட்டுள்ளது. இதன்படி அவர்கள் இருவரையும் பதவி நீக்கம் செய்து புதிய அமைச்சரவை உருவாக்கப்பட வேண்டும் என ரெலோ தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது. எனினும் புளொட், தமிழரசு கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியன தமது கட்சி நிலைப்பாடுகளை தெரிவிக்காத நிலையில், தமிழரசு கட்சி கூடி ஆராய்ந்துள்ளது. அதில் குறித்த விடயம் தொடர்பில் தலையிடுவது இல்லை எனவும், முதலமைச்சர் மேற்கொள்ளும் தீர்மானமே இறுதி தீர்மானம் எனவும் தமது நிலைப்பாட்டை முன்னர் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் மாவை சேனாதிராசாவிடம் நேரில் சென்ற தமிழரசு கட்சியை சேர்ந்த இரு அமைச்சர்களும் இந்த விசாரணை அறிக்கையால் தாம் மன உளைச்சல்களை எதிர் நோக்கியிருப்பதாகவும், இந்த விசாரணை அறிக்கை முறையற்றது. எனவே இது தொடர்பில் கட்சி தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய பின்பு ஒரு முடிவொன்றை எடுக்கவுள்ளதாகவும் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார். (செ-4)

# விக்னேஸ்வரனை...

டிவரும் குற்றச்சாட்டுக்காக பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பால் தெரிவிக்கப்படும் தகவல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கோத்தபாய, இனவாதத்தை பரப்புகின்ற யாராக இருந்தாலும் கைது செய்தால் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தென்பகுதிகளில் ஏற்பட்டிருந்த வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நலன்வேண்டி அன்னதான நிகழ்வொன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நுகேகொடையில் உள்ள இல்லத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் அவரின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை இனவாதத்தை தூண்டிவரும் குற்றச்சாட்டில் கைதுசெய்யப் போவதாக பொலிஸார் அறிவித்துள்ளது குறித்து ஊடகவியலாளர்கள் வினவினர்.

இதற்கு பதிலளித்த அவர், யாழ்ப்பாணத்திற்குச் சென்றால் இனவாதக் குழுவினரை பிடித்துக்கொள்ள முடியும். அங்குதானே அனைவரும் உள்ளனர். இனவாதப் பிரிவினர் தெற்கில் இருக்கின்றனர் என யார் கூறியிருக்கின்றனர்? மிகப்பெரிய இனவாதியான விக்னேஸ்வரன் அங்கு இருக்கின்றார். அவரே இனவாதப் பேச்சுக்களைப் பேசுகிறார். அவரைப் பிடிப்பதாக யாராவது கூறியிருக்கிறார்களா? என்றார்.

இதேவேளை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டிவரும் வரும் பொது பல சேனா அமைப்புடன் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு தொடர்பிருப்பதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கருத்து வெளியிட்டார்.

பொது பல சேனாவா அல்லது வேறு யாரும் செய்தார்களா என்பதை கைது செய்துதான் பார்க்க வேண்டும். சட்டத்தை அமுல்படுத்துவது நாங்கள் அல்ல என்று குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திலுள்ள அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், பொலிஸாருமே சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டி வருவதாக குற்றச்சாட்டினார்.

சிலர் இனவாதத்தை பரப்புகின்றனர். சிலரால் கூறுகின்ற சில விடயங்களை ஆராய்ந்து பார்க்காமல் பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர். வர்த்தக நிலையம் மின் ஒழுக்கு காரணமாகவே தீ ஏற்பட்டதாக உரிமையாளர்களும், பொது மக்களும் கூறுகின்றனர். ஆனால் இது சிங்கள இனவாதிகளால் நடத்தப்பட்டதாக பொலிஸாரும், சில அமைச்சர்களும் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக மோதல்களும், இனவாதமுமே தலைதூக்கும். மோதல்கள் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்வது அமைச்சர்களதும், பொலிஸாரதும் கடமை. எந்த இனங்களுக்கு எதிராகவும் குரோதத்தை ஏற்படுத்தக்கூடாது. இதனை கட்டுப்படுத்தவே அரசாங்கம் உள்ளது. பொறுப்பு வாய்ந்த அமைச்சரவை அமைச்சர்களே இவ்வாறு கூறினால் பிழையான குற்றச்சாட்டுக்களை சுமத்தினால் அது பயங்கரமாகும். இது குறித்து அமைச்சர்களும் பொலிஸாரும் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும என்றார். (செ-11)

# 6 நாடுகளில்...

டத்திற்கு வலுசேர்க்கும் முகமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் புலம்பெயர் தமிழர்களை ஒருங்கிணைத்து பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஆகிய நாடுகளின் தலைநகர்களில் நேற்றைய தினம் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தாயகத்தில் இடம்பெற்று வரும் தமிழர்களுடைய உரிமைக்கான போராட்டத்தினை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தும் வகையில் தொடர் நடவடிக்கைகள் நாடுகடந்த தமிழீழ அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் தற்போது முக்கிய பிரச்சினையாகவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விபரங்களை வெளியிடக்கோரியும் அவர்களை வெளிப்படுத்தக்கோரியும் தாயக உறவுகளால் மேற்கொள்ளும் போராட்டத்தை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்தும் வகையிலும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் புலம்பெயர் தமிழர்களை ஒருங்கிணைத்து மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் புலம்பெயர் தமிழர்கள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள், உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன் அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களில் மகஜர்களையும் கையளித்திருந்தனர். (செ-9)

# இளைஞன் சடல...

இதில் இல.17 மண்பிட்டி, நாவாந்துறை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த அன்ரன் பற்றிக்ஸ் றொக்ஷன் (வயது 27) எனும் இளைஞனே வீட்டின் அறையினுள் தூக்கில் தொங்கி காணப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

காலையில் வேலைக்குச் செல்லும் பொருட்டு குறித்த இளைஞனை நித்திரையிலிருந்து எழுப்ப சென்றவேளையிலேயே இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

இவர் மோட்டார் சைக்கிள் நிறுவனம் ஒன்றில் திருத்துநராக பணி புரிந்து வருபவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-3,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை மக்களிடம் வழங்க நடவடி...



தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

யாழ்.மாவட்டத்திற்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்.மாவட்ட செயலகத்தில் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

இதன் பின்பு மேற்படி கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் குறிப்பிடுகையில்.

நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டு 2 வருடங்கள் நிறைவடைந்திருக்கும் நிலையில். படையினரின்வசம் உள்ள காணிகள் மக்களிடம் மீள வழங்கப்படவேண்டும் என கேட்டிருக்கிறோம். மேலும் பலாலி விமான நிலையத்தை சூழ உள்ள 5 வீதிகள் தொடர்ந்தும் படையினர்வசமே உள்ளது.

இதனால் விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கும் கூட மக்கள் செல்ல இயலாத நிலை உருவாகியுள்ளது என்பதை கூறியுள்ளோம். இதே போல் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இரணைதீவு மக்களுடைய மீள்குடியேற்ற பிரச்சினை தொடர்பாக சுட்டிக் காட்டியிருந்தார்.

இந்நிலையில் படையினரின்வசம் உள்ள மக்களுடைய காணிகள் தொடர்பான தகவல்களை பெற்று அந்த காணிகளை மக்களிடம் மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என நாளை (இன்று) நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் வலியுறுத்துவேன் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

மேலும் சுகாதார தொண்டர்களுடைய பிரச்சினைகள், வேலையற்ற பட்டதாரிகளுடைய பிரச்சினைகள் மற்றும் யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தி தேவைகளுக்கான மணலை பெற்று கொள்வதற்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடியுள்ளோம்.

இது தவிர வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களுடைய பிரச்சினைகள், செய்யப்பட வேண்டிய அபிவிருத்திகள் என்பவற்றை சுட்டிக்காட்டி பேசியிருந்ததையும் மாவை சேனாதிராசா தனது கருத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-4)


விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



Accounting Group Class - மல்லாகம்

A/L - 2018
M.C.Q Class
(wed 4.30 - 6.00pm)
20 பேர் மட்டும்

திரு.R.வின்சன்
077 694 7162


## கைதான அறுவ...

அறநெறி வகுப்புக்கு சென்றிருந்த 6 - 8 வயதுடைய மூன்று மாணவிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அந்த பள்ளிக்கூட கட்டுமான தொழிலாளர்கள் உள்ளிட்ட அயல் பிரதேச நபர்கள் 6 பேர் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று திங்கட்கிழமை மூதூர் மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதிவான் ஐ.எம்.றிஸ்வான் முன்னிலையில் 6 சந்தேக நபர்களும் மீண்டும் முன்னிலைபடுத்தப்பட்ட வேளை நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

சந்தேக நபர்களை தலா 10 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் ஒரு சந்தேக நபருக்கு 4 பேர் பிணையாளிகளாக ஒப்பமிட வேண்டும். மாதத்தில் கடைசி ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக வேண்டும் போன்ற நிபந்தனைகள் நீதிமன்றத்தின் பிணை உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களில் 6-ஆவது நபராக முன்னிலைப்படுத்தப்பட்ட நபர் வெளிநாடொன்றிலிருந்து நாடு திரும்பியவர் என்ற ரீதியில் கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு அந் நபருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் அடுத்த மாதம் 10ஆம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மன்றில் மீண்டும் ஆஜராக வேண்டும் என சந்தேக நபர்களுக்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவத்தை கண்டித்தும் பாதிக்கப்பட்ட மாணவிகளுக்கு நீதி கோரி கிழக்கு மாகாணத்தில் ஒரு வார காலமாக மாணவர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தன .

நேற்று திங்கட்கிழமை கிழக்கு பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாக மாணவர்கள் சாலையோரத்தில் மனித சங்கிலி போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... அவர்களது அச்சகத்தில் 13.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.